உதயன்

சுடர் 30 | கதிர் 316 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 21, வியாழக்கிழமை 08.10.2015

### ரயில் மோதி முதியவர் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 8
சர்வதேச முதியோர் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு இறுதிக் கட்டத்தை அடையும் நிலையில், யாழ்ப்பாணத்தில் முதியவர் ஒருவர் ரயில் முன்பாகப் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப் பக்.24

# கூட்டாக வன்புணர்ந்த நான்கு படையினருக்கு 25 வருட கடூழிய சிறை

## விசுவமடு பாலியல் துஷ்பிரயோக வழக்கில் யாழ்.மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர். 8
குடும்பப் பெண் ஒருவரை வீட்டிலிருந்து கடத்திச் சென்று கூட்டு வன்புணர்வுக்குட்படுத்தியதோடு அதே வீட்டிலிருந்து மற்றொரு பெண்ணைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றத்துக்காக 4 இராணுவச் சிப்பாய்களுக்கு 25 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்.மேல்நீதிமன்று.

நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. கிளிநொச்சி விசுவமடுவில் 2010 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளை ஜுன் 6 ஆம் திகதி இந்தக் குற்றச் சம்பவம் இடம்பெற்றது.

விசுவமடு இராணுவ முகாமில் கடமையாற்றிய பண்டித கெதர சாந்த சுபசிங்க, பத்திரண பண்டார நாயக்க பிரியந்த குமார, தெல்கொல்லகே தனுஸ்க புஸ்பகுமார, கொப்பேராலகே கெதர தனுஸ்க பிரியலால் ரத்நாயக்க ஆகியோருக்கு எதிராக 5 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கில் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கப்பட்டது. எனினும் நான்காவது எதிரி தலைமறைவாகிவிட்டார். பக்.24

### புலமைப் பரிசில் பெறுபேறு; வடக்கில் யாழ். முன்னிலை

யாழ்ப்பாணம், ஒக். 8
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகிய நிலையில், பெறுபேறுகளின் அடிப்படையில் வடக்கில் யாழ். மாவட்டம் முதலிடத்திலுள்ளது. யாழ். ஜோண் பொஸ்கோ வித்தியாலயமாணவன் சோதிநாதன் வசீகரன் 192 புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்து மாவட்டத்தில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் 196 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் மூவர் முதலிடம் பெற்றுள்ளனர். கம்பளை கங்க சிறிபுர வித்தியாலய மாணவி டபிள்யூ.ஐ.எஸ். கவிந்யா பக்.24

### அயராத படிப்பினால் வெற்றி

யாழில் முதலிடம் பெற்ற வசீகரன்



யாழ்ப்பாணம், ஒக். 8
அயராது படித்ததன் மூலமே சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்ததாகத் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகளைப் பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனான சோதிநாதன் வசீகரன் பக்.24

### மக்கள் சேவையே இலக்கு

கிளிநொச்சியில் முதலிடம் பெற்ற லக்சிகா



கிளிநொச்சி, ஒக். 8
வைத்தியராக வந்து எனது கிராம மக்களுக்குச் சேவையாற்றுவதே நோக்கம் என்று தெரிவித்தார் கிளிநொச்சி தர்மபுரம் இல.1 பாடசாலை மாணவி சிவரஞ்சன் லக்சிகா.
கிளிநொச்சியைச் சேர்ந்த பக்.24

### விடாமுயற்சி வெற்றி தரும்

முல்லைத்தீவு மாணவி தக்சாளினி



முல்லைத்தீவு, ஒக். 8
பொறியியலாளராக வேண்டும் என்ற எதிர்கால இலக்குடனேயே நான் உழைத்துக் கொண்டிருக்கின்றேன். என்றும் விடா முயற்சியுடன் படித்தால் வெற்றியடைவது உறுதி எனத் தெரிவித்தார் முல்லைத்தீவு பக்.24

### விரிவுரையாளராவதே இலட்சியம்

இறம்பைக்குளம் மாணவி ஹரிணி



வவுனியா. ஒக். 8
பல்கலைக்கழகத்தின் சிறந்த விரிவுரையாளராக வந்து பல மாணவர்களுக்குக் கற்பிப்பதே எனது எதிர்கால இலட்சியம். இதற்காகவே என்னைத் தயார்ப்படுத்துகின்றேன் என்று தெரிவித்தார் வவுனியா இறம்பைக்குளம் பக்.24

### வறுமையானோருக்கு உதவுவேன்

மன்னார் சவேரியர் கல்லூரி மாணவன் அனோன்



மன்னார்.ஒக்.8
வைத்தியராகி வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண்டும். இது தான் எனது இலட்சியம் என்று தெரிவித் தார் மன்னார் புனித சவேரியர் ஆண்கள் கல்லூரி மாணவன் ஜீறைறஸ் அனோன்.
தரம் 5 புலமைப்பரிசில் பக்.24

### பாடசாலைக் கல்வியே உதவியது

மன்னார் சவேரியர் மாணவன் கிரேஸ்மன்



மன்னார்.ஒக்.8
ரியூசனுக்குச் செல்லாது பாடசாலைக் கல்வியில் மட்டும் நாட்டம் கொண்டதனாலும், பாடசாலையில் ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தலினாலுமே நான் மாவட்டத்தில் முதல் நிலையை அடைந்தேன். பக்.24

### மூதாட்டிக்கு மயக்க மருந்து கொடுத்து நகைக் கொள்ளை

கிளிநொச்சி, ஒக்.8
கிளிநொச்சியில் இருந்து உருத்திரபுரம் நோக்கிச் சென்ற பஸ்ஸில் பயணித்த மூதாட்டிக்கு மென்பானத்தில் மயக்க மருந்து கலந்துகொடுத்துவிட்டு அவரிடம் இருந்த தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.
இந்தச் சம்பவம் நேற்றுப் புதன் பக்.22

### சம்பூர் அனல்மின் நிலையத் திட்டம் பவுல் பொயின்ற் பகுதிக்கு மாற்றம்

புதுடில்லி, ஒக்.8
திருகோணமலை, சம்பூரில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின் நிலையத்தை, திருகோணமலை துறைமுக நுழைவாயில் பகுதியான பவுல் பொயின்ற் பகுதிக்கு மாற்றுமாறு இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.
இந்தக் கோரிக்கைக்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதுடன், மீண்டும் புதிய சாத்திய வள பக்.22

### இலங்கைக்கு ஜப்பான் அரசு அபிவிருத்தி, கடல்சார் உதவி

இரு நாட்டுப் பிரதமர்களும் இணக்கம்



ரோக்கியோ, ஒக்.8
இலங்கையின் அபிவிருத்திக்கு உதவவும், கடல்சார் கண்காணிப்பு ஆற்றலை வலுப்படுத்தவும், உதவி வழங்குவதாக ஜப்பான் உறுதியளித்துள்ளது.
ஜப்பானுக்கு ஐந்து நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜப்பானியப்பிரதமர் சின்சோ அபேக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடந்த இரண்டாவது சந்திப்பின் போது இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.
இந்தப் பேச்சுக்களை அடுத்து பக்.24

### மன்னார் புதைகுழி, கிணறு தனித் தனியே விசாரணை

யாழ்ப்பாணம், ஒக். 8
மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி எனச் சந்தேகிக்கும் இடத்திலுள்ள கிணற்றை ஆய்வு செய்வதை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைப்பதாகக் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் மன்னார் நீதிமன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளனர். அதனால் கிணறு பற்றிய ஆய்வு விசாரணை ஒரு பிரிவாகவும், புதைகுழி பற்றிய ஆய்வு விசா ரணை மற்றொரு பிரிவாகவும் முன்னெடுக்கப்படவுள்ளன.
கிணற்றை அகழ்வு செய்யும் பணிகளைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கையாள்வதில்லை என்றும், எனவே அந்தஆய்வை மன்னார் பக்.22

### 41360 பேர் யாழ். வாக்காளர் பட்டியலில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின், நடப்பு ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலில் 41 ஆயிரத்து 360 பேர் இணைக்கப்பட்டுள்ள அதே வேளையில், 28 ஆயிரத்து 252 பேர் நீக்கப்பட்டுள்ளனர்.
2015 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மே மாதம் 15 ஆம் திகதியிலிருந்து இடம்பெற்று வருகின்றன. தற்போது, தயாரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பெயர்ப் பட்டியலைக் காட்சிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இதன் பிரகாரம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல், ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 2015 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் புதிதாக இணைக்கப்பட்டோர் மற்றும் நீக்கப்பட்டோர் விவரம் காட்சிப்படுத்தப்படும். இவ்வாறு காட்சிப் படுத்தப்படும் பெயர்ப் பட்டி யல் தொடர்பில் பக்.21

### ஐ.நாவுடனான இலங்கையின் உறவுகள் பலமடைந்துள்ளன

ஜனாதிபதி மைத்திரி கருத்து



கொழும்பு, ஒக்.8
ஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதி பக்.21

### அமெரிக்கப் பொருள்கள் தமிழகத்தில் புறக்கணிப்பு

துரோகத்துக்கு பதிலடி என்கிறார் நெடுமாறன்



சென்னை, ஒக்.8
ஐ.நா.வில் இலங்கைக்கு ஆதரவாக அமெரிக்கா கொண்டுவந்துள்ள தீர்மானத்தைக் கண்டிக்கும் வகையில், அந்நாட்டு [illegible] வாங்காமல் புறக்கணிக்க வேண்டும் எனத் தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ.நெடுமாறன் வலியுறுத்தியுள்ளார். பக்.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணையுங்கள்

## யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 8

வட மாகாணத்தில் தமிழ் பொலிஸாருக்கான வெற்றிடங்கள் பல காணப்படுகின்ற போதிலும் விண்ணப்பங்கள் கோரும் சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதில்லை. தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸில் இணைந்து கொள்ள முன்வரவேண்டும். – இவ்வாறு யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கே.ஜயலத் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியிலும் 11 ஆம் திகதி வவுனியா காமினி மகா வித்தியாலயத்திலும் ஆண், பெண் பொலிஸாரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இதற்கு ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பியவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் அனைவரும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுங்கள். போக்கு வரத்து சம்பந்தமாக அயலில் உள்ள பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை பெற முடியும் எனவும் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் அனைவரும் வட மாகாணத்தினுள் கடமைக்கு உள்வாங்கப்படுவார்கள் எனவும் யாரும் எவ்வித பயமும் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேர்முகத் தேர்தவு யாழ்.மத்திய கல்லூரியில் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வவனியா முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங் களைச் சேர்ந்தவர்களுக்கும் நடைபெறவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:–

போரின் பின்னர் வடக்குக் கிழக்கு பிரதேசங்களில் பணிபுரிவதற்கு தமிழ்மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கின் றது.

கடந்த காலங்களில் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிப்பது மிகக்குறைவாக இருந்தது. அதனால், தற்போது விஷேட சுற்றறிக்கையின் பிரகாரம், பெண் பொலிஸ் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கான நியமனம் கோரப்பட்டுள்ளது.

**எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரியிலும் 11 ஆம் திகதி வவுனியா காமினி மகா வித்தியாலயத்திலும் ஆண், பெண் பொலிஸாரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.**

கடந்த நியமனங்களின் போது, எதிர்பார்த்தளவில் பெண் பொலிஸ் பரிசோதகர்கள் நியமிக்கப்படவில்லை. 25 பெண் பொலிஸ் பரிசோதகர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட நிலையில், இரண்டு பெண் பரிசோதகர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடகிழக்கு பகுதியில் தமிழ் மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயிரத்து 400 பேர் கடமையாற்றி வருகின்றார்கள். எனினும் ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது.

பொலிஸ் உத்தியோகம் நல்ல உத்தியோகம் எனவே, நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளுமாறும் அதேநேரம், தெரிவு செய்யப்படும் நபர்கள் வடமாகாணத்திலேயே கடமைக்கு அமர்த்தப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். (ற–4,86,106)



# ‘பாபா’ பாக்கு எனும் போதையூட்டி வவு. இளைஞர்களிடையே புழக்கம்

## நடவடிக்கை எடுக்கக் கோருகின்றனர் பொதுமக்கள்

வவுனியா, ஒக்.8

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் இளைஞர்களிடையேயும், மாணவர்களிடையேயும் 'பாபா' பாக்கு எனக் கூறப்படும் ஒரு வகைப் போதைப் பாக்கு அண்மைக் காலமாக பாவனையில் உள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பாக்கு புகையிலையில் சுற்றப்பட்டு – வெள்ளைத் தாளில் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது என்று பொதுமக் களால் கூறப்படுகின்றது.

வைரவப்புளியங்குளம் பகுதியில் இளைஞர்களது அட்டகாசம் கட்டு மீறிப் போகின்றது என்று அண்மைக் காலமாகப் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. வீதிகளில் செல்லும் பெண்கள், மாணவிகள் ஆகியோர் வீதிகளில் நிற்கும் இளைஞர்களால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை கூட அவ்வாறான ஒரு சம்பவம் நடைபெற்றது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

பணி முடித்து மாலை 6 மணியளவில் வைரவப் புளியங்குளத்தில் இருந்து பண்டாரிக்குளம் செல்லும் குளக்கட்டால் இரு பெண்கள் சென்றுள்ளனர். அவர்களை அந்தப் பகுதியில் நின்றிருந்த இரு இளைஞர்கள் தகாத வார்த்தைகளைப் பிரயோகித்தவாறு பின்தொடர்ந்துள்ளனர். ஒருகட்டத்தில் பொறுக்க முடியாத இரு பெண்களும் அருகில் இருந்து வீடொன்றுக்குள் புகுந்து இளைஞர்கள் தொல்லை தருவது பற்றிக் கூறியுள்ளனர். அதையடுத்து குறித்த வீட்டாரினதும், ஊர்மக்களதும் உதவியுடன் இளைஞர்கள் விரட்டப்பட்டனர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

இளைஞர்களின் கட்டுப்பாடற்ற செயற்பாடுகளுக்கு போதைப் பொருள் பாவனையே பிரதான காரணமாக அமைக்கின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த நிலையில் தற்போது 'பாபா' பாக்கு என்னும் போதைப் பொருளும் இளைஞர்களிடையேயும், மாணவர்களிடையேயும் புழங்க ஆரம்பித்துள்ளது என்று பொதுமக்கள் கூறுகின்றனர்.

குறித்த பாக்கு பூந்தோட்டம் பகுதியில் இருந்தே வைரவப்புளியங்குளம், குருமன்காடு பகுதிகளில் விநியோகிக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் இவை தொடர்பில் உரிய விசாரணை களை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# 60ஆவது ஆண்டில் முதலிடம் கிட்டியமை பெரும் மகிழ்ச்சியே

## பொஸ்கோ அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தின் 60 ஆவது ஆண்டு கொண்டாடப்படும் இந்த தருணத்தில் இந்தப் பாடசாலை மாணவன் 192 புள்ளிகளை பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளமை பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளது. இது மகிழ்ச்சியான விடயம் – இவ்வாறு யாழ். சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில், யாழ். சென் ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் மாவட்ட ரீதியில் முதலிடத்தினைப் பெற்றுள்ளார். அது குறித்து பாடசாலை அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:–

எமது பாடசாலையில் இருந்து [illegible] மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். அதில் 133 பேர் சித்தியடைந்துள்ளனர். சித்தியடைந்த மாணவர்களில் கனகராஜ் கவிலக்ஷன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5 ஆம் இடத்திலும், சிறிஸ்கந்தராஜா கஜலக்ஷன் 186 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்தினையும், மனோ ரஞ்சிதன் கிஷாந், பகீரதன் சுபகீதன், துசானி கிருபாகரன் ஆகியோர் 186 புள்ளிகளைப் பெற்று 20 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்த சோதிநாதன் வசீகரனுக்கு நன்றிகளை தெரிவிப்பதுடன், மாணவர்கள் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கு அயராது உழைத்த வகுப்பாசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்குப் பாடசாலை சார்பில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.– என்றார்.

(ற–4,106)

# வாள்கள், கத்திகளுடன் கைதான ஐவருக்கு 14 நாள்கள் மறியல்

வலி.வடக்கு, ஒக்.8



வாள்கள், கத்திகள் என்பவற்றுடன் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஐந்து பேரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்ற நீதிவான் எஸ்.சதீஸ்கரன் உத்தர விட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம், மயிலணிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் வாள்கள் மற்றும் கத்திகளுடன் நுழைந்து இளைஞர் ஒருவரைத் தேடி அட்ட காசம் செய்த இளைஞர் குழு ஒன்று சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவால் வளைத்துப் பிடிக்கப்பட் டிருந்தது. குறித்த இளைஞர்கள் கடந்த திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதன்போது அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் பொலிஸாரால் தேடப் பட்டு வருகின்றார்.

கைது செய்யப்பட்ட ஐவரில், மல்லாகம் நீதிமன்றின் முன்பாக நடந்த வாள்வெட்டுச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய ஒருவரும் உள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற–86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் நேற்றுப் புதன்கிழமை காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் . மட்டக்களப்பு மாகாத்மா காந்தி பூங்காவில் இப்போராட்டம் ஆரம்பமானது. தமக்கான நியமனத்தை வழங்குமாறு கோரியே உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க தலைவர் எஸ்.உதயவேந்தன் தெரிவித்தார்.
நியமனம் உறுதிப்படுத்தப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என வேலையற்ற பட்டதாரிகள் அறிவித்துள்ளனர்.உண்ணாவிரதம் இடம்பெறும் இடத்திற்கு அரசியல் பிரமுகர்களும் நேரில் சென்றிருந்தனர். அதேவேளை இத்தகைய உண்ணாவிரத போராட்டங்கள் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்றன.(ற)

# சிங்கள - முஸ்லிம் குடித்தொகை யாழில் அதிகரிப்பு

## குறைந்து செல்கின்றது தமிழர் தொகை

**கடந்த 5 ஆண்டுகளில் சிங்களக் குடும்பங்களின் எண்ணிக்கை 107 இனாலும், முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை ஆயிரத்து 198 இனாலும் அதிகரித்துள்ளது. தமிழ் மக்களின் எண்ணிக்கை, 2 ஆயிரத்து 114 குடும்பங்களால் வீழ்ச்சியடைந்துள்ளது.**

யாழ்ப்பாணம், ஒக்.8
யாழ்.மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் சிங்கள – முஸ்லிம் மக்களின் சனத்தொகையில் அதிகளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ள அதேவேளை தமிழ் மக்களின் சனத்தொகை குறைவடைந்துள்ளது. இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலக புள்ளி விவரக் கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 5 ஆண்டுகளில் சிங்களக் குடும்பங்களின் எண்ணிக்கை 107 இனாலும், முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை ஆயிரத்து 198 இனாலும் அதிகரித்துள்ளது. தமிழ் மக்களின் எண்ணிக்கை, 2 ஆயிரத்து 114 குடும்பங்களால் வீழ்ச்சியடைந்துள்ளது.
2010 ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் ஒரு லட்சத்து 88 ஆயிரத்து 501 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 11 ஆயிரத்து 56 தமிழர்களும், 981 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 264 முஸ்லிம்களும், 12 குடும்பங்களைச் சேர்ந்த 19 சிங்களவர்களும் இருந்தனர் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது.
2014 ஆம் ஆண்டு இந்த எண்ணிக்கையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் எண்ணிக்கை, 2 ஆயிரத்து 114 குடும்பங்களினால் குறைவடைந்து ஒரு லட்சத்து 86 ஆயிரத்து 387 குடும்பங்களைச் சேர்ந்த 6 லட்சத்து 5 ஆயிரத்து 224 பேர் இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை சிங்களவர்களின் எண்ணிக்கை 107 குடும்பங்களால் அதிகரித்து 119 குடும்பங்களைச் சேர்ந்த 373 பேர் வசிக்கின்றனர் என் றும் முஸ்லிம்களின் எண்ணிக்கை ஆயிரத்து 198 இனால் அதிகரித்து, 2 ஆயிரத்து 179 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 944 பேர் வசிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிங்களக் குடும்பங்கள் யாழ். மாவட்டத்தின் 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்றன எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வேலணை தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 2 குடும்பங்களும், ஊர்காவற்றுறை பிரதேசத்தில் 5 குடும்பங்களும், யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய், சங்கானை கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா 4 குடும்பங்க ளும், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 17 குடும்பங்களும், பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 3 குடும்பங்களும், சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 74 குடும்பங்களும் வசிக்கின்றன என்று புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

## கடை உரிமையாளரின் கழுத்தில் கத்தி வைத்து கொள்ளை: சுண்டுக்குளியில் சம்பவம்

கொழும்புத்துறை, ஒக்.8
யாழ்.சுண்டுக்குளிப் பகுதியிலுள்ள சிற்றுண்டிச்சாலை ஒன்றை உடைத்து உட்சென்ற திருடர்கள் உள்ளே படுத்திருந்த உரிமையாளரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டிப் பணம் மற்றும் கைப்பேசிகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். நேற்று அதிகாலை 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
முகத்தை மூடி கறுப்பு உடையணிந்த இருவர் உட்புறமாகப் பூட்டப்பட்டிருந்த கதவை உடைத்து உறங்கிக் கொண்டிருந்த கடை உரிமையாளரிடம் 'அடகு பிடித்து வைத்திருக்கும் நகைகளைக் கொடு' என்று கத்தியை கழுத்தில் வைத்து மிரட்டியுள்ளனர்.
அவர் தம்மிடம் நகையேதும் இல்லையென மறுக்கவே அங்கிருந்த 3 ஆயிரம் ரூபா பணத்தையும் இரு செல்லிடத் தொலைபேசிகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
குறித்த வியாபார நிலையத்தில் முன்னரும் திருட்டு இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
கொள்ளைச் சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-135)

## கடற்றொழிலாளர் தேவைகள் குறித்த கூட்டம்

யாழ்ப்பாணம் , ஒக் .8,
யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் தேவைகள் தொடர்பான கூட்டம், எதிர்வரும் 16ஆம் திகதி , வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களப் பணிமனையில் நடைபெறும் என யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுரவுச்சங்கத் தலைவர் என்.பொன்னம்பலம்அறிவித்துள்ளார்.
தொழிலாளருக்குரிய மானியம் ,துறைமுகம் , இறங்குதுறை , வான் தோண்டுதல், கலங்கரை விளக்குகள், கடற்றொழில் உபகரணங்கள் தொடர்பான தேவைகளுக்கு தங்களின் உறுப்பினர்களுக்கும் மற்றும் துறைகளுக்கும் தேவையானவற்றை தெரிவு செய்து தலைவர், செயலாளர் கையெழுத்திட்டு, பொது முத்திரை குத்திய கடிதத்துடன் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-ரி4)

## யாழ். நீதிமன்றத் தாக்குதல்: மேலும் இருவருக்கு பிணை

### நீதிமன்றுக்குச் சமுகமளிக்காத ஒருவருக்குப் பிடியாணை

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ். நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் மேலும் 2 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். முன்னர் பிணையில் சென்று நேற்று முன்தினம் வழக்குக்கு வருகை தராத ஒருவருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கடந்த மே மாதம் 21 ஆம் திகதி யாழ். நகரப்பகுதியில் கடையடைப்பு, ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. அதன்போது யாழ். நீதிமன்ற வளாகத்தின் முன்பாகக் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒரு பகுதியினர் நீதிமன்றக் கட்டடம் மீதும் சிறைச்சாலை வாகனம் மீதும் நீதிமன்றம் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் மீதும் தாக்கு தல் நடத்திச் சேதப்படுத்தியிருந் தனர்.
அதன்போது பொலிஸாருக்கும் காயம் விளைவிக்கப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து நீதிமன்றம் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் சுமார் 130 இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.
சம்பவ தினமன்று யாழ். நகரிலிருந்து அண்மையில் [illegible] காணப்பட்ட பலர் [illegible] பட்டனர். அதன் பின்னரும் பொலிஸார் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை ஆதாரமாகக் கொண்டு பலரைக் கைது செய்திருந்தனர். பின்னர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் – தாக்குதல் நடத்தியதான ஆதாரம் இல்லாதவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டு வந்தனர். எனினும் அவர்களுக்கு எதிரான வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது. தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டும் அதற்கான ஆதாரமும் உள்ள சந்தேக நபர்களே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.
ஆதாரங்கள் உள்ளன என்று கூறப்படுபவர்களில் ஒருசிலர் மாத்திரம் விசேட காரணங்களின் அடிப்படையில் நிபந்தனை அடிப்படையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 20 பேர் தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
அதன்போது விளக்கமறியலில் உள்ளவர்களில் மேலும் 2 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தலா 5 லட்சம் பெறுமதியான 5 ஆள் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய 18 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.
அதேவேளை கடந்த தவணையின் போது பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் வழக்குக்கு வந்திருக்க [illegible] எதிராக நீதிமன்று பிடியாணை பிறப்பித்துள்ளது. (ற-4,106)

## வாள்வெட்டில் இளைஞர் காயம்

### கோப்பாய் சந்திக்கு அண்மையில் சம்பவம்

வலி.வடக்கு, ஒக்.8
இளைஞர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். கோப்பாய் சந்திக்கு அண்மையில் உரும்பிராய் வீதியில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
சுன்னாகம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த சிவனேந்திரன் தர்மதாசன் (வயது–26) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.
தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் அவர் கடமை முடிந்து வீடு திரும்பும்போது மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் குழு ஒன்று வாள்வெட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறுபேர் மக்கள் நடமாட்டம் மிக்க பகுதியில் வாள்வெட்டை நடத்தியுள்ளனர் என்று சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தெரிவித்தனர்.



1990ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி அனலைதீவில் இருந்து கடல் மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றபோது கடலில் மூழ்கி உயிரிழந்த 67 பேரின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் அந்தப் பகுதி மக்களால் நினைவு கூரப்பட்டது. அதையொட்டி அனலைதீவு கணினி கற்கை மையத்தால் மாணவர்களிடையே திருக்குறள் மனனப் போட்டி நடத்தப்பட்டது. அனலைதீவு மத்திய மகா வித்தியாலய உப அதிபர் திருமதி ஜெயந்தினி சிவபாலன் முன்னிலையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த ஊரில் மருத்துவப்பணி அதுவே எதிர்கால இலட்சியம்

***புலமைப் பரிசில் பரீட்சையில் யாழில் இரண்டாம் இடம் பெற்ற துளசி தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஒக். 8


மருத்துவராகி யாழ். மாவட்ட மக்களுக்கும் தனது உறவுகளுக்கும் இந்த மண்ணில் இருந்தே சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியம் என்று தெரிவித்தார் புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ள யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் சிவஞானம் துள்சிகன்.

நேற்று தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. அதில் 191 புள்ளிகள் பெற்று துளசிகன் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

தனது வெற்றி குறித்து உதயன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு எனக்கு சகல வழிகளிலும் உதவிய ஆசிரியர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்காலத்தில் இடம்பெறும் சகல பரீட்சைகளிலும் எனக்கு வழிகாட்டிகளாக இருந்து உதவவேண்டும் என்று அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இவற்றுக்கு கைமாறாக நான் கற்றுத்தேர்ச்சி பெற்று எதிர்காலத்தில் ஓர் மருத்துவ கலாநிதியாக வெளியேறி சொந்த ஊரிலேயே எனக்கு கல்வி கற்பித்தோர்களுக்கும் பெற்றோருக்கும் நானே மருத்துவம் பார்க்க வேண்டும் என்பதே எனது லட்சியம் – என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற–4,101)



# விடாமுயற்சி தன்னம்பிக்கை இருந்தால் சாதிக்க முடியும்

***மாவட்ட நிலையில் மூன்றாம் இடம்பெற்ற நிவேதன் தெரிவிப்பு***

யாழ்ப்பாணம், ஒக். 8

விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் போட்டி மனப்பான்மையுடனும் கல்வி கற்றால் சாதிக்கமுடியும் என்று தெரிவித்தார். மாவட்ட நிலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்றாம் நிலை பெற்ற தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய மாணவன் ஜெயந்திரன் நிவேதன்.

அவர் தனது வெற்றி தொடர்பில் உதயன் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:–

நான் எனது ஆரம்பப்பிரிவை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்றேன். எனது தந்தையார் உடுத்துறையில் அதிபராக பணிபுரிகிறார். எனது கல்விக்கு எனது அப்பா அண்ணா என குடும்பத்தில் எல்லோரும் நன்றாக உதவி செய்தார்கள். எங்கள் பாடசாலை அதிபர் எம்முடன் நெருக்கமாக பழகுவார். காலை வகுப்புக்களைஅவரேநடத்துவார். காலை 7 மணிக்கு அவரின் வகுப்பும் எமது வகுப்பாசிரியர் பரமேஸ்வரன் சேரின் வகுப்பும் இருக்கும். நான் அந்த வகுப்புக்கு ஒழுங்காக வருவேன். எனது பாடசாலையை



சேர்ந்த எல்லாஆசிரியர்களும் நன்றாக படிப்பித்தார்கள். நான் தனியார் கல்வி நிலையங்களுக்குசெல்வதில்லை. ஏனென்றால் வீட்டில் அமைதியாக இருந்து படிக்க முடியாது.

புலமைச்சுடர், வெற்றிப்படி, வெற்றித்தேர்வு என எல்லா மாதிரி வினாத்தாள்களையும் செய்து பார்ப்பேன். நன்றாக பயிற்சி எடுப்பேன். எனக்கு என் பாடசாலை அதிபர், ஆசிரியர், நண்பர்கள், குடும்பம் என எல்லோரும் உதவினார்கள்.

காலை, இரவு என நேர அட்டவணை போட்டு படிப்பேன் விடாமுயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் போட்டி மனப்பான்மையுடனும் கல்விகற்றால் சாதிக்கமுடியும். விளையாட்டிலும் எனக்கு ஆர்வம் உண்டு அதிலும் பங்குபற்றுவேன் – என்றார். (ற–109)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - கிடைக்கப்பெற்ற முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு நேற்று வெளியாகியுள்ளன. நேற்றுக் கிடைக்கப் பெற்ற பாடசாலைகளினது பெறுபேறுகள் வருமாறு:

**யாழ்.மாவட்டம்**

**இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்**
இ.நியாந் – 155

**கைதடி குருசாமி வித்தியாலயம்**
ஜெ.சாருமதி – 183, செ.தமீசன் – 169

**பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை**
சு.மதுமிலா – 168, ஜீ.கலைப்பிரியா – 162, உ.அபிஷன் – 160, சி.தனுசிகா – 153

**ஊர்காவற்றுறை றோ.க.த.க ஆண்கள் பாடசாலை**
அ.அருணாஜசிந்தன் – 155

**ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாசாலை**
ச.குணாளன் – 188, மு.மிருணாளன் – 176, உ.கஜிசா – 174, சு.மதிசா – 169, ற.பிரதக்சன் – 166, இ.அபிவர்மன் – 166, சி.துசித்தா – 166, கி.தசாங்கினி – 164, ச.சயந்தினி – 163, ப.அஜய் – 162, க.திரண்மிகா – 162, சு.பிரவீனன் – 158, ம.யதுசாயினி – 158, தெ.தசாநந்தி – 157, லோ.யுவன்சங்கர் – 155, உ.தரணிகா – 155,சு.துபிசன் – 154, த.அபிலாஸ் – 154, து.கோபிகன் – 154, கு.சானுகா – 154, சூ.நேத்திரன் – 154, சு.யது – 154, வி.கேசினி – 153,

**கல்வியங்காடு இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை**
பா.துவாரகன் – 161,து.தர்சிகா – 159, வி.கிருத்திகா – 155,

**சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை**
சூ.சஜித்திரா – 174,சி.அர்ச்சனா – 168, பி.டிலோஎழில்நிலா – 164, ப.பிருந்தாபன் – 168, கோ.தமிழ்ப்பிரியன் – 156, றா.கஜனி – 154,

**மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை**
மு.சிவானுஜன் – 176, அ.தேனுஜன் – 173,யூ.அர்ச்சனா – 153,

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**
ஜெ.லவீனா – 185,அ.ராகவி – 167, ச.சங்கீர்த்தனா – 164,கெ.தூரிகா – 164,வி.ஜனசிகா – 155,ர.கிருசிகா – 168,சு.கபிசா – 163,ச.விதுத்திகா – 158, சி.மோனிசா – 155, க.நிதுரிகா – 153,

**பெரியபுலம் மகாவித்தியாலயம்**
நி.கஜானுகரன் – 162,ச.சோபிதன் – 160,

**புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயம்**
அ.சரண்யா – 155

**வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி**
சூ.சௌமியா – 159, ஜெ.ஜெனந்தினி – 157, நி.கிருசிகா – 156, சா.றேனுஜா – 156

**தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்**
ஜெ.நிவேதன் – 190, ந.நிவேதா – 185, அ.அபர்ணா – 172, மு.துஜானி –167, வி.அபிநயா – 167, ச.மாதுரி – 166, க.கவின்வளன் – 165, செ.விதுசா– 163, வீ.சயந்தனா – 163, ரெ.அபிநயா – 158, சி.தர்சி – 158, வெ.கஜந்தனா – 156

**வடமராட்சி இந்து ஆரம்பப் பாடசாலை**
சி.மதுசாயினி – 189, ஜெ.திசாளன் – 180, ம.ஆரணிகா – 170, கி.சபேஸ்கரா – 168, க.குபேரன் – 167, ம.பிரவீன் – 161, ம.நிதர்சா – 187, ம.அபிசிகா – 156, சி.லக்சனா – 153,

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலை**
வி.நந்திதா – 184, ந.அருண்யா – 179, நா.கிருஸ்ணவேலன் – 179, ஜெ.துஸ்மிலன் – 177, கு.வைகுந்தன் – 170,அ.சிறீபரன் – 166, க.கம்சாயினி – 166, சு.அனோஜன் – 163, செ.சாரங்கா – 160, மு.அஸ்விகா – 157, கு.சகானா – 155, உ.புருசோத்மன் – 154,கு.கானுஜன் – 153,

**பண்டத்தரிப்பு றோ.க.த பாடசாலை**
சு.யஸ்மியா – 153

**குளமங்கால் றோ.க. வித்தியாலயம்**
மு.நயனன் – 165

**சுன்னாகம் மகேஸ்வரி வித்தியாலயம்**
ஜெ.கபிசாந் – 159, கெ.யதூசன் – 162, செ.சிறீகீரன் – 155, ஏ.ஜிலானி – 163, எஸ்.தானுஜா – 168, ச.பிரியங்கா – 159, ச.விஸ்ணுகா – 155, சு.அபிநயா – 157, ப.பிரவீன் – 155, ந.அகீதன் – 170, அ.பிரணவன் – 160, சி.சாருஜன் – 171, சி.அபிலாஸ் – 156, ம.சஜிந்தினி – 174, எஸ்.தரணிகா – 164, பா.பிரியங்கா – 170

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**
கி.யதுசன் – 181, எஸ்.துளசிகன் – 191, எம்.யதுகுமரன் – 171, எம்.பிரணவன் – 184, என்.குருசங்கர் – 160, பி.அபிசன் – 156, வி.திரீஷன் – 169, க.லோகஜன் – 161, ஐ.கிரிசிகேசன் – 176, தி.விதுர்சியன் – 170, தே.ஆனந்தராம் – 179, பி.கோபிகன் – 160, ஶ்ரீ.புவன் – 166, சு.சிவோதயன் – 168, ல.சோசிகன் – 167, கெ.விசால் – 154, சு.திகழவன் – 160, ம.அகரன் – 171, ஐ.சாதுரியன் – 162, செ.சம்வத்சன் – 169, பி.அபிசயன் – 164, ய.பிரணவன் – 174, ய.சரவணன் – 170, ச.அஸ்விகன் – 161, ஶ்ரீ.ஶ்ரீகணா – 173, கு.சங்கரன் – 188, பி.அபிநயன் – 167, ந.துவாரகன் – 169, ம.கஜலக்சன் – 153, ஜோ.மதுசன் – 160, தி.கேசவன் – 158, சி.ஜனுஜன் – 162, வி.வாரணண் – 155, சி.சோபிதன் – 154, ம.ருக்சாந் – 160, மு.சங்கீத் – 167, வி.கஜனீபன் – 166, கு.நிரோசன் – 169,த.ஆதவன் – 163, கு.தயானன் – 173, அ.விதூசனன் – 165, ஜெ.தாருண்யன் – 161, ஆர்.ரதுக்ஷன் – 179, எஸ்.சாத்வீகன் – 157, ஜெ.ஆர்த்திகன் – 173, ஆர்.ஜெகத்பிரியன் – 162, எஸ்.சபீசன் – 176, தி.தனோசன் – 157, ஆர்.தருண் – 171, பி.கஜமுகன் – 171, எம்.சஞ்சயன் – 186, ஜெ.கோபிசன் – 164, ஏ.அபிர்நாத் – 176, என்.ஆதிரன் – 163, கே.பபிநாத் – 154, எஸ்.திலக்சன் – 154, ஜி.ஆதித்யா – 173, எல்.தினுசா – 175, ஜி.யருனி – 165, எம்.லக்சிகா – 172, வி.லக்சியா – 160, ரி.சைலானி – 164, ஆர்.நர்த்தகை – 171, கே.வெர்னிலா – 169, கே.ஜெனனி – 176, ரி.நர்த்தனா – 173, எஸ்.யஸ்வந்திகா – 167, எம்.ஒவியலக்சினி – 173, [illegible] – 178, [illegible] – 153, [illegible]கம்சாயினி – 163, எம்.விதுசனா – 163, ஜெ.இந்துபி – 160, ஜெ.தசாயினி – 172, எம்.மாதங்கி – 164, எம்.ரதன்சலி – 180, எஸ்.ஆரபி – 161, எஸ்.கஜகினி – 171, ஏ.கலாநிதி – 167, ஆர்.ஆர்த்தி – 184, எஸ்.பிரியங்கா – 168, எம்.ஆரண்யா – 166, என்.கீர்திகா – 169, எஸ்.பிரணகா – 154, எஸ்.அனுசிகா – 166, எஸ்.ஜெனுகா – 170, பி.லக்சாயினி – 177, எஸ்.செவ்வைஸ்ணவி – 153, எஸ்.பானுசன் – 157, பி.கிரண் – 166, யூ.ஷேசாந் – 169, கே.தனுசியன் – 177, வீ.சிறிகஜன் – 178, எஸ்.துசான் – 160, ஆர்.கிசாந் – 165, ஜெ.யதுசன் – 155, எம்.நிசான் – 153, சி.நந்தலாலன் – 175, டி.சதுர்யன் – 166, ஆர்.தனுசன் – 157, ரி.ஜனகசெல்வன் – 163, ஏ.மகிந்தன் – 154, எஸ்.சாருகன் – 155, உ.யனுசன் – 167, ஆர்.சாருஷன் – 158, ஆர்.சுவர்ணன் – 167, வீ.சியாந் – 157, ஆர்.துவாரசாந் – 154, ப.குகஜன் – 175, ஆர்.கஜானன் – 153, ஜே.அபிஷன் – 164, வி.பிவர்மன் – 154, வி.ஜெய்சூர்யா – 154, எஸ் – சாதுர்யன் – 171, எஸ்.அபினாஸ் – 160, ஜே.கிதுஷன் – 158, உ.சந்தோஸ் – 163, ஆர்.மகிழ்ராஜன் – 165, எம்.டினுசன் – 175, ஆர்.லக்சினா – 168, உ.மகிழ்ந்தனா – 162, கே.தனுசியா – 154, பி.சன்சிகா – 158, எஸ்.துஷாந்தி – 157, எம்.மயூரா – 162, எஸ்.சாருகா – 163, என்.சங்கவி – 165, எஸ்.மோனிசா – 170, எஸ்.வரன்ராஜ் – 159, எஸ்.சங்கீதா – 157, ரி.பவதாரணி – 159, ஜி.டிலக்சிகா – 166, வீ.பவதாரகி ஶ்ரீ 180, எம். திசானா – 169, எஸ்.பிலணவி – 165, பி.தீபிகா – 159, பி.ஜெகசினி ஶ்ரீ 154

**தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை ம.வி**
ஜெ. கிஷஜு – 173, மோ.நிந்துஜன் – 171, யோ.நவஜிவன் – 170, ரீ.அஞ்சன்ன் – 167, பே. தீபிகா – 167, வி. மித்திரகாந் – 166, த.கவிசன் –158

**வல்வை மகளிர் கல்லூரி**
சு.கயல்விழி – 185,சி.சைந்தவி – 170, உ.ஷமிதா – 168, அ.நிவேதா – 159, சி.தமிழ்முகிலன் – 157, உ.ஜினுசன் – 155, உ.கிருஷிகா – 153, ம.துஷாயினி – 153, ஜெ.சாருஜன் – 153

**அச்சுவேலிபுனிததெரேசாள் மகளிர் கல்லூரி**
ஆ.துசாந் – 183, பு.சஞ்சீவன் – 171, ர.சாத்வீகன் – 170, க.லக்சனா– 168, பி. சானுகா– 167, ர.நிவே திகன் – 166, சி.தயானனி – 166, மோ.கிரிசன் –165, க.அனுசன் –165, ச.சதுர்சிகா – 165, சு – மாத ங்கி –158, ஜீ – யதுசா – 158, டொ.றெனெற்சியானுசா – 158, ஶ்ரீ.மதுரா –157,சி.கிருசிகன் –157, சௌ.சந்தீபன் –156, அ.செரன் ஜீவோசன் –154, ர.கபில்சன்– 154

**யாழ்ற்ரன் கல்லூரி**
ஜெ.புவியரசன் – 172, வ.கோபிகா –171, பா.அனிதா –162, யோ.கிருத்திகா –158, யோ.கிருத்திகா –155, தி.கம்சிகா –153,

**ஊரி அ.மி.த.க.பாடசாலை**
சு.சானுசா – 174,ச.பிரபாலினி – 160,

**தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தியாலயம்**
பா.சுடர்நிலா –171,ஈ.தமிழ்ச்சுடர் – 166,

**காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்**
ப. சாரங்கன் – 157

**கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**
சி.பிரணவன் – 180, ககிருசிகன் – 174, க.ஸ்நேகன் – 169, சி.மிருணாளன் – 161, த.நிதர்சிகா – 160, மு.ஸிரோஜன் – 154, சு.தனுசாந் – 153,

**நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை கரவெட்டி**
சி.சிநோஜன் – 186, உ.கீர்த்தனி – 185, ஶ்ரீ.டேரிகா – 178, சி.ஆர்நிகன் – 178, வி.ஹர்சன் – 178, கி.ஜனனி – 177, மோ.அர்ஜீன் – 176, சி.தனோஜ் – 175, வி.அபிசாதனன் – 175, ந.தாரிகா – 174, வை.வைஷ்மினி – 172, த.கம்சத்வனி – 171, ர.சுஜானி – 171, யோ.சுபசங்கவி – 171, நி.சாளின் – 169, சு.பிரணவன் – 168, ச.கம்சவி – 168, இ.சந்தியா – 167, சி.துவிகரன் – 166, பா.அபி நயன் – 165, கு.ஆதிகேசவன் – 165, சு.சன்சிகா – 164, சி.பவித்திரா – 163, ர.பிரியங்கா – 163, சி.நிதுஸ் – 162, சு.வர்ஷனா – 161, பா.மதுசா – 161, ஞா.ஹம்சத்வனி – 161, கு.லிலக்ஷன் – 159, தே.சியாமளி – 158, கு.தட்சாயினி – 157, ச.வாஹினி – 154, ஜெ.ஆதர்ஷா – 153,

தொடரும்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான உள்நாட்டு விசாரணை நடக்கும் சூழல் தற்போதுண்டு

## ஜே.வி.பி. கூறுகின்றது



கொழும்பு, ஒக்.8
இலங்கையின் நீதித் துறையில் தற்போது பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனால் நம்பகத் தன்மைமிக்க உள்நாட்டு விசாரணை ஒன்றை முன்னெடுக்கக் கூடிய சூழல் காணப்படுகின்றது. – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
இந்திய ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
முன்னைய ஆட்சியாளர்கள் நீதித் துறையைப் பயன்படுத்திய விதம் காரணமாகவே தமிழ் மக்கள் உள்நாட்டு விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
தற்போதைய விசாரணையில் சர்வதேச நீதிவான்கள், சட்ட வல்லுநர்கள் உள்ளடக்கப்படுமிடத்து அதனையும் ராஜபக்ச தரப்பினர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
அதன் காரணமாகவே சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றோம் என்று குறிப்பிட்டுள்ள அவர், மாறாக தமது கட்சி எந்தவொரு விசாரணைக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.
நடத்தப்படவுள்ள விசாரணை முழுமையாக உள்நாட்டு விசாரணையாக அமைய வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்றும் அவர் கூறியுள்ளார். (ற)

# அமெ. விரித்த வலையில் சிக்கிக்கொண்டது இலங்கை

## எச்சரிக்கின்றார் குணதாச அமரசேகர



கொழும்பு, ஓக்.8
அமெரிக்கா விரித்த வலையில் இலங்கை சிக்கிக் கொண்டுள்ளது. தேசிய விசாரணைப் பொறி முறை குறித்துப் பேசிக் கொண்டிருப்பவர்கள் இலங்கையின் கழுத்தில் சுருக்குக் கயிற்றை மாட்டியுள்ளனர் – இவ்வாறு எச்சரித்துள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத் தின் தலைவர் குணதாச அமர சேகர.
நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டி ருந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய சக்திகள் இலங்கையைப் பிளவு படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன என்று சுட்டிக்காட்டியுள்ள அவர் அரசு அதை மூடி மறைக்கப் பார்க்கின்றது என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்.
போர் முடிந்த பின்னர் வடக்கையும் கிழக்கையும் பிரித்துக் கொடுத்திருந்தால் தற்போது மனித உரிமைகள் தொடர்பில் பிரச்சினை எதுவும் எழுந்திருக்காது என்று கூறியுள்ள அவர் நாடு தற்போது விடுபட முடியாத ஆபத்தில் சிக்கியுள்ளது என்றும் எச்சரித்துள்ளார். (ற)

# பாலியல் குற்றச் செயல்களுக்கு சாவுத் தண்டனை தீர்வாகாது

## அத்துரலிய ரத்ன தேரர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.8
சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள் மற்றும் அதன் பின்னரான படுகொலைகள் போன்ற குற்றச் செயல்கள் உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மிகவும் குறைவாகும். இப்படியான குற்றச் செயல்களுக்கு தூக்குத் தண்டனை இறுதித் தீர்வாக அமைந்துவிடாது. – இவ்வாறு அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஹிருணிக்கா பிரேமச்சந்திரவால் கொண்டுவரப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறை, அதன் பின்னரான கொலை ஆகியவற்றுக்குச் சாவுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற ரீதியிலான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறை, கொடூரமான கொலைகள் அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்றன. இத்தகைய குற்றச் செயல்களுக்கு சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்றே இங்கு வலியுறுத்தப்படுகின்றது.
எனினும் சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறை மற்றும் அதன் பின்னரான படுகொலைகளைப் பொறுத்தவரையில் இவை உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் மிகக் குறைவானவையே. பௌத்த மதத்தைப் பின்பற்றும் நாடான இந்தோனேஷியாவில் இவை அதிகரித்துக் காணப்படுகின்றன. அதே போன்று இந்தியாவிலும் இந்நிலை அதிகமானது.
இன்று எமது நாட்டில் தூக்குத் தண்டனைக் கைதிகளாக ஆயிரக் கணக்கானோர் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் காணி விவகாரம் மற்றும் காதல் விவகாரம் ஆகியவற்றில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். மாறாக சிறுவர் துஷ்பிரயோகத்துக்காகவோ அல்லது பாலியல் வன்முறைக் குற்றத்துக்காகவோ அல்ல.
எமது நாட்டில் இடம்பெறுகின்ற இத்தகைய குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு சாவுத் தண்டனை இறுதித் தீர்வாக அமைந்து விடாது. மாறாக எமது நாட்டின் கலாசாரம், கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும், சமு தாயச் சீர்கேடுகளை மாற்றியமைக்க வேண்டும் – என்றார். (ற)

# தூய்மையான நீதிக் கட்டமைப்பின் பின்பே சாவுத் தண்டனை நடைமுறை

## அமைச்சர் சஜித் பிரேமதாச வலியுறுத்து



கொழும்பு, ஒக்.8
நாட்டில் அரசியல் அழுத்தங்கள் அற்ற, தூய்மையான நீதிமன்ற கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னரே சாவுத் தண்டனையை நடைமுறைப்படுத்த முடியும் என்று வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேம தாச தெரிவித்துள்ளார்.
சிறுவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராக சாவுத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமெனக் கோரி நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமொன்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.
அமெரிக்காவில் சில மாநிலங்களில் சாவுத் தண்டனை நடைமுறையில் உள்ளமையை சுட்டிக் காட்டிய அவர், சாவுத் தண்டனை நடைமுறையில் உள்ள பகுதிகளில் ஏனைய பகுதிகளை விட அதிகளவான கொலைகள் இடம்பெறுகின்றன என்றும் குறிப்பிட்டார்.
ஆகவே எதிர்காலத்தில் இடம்பெறும் கொலைகளுக்கு சாவுத் தண்டனை தாக்கத்தை ஏற்படுத்தாது என்று தெரிவித்த அவர், குற்றச்செயல்கள் தகுதியான ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே சாவுத் தண்டனை விதிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.
இதேவேளை, சிறுவர் வன்முறைகளை தடுத்து அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்படக்கூடிய வகையில், வலுவான சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் சஜித் இதன்போது குறிப்பிட்டார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சுயமாகச் சிந்தித்து எடுக்கும் முடிவை நடைமுறைப்படுத்துங்கள். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் இருக்கும். புதிய முயற்சிகளால் செலவு ஏற்படலாம். ஆன்மிகத் தலங்களுக்கு சென்று வர வாய்ப்புண்டு.

**இடபம்:** தாமதமான பணியை உற்சாகமாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத் தேவைக்கு ஏற்ப பண வரவு கிட்டும்.

**மிதுனம்:** மாமன், மைத்துனர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். வாகனங்களை மித வேகமாக இயக்கவும்.

**கடகம்:** நண்பர்களிடம் உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை இலக்குப் பூர்த்தியாகும். மேலதிக வருமானம் கிடைக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும். மருத்துவச் செலவு வரலாம்.

**கன்னி:** முக்கிய செயல் ஒன்றை நடைமுறைப்படுத்தி நிம்மதி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி மேற்கொள்வீர்கள். கடன் பாக்கி வசூலாகும். ஆன்மிகத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள்.

**துலாம்:** உறவினர்கள் செய்த உதவிக்கு மறு உபகாரம் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் கிடைக்கும். புத்திரர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள். காணாமல் தேடிய பொருள் கைவந்து சேரும்.

**விருச்சிகம்:** குடும்பப் பிரச்சினையில் பொறுமை தேவை. தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். சீரான ஓய்வால் உடல் நலத்தைப் பாதுகாக்கலாம்.

**தனுசு:** தேவையற்றவருக்கு உதவி மன வருத்தம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஓரளவே வருமானம் வரும். உடல்நிலையில், மிகக் கவனமாக இருக்கவும். வாகனப் பராமரிப்பு செலவு கூடும்.

**மகரம்:** பணியாளருக்கு குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். கொடுக்கல், வாங்கல் திருப்திகரமாகும். சுப நிகழ்ச்சிகளுக்கு செலவழிக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்:** எதிரிகளால் வந்த சிரமம் காணாமல் போகும். பணிகளைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து லாபம் உயரும். விருந்து, விழாக்களில் பங்கேற்பீர்கள்.

**மீனம்:** குடும்ப உறுப்பினர்கள் இயன்ற அளவில் உதவுவர். தொழில், வியாபாரத்தில் இடையூறு வரலாம்; கவனம் தேவை. பணியாளர்களுக்கு ஓரளவே சலுகை கிடைக்கும். ஆடம்பரச் செலவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

## நடிகை அனுஷ்கா திருமணம்



தெலுங்கு நடிகர் பிரபாசை நடிகை அனுஷ்கா திருமணம் செய்து கொள்ளப்போவதாக சினிமா வட்டாரத்தில் பரபரப்பாகப் பேசப்படுகிறது. இருவருக்கும் இடையே பாகுபலி படப்பிடிப்பில் காதல் மலர்ந்ததாகக் கூறப்படுகிறது. சுந்தர் சி இயக்கத்தில் மாதவன் கதாநாயகனாக நடித்த இரண்டு படங்களின் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர், அனுஷ்கா. வேட்டைக்காரன், சிங்கம், வானம், தாண்டவம், இரண்டாம் உலகம், லிங்கா உள்பட பல படங்களிலும் கதாநாயகியாக நடித்து இருக்கிறார். தற்போது தமிழ், தெலுங்கு பட உலகிலும் முன்னணி கதாநாயகியாக வலம் வருகிறார். அனுஷ்கா நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த பாகுபலி படம் தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட உலகின் பல மொழிகளிலும் வெளியிடப்பட்டு மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. இந்தப் படத்தில் கதாநாயகனாக நடித்தவர், பிரபாஸ். அனுஷ்காவுக்கும், பிரபாசுக்கும் இடையே பாகுபலி படப்பிடிப்பில் காதல் மலர்ந்ததாக தெலுங்கு பட உலகில் கிசுகிசுக்கப்படுகிறது. இவர்களின் காதலை இரண்டு பேரின் பெற்றோர்களும் ஏற்றுக்கொண்டதாகவும் பேசப்படுகிறது. பாகுபலி படத்தின் இரண்டாம் பாகம் படப்பிடிப்பு தற்போது நடைபெற்று வருகிறது. இந்தபடம் திரைக்கு வந்ததும், அனுஷ்கா – பிரபாஸ் திருமணம் நடைபெறும் என்று சினிமா வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

















## பேஸ் புக்கில் பிடித்தவை...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முயற்சிகளுக்கு கூட்டுறவு அமைச்சு நன்கொடை

## 2.5 மில்லியன் ரூபா நிதி வழங்கியது




யாழ்ப்பாணம், ஒக்.8

வடக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கென முதற்கட்டமாக வடக்கு மாகாண கூட்டுறவுத் துறை அமைச்சினால் 2.5 மில்லியன் ரூபா நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்டக் கூட்டுறவாளர்களின் ஏற்பாட்டில் வவுனியா முத்தையா மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டுறவுத்தின விழாவின் போதே வடக்கின் கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்த நன்கொடை நிதியை வழங்கினார்.

வடமாகாணக் கூட்டுறவு அமைச்சால் கூட்டுறவுத்துறையின் அபிவிருத்தி கருதி 100 நாள் வேலைத் திட்டமொன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தில் நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களை அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

அதன் அடிப்படையிலேயே, ஐந்து மாவட்டங்களில் இருந்தும் முதற்கட்டமாக ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தொழில் முயற்சிகளை மேற்கொள்ளவென கூட்டுறவுத் திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து இந்த நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கமும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூட்டுறவுச் சங்கமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ப.நோ. கூட்டுறவுச் சங்கமும், வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் ப.நோ. கூட்டுறவுச் சங்கமும், மன்னார் மாவட்டத்தில் மாந்தை வடக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கமுமே இந்த நிதியைப் பெற்றுக் கொண்டுள்ளன. இந்தச் சங்கங்களின் தலைவர்களும், பொது முகாமையாளர்களும் இதற்கான காசோலைகளை அமைச்சரிடம் இருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.ரவீந்திரநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ–21)

# உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வாழ்வின் எழுச்சி கண்காட்சி

***வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவிப்பு***

அச்சுவேலி,ஒக்.8

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தி செய்த பொருள்களை பொருத்தமான முறையில் சந்தைப்படுத்துவதற்கும் வசதி செய்யும் வகையில் வாழ்வின் எழுச்சி கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது. இதனைத் தொழில் முயற்சியாளர்களும் பாவனையாளர்களும் உரிய முறையில் பயன்படுத்த முன்வரவேண்டும். இவ்வாறு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள யாழ். மாவட்டப் பணிப்பாளர் க.மகேஸ்வரன் தெரிவித்தார்.

'முத்தானவியர்வை' எனும் வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி கோப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. வலி. கிழக்கு பிரதேச செயலர் எம். பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைத்த பணிப்பாளர் தொடர்ந்தும் உரையாற்றும்போது:

வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குப் பொருத்தமான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்கள் இருக்க வேண்டும். இல்லாவிடில் உற்பத்தித் தொழில் முயற்சி பாதிப்படைந்துவிடும்.

சந்தைப்படுத்தலில் காட்சிப்படுத்தல், உரிய பொருளின் தர நிலையைப் பாவனையாளர் கண்டு கொள்ளல் என்பன மிக முக்கியமானவை. இந்த வகையிலேயே பிரதேச செயலக பிரிவு வாரியாக வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

வலி.கிழக்குப் பிரதேசம் மக்கள் தொகை அதிகமான பிரதேசம். இங்கே இந்த கண்காட்சியினால் கணிசமான தொகையினர் பயன் பெற வாய்ப்பு உள்ளது. அதற்கு ஏற்ற வகையில் கண்காட்சி ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது. வாழ்வின் எழுச்சி வர்த்தகக் கண்காட்சி தொடர்பாக நடத்தப்பட்ட மதிப்பீட்டில் 2013 ஆம் ஆண்டு கோப்பாய் பிரதேசம், மாவட்ட நிலையில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பிரதேசத்தில் தந்தை தாயை இழந்த, வசதிகள் குறைவான மாணவர்களில் 36 பேரைத் தாபரிப்புப் பெற்றோர் பொறுப்பேற்று உதவி வழங்க முன் வந்திருப்பதும் வரவேற்கத்தக்கது எனத் தெரிவித்தார். (ஐ–11)

# மத்திய கல்லூரியின் நடைபவனி

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது வருட நிறைவு விழாவை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபவனியொன்று இடம் பெறவுள்ளது. பாடசாலை முன்றிலிருந்து ஆரம்பமாகும் இந்த நடைபயணத்தின் பிரதம விருந்தினராக யாழில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் ஆ.நடராஜனும், கௌரவ விருந்தினர்களாக தொழிலதிபர்களான ஈ.எஸ்.பி. நாகரட்ணமும், ஆர்.ஜெயபாஸ்கரனும் கலந்துகொள்வர். (ஐ–ரி6)

## மரண அறிவித்தல்

### திருமதி குமுதினி இராசலிங்கம்



தோற்றம் 21 . 03 . 1974

மறைவு 30 . 09 . 2015

யாழ் மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சுவிஸினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமுதினி இராசலிங்கம் 30.09.2015 புதன்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் பொன்னுத்துரை இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் இராமநாதன் - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகளும் இராசலிங்கம்(பவான்) அவர்களின் அன்பு மனைவியும் அபர்னா, ஆர்த்திகா, பால்ராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி (சுவிஸ்), நந்தினி(கோப்பாய்), மோகன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயராணி(இந்திரா - பெரியகுளம்), செல்வேந்திரராணி (ஆசிரியை - வவுனியா மகாவித்தியாலயம்), கணேசலிங்கம்(ரவி - லண்டன்), Dr.கிஸ்ணலிங்கம்(Dr.லிங்கம் -கிளிநொச்சி வைத்திய சாலை), யோகநாதன்(சுவிஸ்), ரவிச்சந்திரன்(வடமாகாணசபை - கோப்பாய்), ஒல்கா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2015) வியாழக் கிழமை சுவிஸில் நடைபெறுகின்றது என்பதனை அறியத்தருகிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63A, சிவன்கோவில் வீதி, தோணிக்கல், வவுனியா.

தகவல்: குடும்பத்தினர். 024 222 3546

(63898)(14.15)

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா இராயப்பு



பிறப்பு 1932.09.20

இறப்பு 2015.10.04

முடவேம்படி சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் மல்வம் உடுவிலை தற்காலிக இருப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா இராயப்பு 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி -கதிராசி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இராயப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் பரிபூரணம் (மல்லாகம்),சிசிலியா இரஞ்சிதமலர் (இந்தியா),லுயிஸ்ஞானசேகரம் (ஜேர்மனி), மற்றில்டா ஞானமலர் (மல்வம்), ஜெகமலர் (கனடா), ரதிமலர் (மல்வம்) , செல்வமலர் (கனடா), ஜெகசேகரம் (நெதர்லாந்து), குணசேகரம் (ஜேர்மனி), குணமலர் (கனடா) , டொனால்ட் விஜயசேகரம் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயும் பவளம், சின்னராசா, இராசமணி, காலஞ்சென்ற ஈஸ்வரி (சுன்னாகம்) மற்றும் பொன்னுத்துரை (மல்லாகம்), தவராசா (இந்தியா), வசந்தகுமாரி (ஜேர்மனி), விஜயபாலன் (கனடா), அன்ரன்ராசா (மல்வம்),பிரான்சிஸ்(கொழும்பு), றெஜினா (நெதர்லாந்து), அனி (ஜேர்மனி), பத்மநாதன் (கனடா),கஜி கலைஅரசி(சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சினி (நெதர்லாந்து),யூட்சுதர்ஷன்(சுவிஸ்லாந்து ), காலஞ்சென்றவர்களான யூட்கஷன்,யூலி சுதர்ஷினி மற்றும் அகிலன் (இந்தியா), மயூரி (இந்தியா),துளசி (இந்தியா), பரித்தா (இந்தியா),வினு (ஜேர்மனி),கீர்தனன் (கனடா), திவ்வியா (கனடா),கிளாட்வின் , நிதர்ஷன்,கெமல்ரன்(மாட்டீன் குருமடம்), பிரிசில்டா (கனடா),யெசோன் (நெதர்லாந்து), யெத்ரோன்(நெதர்லாந்து),எக்ஸ்சிபா(நெதர்லாந்து), மொலானி(ஜேர்மனி), மத்தியாஸ் (ஜேர்மனி),எவாஞ்சலி (ஜேர்மனி), மரிஷா(கனடா), மனிஷா(கனடா), றோகித் (சுவிஸ்), றொயேஸ் (சுவிஸ்), றதீஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் அஷேர் (நெதர்லாந்து), ஜொய்சி (நெதர்லாந்து), ஜயிஸ்(சுவிஸ்),சயூ (இந்தியா) பிரகதி (இந்தியா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.10.2015) வெள்ளிக்கிழமை காலை9.30 மணியளவில் தற்காலிக வசிப்பிடமான மல்வத்திலிருந்து மல்லாகம் புதுமைமாதா ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு 11.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக மல்லாகம் குளமங்கால் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மல்வம், உடுவில்.

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார்,உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட விரோதமாக மின்சாரம் மூவருக்கு அபராதம் விதிப்பு

சட்டவிரோத முறையில் மின்சாரத்தை பெற்றுக்கொண்ட பாசையூர், கந்தர்மடம் மற்றும் அரியாலைப் பகுதிகளைச் சேர்ந்த மூவர் கடந்த 4 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு கடந்த 5 ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அவர்கள் மூவரும் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். இதனையடுத்து 35 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், இலங்கை மின்சார சபைக்கு இழப்பீடாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறும் நீதிவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ஐ-103)

## நீதிமன்றத்தை அவமதித்தவருக்குச் சிறை

சாவகச்சேரி,ஒக்.08

நீதிமன்றக் கட்டளையை அவமதித்த பாலாவி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றினால் இரண்டு வாரங்கள் சிறைத் தண்டனை கடந்த 30 ஆம் திகதி விதிக்கப்பட்டுள்ளது. கொடிகாமம் பாலாவியைச் சேர்ந்த நபர் ஒருவர் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்ததாக கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் விசார ணையில் உள்ளது.

இந்த நிலையில் கடந்த மே மாதம், நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டு தினமும் கொடி காமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறு குறித்த சந்தேகநபருக்கு உத்தரவிடப்பட்டது. இந்த நபர் தொடர்ச்சியாக கையொப்பமிட பொலிஸ் நிலையத்துக்குச் செல்லவில்லை. இதனால் நீதிமன்றக் கட்டளையை உதாசீனம் செய்ததாக பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடச் செல்லாத குறித்த நபருக்கு எதிராக பொலிஸார் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் இரண்டு வாரங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## விழாக்குழு மற்றும் நிர்வாகக் குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.08

உலக தவில் மேதை லயஞான குபேர பூபதி தெட்சணாமூர்த்தியின் இறுவட்டு மற்றும் நூல் வெளியீட்டு விழா தொடர்பிலான ஆலோசனைக் கூட்டம், மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது தெரிவு செய்யப்பட்ட விழாக் குழுவின் தலைவராக எஸ்.சோமசுந்தரமும், செயலாளராக வை.சுப்பிரமணியமும்,பொருளாளராக் சி.முகுந்தனும் தெரிவு செய்யப்பட்டதுடன், 14பேர் கொண்ட நிர்வா கக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள் ளது. வெளியீட்டு விழாவை நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது டன் விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ள னர். (ஐ-ரி2)

## வீதியைப் புனரமைக்கக் கோரிக்கை

மாங்குளம்,ஒக்.08

அச்சுவேலி பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள வீதியைப் புனரமைத்துத் தருமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்போது மழைகாலமாதலால் அந்தப் பகுதியில் அதிகளவு வெள்ளம் காணப்படுகின்றது. இலங்கைப் போக்குவரத்துக்குச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலும், தனியார் பஸ்களிலும் பயணம் செய்து அந்த இடத்தில் இறங்குவோர் மழை வெள்ளத்துக்குள் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வீதியின் அருகே அமைக்கப்பட்டிருக்கும் நீர்வடிகால் பகுதியினூடாக நீரை வழிந்தோடச் செய்யுமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-422)


முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சின்னக்குட்டி சின்னத்தம்பி (C.T.B சின்னண்ணை)



திதி: ஏகாதசி

இவ்வுலக வாழ்க்கை நிலையில்லை என்றுணர்ந்தோம் அப்பா! பாசம் காட்டி எங்களை வளர்த்த அந்த நாள்கள் மீண்டும் ஒருமுறை எமக்குக் கிடைக்காதா அப்பா! மௌனமான எங்கள் அப்பாவே நிமிடத்துக்கு நிமிடம் உங்கள் பிரிவால் நாம் ஏழ்வரும் கதிகலங்கி நிற்கிறோம் அப்பா! நாம் இவ்வுலகை விட்டுப்பிரியும் வரை உங்கள் நினைவு எங்களை விட்டகலாது அப்பா!

(65077.11.15)

தந்தையாக 25.01.1932 — தெய்வமாக 19.09.2014

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பருத்தி ஓலை மயிலணி வீதி, சுன்னாகம்.



கண்ணீர் அஞ்சலி



சிவகுரு மணிமாறன் (மணி)

எமது சக உத்தியோகத்தர் திருமதி.ம.தமிழ்ச்செல்வி அவர்களின் கணவரின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவினால் துயருறும் மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.


## கலையரங்கை புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.08

பருத்தித்துறை நடராஜர் கலையரங்கை புனரமைத்துத் தருமாறு வடமராட்சி வடக்கு மகாத்மா காந்தி பொதுப்பணி மன்றத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். பருத்தித்துறையின் பிரசித்தமான பொழுதுபோக்கு மையமாகக் காணப்பட்ட குறித்த கலையரங்கை புனர்நிர்மாணம் செய்வதற்கு மாகாண சபை உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பருத்தித்துறை பிரதேச செயலர் மற்றும் பருத்தித்துறை நகராட்சி மன்ற செயலாளர் ஆகியோர் குறித்த கலையரங்க புனரமைப்புத் தொடர்பில்அக்கறைகாட்ட வேண்டுமென வும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-ரி5)


விண்ணக வாழ்வில் 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் சந்தியா மரியதாஸ்



மண்ணில் 1953.12.08

விண்ணில் 2015.09.08

கடந்த 08.09.2015 இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு சந்தியா - மரியதாஸ் அவர்களின் ஆன்மா இளைப்பாற்றி வேண்டி 08.10.2015 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

C90,300 வீட்டுத்திட்டம் நாவற்குழி.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உறவினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

எமது அன்புத் தெய்வம்

அமரர் துரைச்சாமி திருநாவுக்கரசு(சிற்ப ஆசாரியார்)

திதி : ஏகாதசி



ஆண்டொன்று மறைந்து விட்டது அப்பா அகலுமா உங்கள் பிரிவின் சோகம் மறையுமா உங்கள் நினைவின் பாசம் சிரித்த முகத்தோடு என்றும் சந்தனப் பொட்டுடன் இருந்தீர்கள் அன்பு அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர். காளி கோயிலடி, களபூமி, காரைநகர்.

தோற்றம் 08.02.1951 — மறைவு 19.10.2014



31ஆம் நாள் நினைவஞ்சலியும் இறைவழிபாட்டு அழைப்பும்



அமரர் அந்தோனிப்பிள்ளை வின்சன் கெனடி

(முன்னாள் பருத்தித்துறை நகரசபைத் தலைவர்)

மண்ணில் : 16.09.1964

விண்ணில் : 09.09.2015

எமது அன்பு மகனின் துயரச் செய்தி கேட்டு நேரடியாக வந்து துயர்தனைப் பகிர்ந்த அன்பு உறவுகளுக்கும் அயலூரில் இருந்து வந்து கருணையுடன் செயற்பட்ட நம் உள்ளங்களுக்கும், வெளி இடங்களிலிருந்து வந்து துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதோடு எமது இல்லத்தில் நாளை (09.10.2015) வெள்ளிக்கிழமை நடைபெறும் இறைவழிபாட்டில் கலந்து கொண்டு அவரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு எம்மால் நடத்தப்படும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இந்த அழைப்பை ஏற்று சகலரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சென்.அன்ரனீஸ் ஒழுங்கை, பருத்தித்துறை.

(62166,11,15)

ம.அந்தோனிப்பிள்ளை (தந்தை (ராசா)) மற்றும் குடும்பத்தினர்.


## கருத்தரங்கு

தொழில்துறை முயற்சியாளர்களுக்கான தெளிவூட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதில் முதலீட்டுச் சபை அதிகாரி, கைத் தொழில் அபிவிருத்திச் சபை அதிகாரி மற்றும் வங்கி அதிகாரிகள் பலர் பங்கு பற்றவுள்ளனர். (ஐ-ரி5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வேலணையில் நடைபெற்ற உணவு உற்பத்தி விழா



வேலணை,ஒக்.08

ஜனாதிபதியின் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ள உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் கீழான ஆரம்ப விழா பிரதேச ரீதியிலும் நடத்தப்பட்டது. அந்த வகையில் வேலணை பிரதேச செயலர் பிரிவின் கீழ்வரும் வேலணை வடக்கு கிராம உத்தி யோகத்தர் பிரிவில், உணவு உற்பத்தித் தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப விழா சிலுந்தா குளத்தின் வயல் வெளியில் நடைபெற்றது. பிரதித்திட்டப் பணிப்பாளர் மீரா திசை நாயகம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற விழா வில், வேலணை விவசாயி ஒருவர் பண்படுத்தப்பட்ட வயல் நிலத்தில் நெல் விதைப்பில் ஈடுபட்டார். நிகழ்வில் வேலணை கமநல சேவை நிலைய உத்தியோகத்தர் நா.முருகதாஸ், பிரிவுக் கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளன நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இதேவேளை– இந்த வேலைத் திட்டம் தென்மராட்சி பிரதேசத்திலும் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தில் தென்மராட்சி தெற்கு, கைதடி நாவற்குழி பிரிவில் பிரதேச செயலரினால் நெல் விதைப்பு வேலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பெரும் எண்ணிக்கையான நெற்செய்கையாளர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர். கடந்த 5 ஆம் திகதி அன்று கிளிநொச்சி மாவட்ட இரணைமடு, வட்டக்கச்சிப் பகுதியில் உணவு உற்பத்தி தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ–167–9)

## நெடுந்தீவில் அபிவிருத்திகள் ஆரம்பம்

நெடுந்தீவுப் பிரதேசத்தில் நீண்ட காலமாக இழுபறியில் இருந்து வந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக நெடுந்தீவு மேற்கு குடாக் கேணிக் கிணறு பிடாரி அம்பாள் கோயில் வீதி, மீனவர் நலன்கருதி இரண்டு கலங்கரை விளக்குகள் அமைப்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் மகா வித்தியாலய விளையாட்டரங்கில் மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான வேலைத் திட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதேவேளை– நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனக் கிராமத்துக்கான பிரதான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருப்பதாகவும், மழைகாலம் ஆரம்பித் துள்ள நிலை யில், இந்த வீதியால்பொது மக்கள் போக்கு வரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த வீதி மட்டு மல்ல, வேறு சில வீதி களும்புனரமைக்கப் பட வேண்டியுள்ளன. இதற்கான நடடிக்கைகளை மேற் கொள்ள சம் பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள இருப்பதாகவும் நெடுந் தீவுபிரதேச செயலர் செ.ஜெயகாந்த் தெரிவித்துள்ளார். (ஐ–7)


**வீடு விற்பனைக்கு**

நல்லூர் ஆலயச் சூழலுக்கு அண்மையில் 2 பரப்புக் காணியுடன் 5 அறைகளுடன் மாபிள் பதித்த நல்ல தண்ணீர் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு: 077 802 5788 077 919 5868

**வேலையாள்கள் தேவை**

கட்டட தொழிலாளர் தேவை(யாழ்ப்பாணம்)

* மேசன்
* கூலி

தொடர்பு: 076 895 6719 (65405)(14.15.17)

**தேவை**

நிறுவனமொன்றுக்கு சிங்களம் தெரிந்த Clerk விற்பனை முகவர்களும் உடன் தேவை.

தொடர்பு: 077 727 6519 (65404)(14.15)

**தேவை**

Scooty or TVS WEGO Or HONDA DIO நல்ல நிலையில் இருந்தால்

தொடர்பு : 071 856 5375


**பெயர்மாற்றம்**

காவில் தோட்டம் கரணவாய் கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த ஐயாத்துரை பழனி அப்பன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை ஐயாத்துரை நடராசா என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பம் இடுவேன் எனவும் இத்தால் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்

ஐ. நடராசா

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளின்படி வடக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் ஆகிய திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகிய நான் 1983ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கம் கொண்டதும், 1992ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கம் கொண்டதுமான கூட்டுறவுத் திருத்தச் சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சட்டத்தின் ஏற்பாடுகளிற்கமைய எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மேற்படி சங்கத்தின் துணைவிதி பிரிவு 23 இற்கமைய சங்கத்தின் சகல கிளைகளிற்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களிற்கு தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையைக் கோருவார். இவ் ஒன்பது உறுப்பினர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் (09) ஒன்பது பேரிற்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்பட்ட வர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளரிற்கும், எனக்கும் எழுத்துமூலம் அறிவிப்பார்.

### கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

**கூட்டம் நடைபெறும் திகதி :- 11-10-2015, ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் :- முற்பகல் 10.00 மணி**

| கிளை இல | கிளையின் பெயர் | இடங்களின் விவரம் | திகதி | நேரம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|---|
| 01 | தென்மராட்சி | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.சி.சிறீதரன் |
| 02 | சாவகச்சேரி தெற்கு | சர்வசாதனா சனசமூக நிலையம் நுணாவில் கிழக்கு | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திருமதி.ஞா.ஜெயாமேரி கொன்சி |
| 03 | நுணாவில் கிழக்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.பொ.கோகுலன் |
| 04 | நுணாவில் ஜோதி | வீரபத்திரர் அறநெறிப் பாடசாலை மண்டபம் நுணாவில் மேற்கு | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.க.கமலநாதன் |
| 05 | கைதடி நுணாவில் | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.க.பாலகிருஸ்ணன் |
| 06 | மீசாலை கிழக்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.ச.பாலகுமார் |
| 07 | வேரக்கேணி | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.நா.குமணதாஸ் |
| 08 | மலர்மகள் | கலைமகள் சனசமூக நிலையம் மட்டுவில் தெற்கு | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.கு.நிசாந்தன் |
| 09 | சோமஸ்கந்தா | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.இ.தயாகரன் |
| 10 | மட்டுவில் வடக்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.வே.பிரதீஸ்குமாரன் |
| 11 | சரசாலை மட்டுவில் | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.ச.சசீந்திரன் |
| 12 | சரசாலை தெற்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.அ.தயாளன் |
| 13 | சரசாலை வடக்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.பா.சிவபாலன் |
| 14 | மோகனதாஸ் | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.க.சசிகரன் |
| 15 | கல்வயல் | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.பா.வாகீசன் |
| 16 | சாவகச்சேரி வடக்கு | கிளை இயங்கிய கட்டிட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.ம.கபிலன் |
| 17 | வேம்பிராய் | பாரதி சனசமூகநிலைய மண்டபம் வேம்பிராய் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.ச.ரதிகுலன் |
| 18 | மீசாலை வடக்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.வீ.இரத்தினகாந்தன் |
| 19 | மீசாலை மேற்கு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.அ.விமல்ராஜ் |
| 20 | சாவகச்சேரி வடகிழக்கு | கிளை இயங்கிய கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.க.திசாகரன் |
| 21 | சங்கத்தானை | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.தி.வித்தககலாநிதி |
| 22 | சப்பச்சிமாவடி | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.தா.தவமன்னன் |
| 23 | கோயில் குடியிருப்பு | கிளைக் கட்டட முன்றல் | 11.10.2015 | மு.ப 10.00 மணி | திரு.பா.சிறிக்குமார் |

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்குச் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித் தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காதுவிடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாக கொண்டு சமுகமளிக்க முடியும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
முதியோர் இல்ல வளாகம்,
கைதடி.

திருமதி.மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்(வ-மா).

(C/18712)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2016

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2015 நவம்பர் 30 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருள்கள் காகிதாதிகள்**

- 1.1 எழுதுபொருள்கள் காகிதாதிகள்.
- 1.2 வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்படசமையலறைப் பாத்திரங்கள்.
- 1.3 சுகாதார சேவை வழங்கல் தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், ஹார்பபிக், விம் முதலியன.
- 1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

- 2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
- 2.2 புத்தகங்கள், பருவவெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
- 2.3 புத்தகங்களையும், பருவவெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக இயந்திரங்கள்**

- 3.1 அலுவலக தளபாடம் - மரம் உருக்கு–கணினி மேசை, கதிரைகள்.
- 3.2 அலுவலக உபகரணங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
- 3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.
- 3.4 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருள்கள்.
- 3.5 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருள்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
- 3.6 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
- 3.7 தொலைபேசி உபகரணங்களும் கையடக்க தொலைபேசிகளும் வழங்கல்.
- 3.8 கணினிவலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

**4. கட்டடபொருள்கள் மற்றும் கருவிகள்**

- 4.1 சகல வகையான கட்டட நிர்மாண பொருள்கள்.
  - a. பெயின்டுகள் வானிஸ், தொடர்பான பொருள்கள்.
  - b. கட்டடப் பொருள்கள் (மணல் செங்கல், உலோகம், சுண்ணாம்பு, கூரை சார்ந்த பொருள்கள் முதலியன).
  - c. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்.
  - d. பைப்புகள், பைப் இணைப்புகள்.
  - e. மரங்கள் - தீராந்தி, பனைமரம், சலாகைகள்.
  - f. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்.
  - g. அலுமினியம் பொருத்துகள், மட்பாண்டப் பொருள்கள் கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்.
  - h. குளியலறை பொருத்துகள், சுவர், தரைமாபிள்கள்.

**5. மின்னியல் பொருள்கள்**

மின்சாரசாதனம் உபகரணங்கள் மற்றும் உதிரிபாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருள்கள் /சாதனங்கள்.**

- 6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
- 6.2 ஆய்வு கூட இரசாயனபொருள்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகனபராமரிப்பு**

- 7.1 டயர் ரியூப்புகள், பற்றரிகள்.
- 7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
- 7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
- 7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.
- 7.5 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
- 7.6 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**

- 8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
- 8.2 விளையாட்டு மற்றும் நலன்புரிபொருள்கள். புடைவைகள், ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத் துணிகள்.
- 8.3 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள்.
- 8.4 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணினி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
- 8.5 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
- 8.6 கதிரைகள் பின்னுதல்.
- 8.7 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
- 8.8 உடைகளைச் சலவைசெய்தல்.
- 8.9 சுத்திகரிப்புசேவை வழங்கல்.
- 8.10 பாதுகாப்புசேவை வழங்கல்.

**9. ஏந்திரவியல் சேவைகள்.**

- 9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
- 9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட.
- 9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
- 9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
- 9.5 இயந்திரங்கள், தொடர்பாடல் உபகரணங்கள், Lift திருத்துதல்.
- 9.6 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள் நிர்மாணித்தலும், திருத்த வேலைகளும்.
- 9.7 மின்சார இணைப்பு வேலைகள்.
- 9.8 நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்தவேலைகள்.
- 9.9 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும், பொருத்தலும்.
- 9.10 கட்டடங்கள்/ கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
- 9.11 மின்சார உசாத்துணை சேவைகள்.
- 9.12 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்துதல் / தச்சுவேலை.
- 9.13 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
- 9.14 கறையான் /பீடைகள் ஒழிப்புவேலைகள்.
- 9.15 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா மற்றும் காவலாளிகள்.
- 9.16 பராமரிப்பு வேலைகளிற்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

1. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் **"வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவு செய்தல் 2016"** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப் படல் வேண்டும்.
   - ❖ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.
2. ஒவ்வொரு வகையான வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேணடும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 2,000/= பெறுமதியான காசுக் கட்டளை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்** எனும் பெயருக்கு பெறப்பட்டு யாழ். தபாற் கந்தோரில் மாற்றக் கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.
3. விலைமனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.
4. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்க தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருள்கள் / சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் /சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.
5. விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக் கழக வவுனியா வளாகத்தில் வேலைகளை செய்ய அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை/ பிரதான காரியாலய விலாசம் / அம்மாவட் டத்திற் குரிய வியாபார பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
6. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவிய லாளர், கட்டிடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவை கள் இலக்கம் 9.7 இற்குமட்டும்) தருக.
7. சேவைகளை/வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்பு கொள்ளவும்.

தொ. பே. இல. 0212226519.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
### வழங்குநர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2016

**01. தனிப்பட்ட தகவல்கள்**

1.1 முழுப்பெயர் :...........................................................................
1.2 தே.அ.அ. இல :...........................................................................
(தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
1.3 விலாசம்:...........................................................................
1.4 நிரந்தர தொலைபேசி இல:............ கைத் தொலைபேசி இல:..............
தொலைநகல்:..............................

**02. வியாபார தகவல்கள்**

2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:..........................................
2.2 பதிவு இல:...........................................................................
2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:..................................................
2.4 விலாசம்:...........................................................................
2.5 நிரந்தர தொலைபேசி இல:.............. கைத்தொலை பேசி இல:..............
தொலைநகல்: ......................
2.6 மின்னஞ்சல் முகவரி:..................................................
2.7 மாவட்டம்:...........................................................................
2.8 பிரதேசசெயலர் பிரிவு:..................................................

குறிப்பு: வியாபார பதிவு சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும். இணைக்கப்படாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**03. மேலதிக விவரங்கள்**

3.1 வங்கியாளரின் பெயர் :..................................................
3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :..........................................
3.3 ICTAD பதிவு இல :..................................................
(எந்திரவியல் சேவை 9.3 இற்குமட்டும்.) ICTAD பதிவு இல்லாது விடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) இற்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியுடையவராவார்.

**04. வழங்கல் சேவைகளுக்கான விவரங்கள்.**

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

05. வழங்கப்படும் பொருள்கள் பல்கலைக் கழகத்தில் ஒப்படைக்க வேண்டும்

நான் /நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன் / இணங்குகின்றோம்.

கையொப்பம் :..........................................
பெயர் :..........................................
திகதி:..........................................

(G/18705)(10.15.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைபேசி இலக்கம் இல்லாமல் வாட்ஸ்- அப் பயன்படுத்துவது எப்படி?




இன்று உலகளவில் பலரும் வாட்ஸ்– அப் செயலியைப் பயன்படுத்தி வருகின்றனர். இதன் பயனாளிகள் அதிகமாகி வரும் நிலையில் அதற்கேற்ற விழிப்புணர்வும் அதிகம் தேவைப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு வாட்ஸ்– அப்பைப் பயன்படுத்தத்தக்க பல யோசனைகளைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள்.

அலைபேசி இலக்கம் இல்லாமல் வாட்ஸ்– அப்பைப் பயன்படுத்த முடியும் என்பது உங்களுக்கு தெரியுமா?. சிம் கார்ட் இல்லாமல், அலைபேசி இலக்கம் பயன்படுத்தாமல், வாட்ஸ்– அப்பைப் பயன்படுத்த முடியும். அலை பேசி இலக்கம் இல்லாமல் வாட்ஸ்– அப்பைப் பயன் படுத்துவதற்கு:-

1. முதலில் வாட்ஸ்– அப் செயலியை அன்இன்ஸ்ரோல் செய்து மீண்டும் இன்ஸ்ரோல் செய்யுங்கள்.
2.சரிபார்க்கும்போது உங்களது அலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்யுமாறு கேட்கப்படும்.
3. இந்தச் சமயத்தில் உங்களது அலைபேசியை ப்ளைட் முடில் வைத்து விடுங்கள், இது உங்களது அலைபேசியில் இருந்து குறுந்தகவல்கள் வெளியேறாமல் பார்த்துக் கொள்ளும்.
4. இதை மேற்கொள்ளும் முன் உங்களது அன்ரோயிட் கருவியில் ஸ்பூவ் (Spoof) இன்ஸ்ரோல் செய்திருக்க வேண்டும்.
5. வாட்ஸ்– அப்பைச் சரிபார்க்க இந்தமுறை, வேறு முறையை பயன்படுத்த வேண்டும்.எஸ். எம். எஸ் ஊடானதேடலைச் (Verification through SMS) சரிபார்த்து இந்தத் தடவை உங்களது மின்னஞ்சல் முகவரியைக் கொடுக்க வேண்டும்.
6. அடுத்து கொஞ்ச நேரம் கூடக் காத்திருக்காமல் கன்சல் பட்டனை அழுத்த வேண்டும், க்ளிக் செய்தவுடன் முழுச் செயல்முறையும் நிறைவு பெற்று விடும்.
7.இப்பொழுது உங்களது பேசியில் ஸ்பூவ் செயலியை ஓபின் செய்து கீழே கொடுக்கப் பட்டுள்ளவாறு டைப் செய்யுங்கள்
8. ஸ்பூவ் அப்பைச் சரிபார்க்கும் பதிவு எண்களைப் பெற்று விடும், இதன் பின் எந்தவித அலைபேசி இலக்கமும்இல்லாமல்வாட்ஸ்–அப்பைப்பயன்படுத்தமுடியும்.

## கணினியின் வேகத்தை அதிகரிக்க

கணினியில் பல தொழில்நுட்பம் வந்துவிட்ட நிலையில் அவற்றின் குறைவான வேகம் சிலருக்குப் பிரச்சினையாக இருக்கும். இந்தப் பிரச்சினையை கணனியின் யூபுனி அளவை அதிகரிக்கும் பொழுது சரி செய்யலாம். யூபுனி வாங்குவதற்கு உங்களிடம் போதுமான பணம் இல்லையென்றால், உங்கள் Pen drive வை நீங்கள் RAM ஆக பயன்படுத்தும் வசதி உள்ளது.

1. குறைந்தது 2GB உள்ள உங்கள் Pendrive வின் அனைத்துத் தகவல்களையும் அழித்துவிட்டு அதை கணினியின் USB port டுடன் பொருத்தவும்.
2. இப்பொழுது MY COMPUTER ஐ Right click செய்து அந்த menu வில் உள்ள Properties CB யைக் click செய்யவும். அப்போது திறந்துகொள்ளும் புதிய விண்டோவில் advanced system setting என்பதைகிளிக்செய்யவும்.
3. System properties menu வில் உள்ள advanced என்ற tab ஐக் click செய்யவும்.
4. அடுத்ததாக தோன்றும் window வில் performance க்குகீழேயுள்ள setting கைக் click செய்யவும்.




5. Performance window வில் மீண்டும் advance tab சென்று virtual memmory -க்கு கீழாக உள்ள change யை click செய்யவும்.
6. அடுத்ததாக தோன்றும் window வில் உள்ள உங்களின் pendrive தோற்றத்தை select செய்து custom size யை தெரிவு செய்யவும்.
7. Initial Size : 1020, Maximum size : 1020 என மாற்றம் செய்யவும். இந்த அளவை உங்களின் pendive அளவைப் பொறுத்து மாற்றி அமைக்கலாம்.
8. set என்பதை click செய்து கடைசியாக ok செய்தவுடன் கணினியை restart செய்யவும்.

இப்பொழுது உங்கள் கணினியின் செயற்றிறன் அதிகரித்திருப்பதை நீங்கள் நிச்சயம் உணர்வீர்கள்.

## எந்த மொழியில் பேசினாலும் தமிழ் மொழியில் கேட்கலாம்

ஸ்கைப் பற்றி நிச்சயம் நீங்கள் அறிந்திருப்பீர்கள் எனலாம். உலகம் எங்கும் இருக்கும் எவரிடம் வேண்டுமானாலும் இலவசமாக வீடியோ அழைப்புச் செய்ய இது உதவும். முன்னணி நிறுவனமான மைக்ரோசொப்ட், தனது ஸ்கைப் சாப்ட்வேரில் எதிர் முனையில் பேசுபவர் எந்த மொழியில் பேசினாலும் உடனடியாக அது அடுத்த முனையில் பேசுபவரது மொழிக்கு மாற்றம் செய்து அவர் தெரிவு செய்த மொழியில் கேட்கும் அமைப்பை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கான சோதனை முயற்சிகள் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து நடைபெற்று வந்து, தற்போது டெமோ வெர்ஷன் வெளியிட்டுள்ளதாக மைக்ரோசொப்ட் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனை மைக்ரோசொப்ட் சிஇஓ ஆங்கிலத்தில் பேசி எதிர்முனையில் ஜேர்மன் மொழியில் கேட்டு டெமோ வெர்ஷனை தொடக்கி வைத்தனர். இனி பேச மொழி ஒரு தடையில்லை என்ற சூழலை மைக்ரோசொப்ட் உருவாக்கியுள்ளது. அதாவது ஸ்கைப்பில் நீங்கள் ஒருவருடன் தமிழில் உரையாடினால் அவருக்கு ஆங்கிலம் மட்டுமே தெரியும் என்றால் Language Mode ல் ENGLISH என்று அவர் மாற்றினால் போதும். அவருக்கு நீங்கள் பேசும் மொழி ஆங்கிலத்தில் கிடைக்கும் இந்த வருடத்துக்குள் இதற்கான அப்டேட் அனைத்து ஸ்கைப் கணக்கு யூஸருக்கும் கிடைக்கும் என மைக்ரோ சொப்ட் அறிவித்துள்ளது.

# ஆசிரியர்களைக் கௌரவிக்கும் சிறப்பு இறுவட்டு வெளியீடு



சாவகச்சேரி,ஒக்.08

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விதமாக யாழில் சிறப்பு இறுவட்டு வெளியிடப்பட்டுள்ளது. தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட "அன்பாசான்" எனும்ஆசிரியர்புகழ் மாலை இறுவட்டு வெளியீடு ஆசிரியர் தினமான நேற்று முன்தினம் இடம்பெற்றது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ண குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அன்பாசான் இறுவட்டை வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் வட மாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் மு.இராதாகிருஷ்ணன், ஓய்வுநிலை மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வடமாகாண நிதிப்பிரிவு பிரதி பிரதம செயலாளர் இ.பத்மநாதன், மாகாண மேலதிக கல்விப் பணிப் பாளர் திருமதி இரேனியஸ் செல்வின் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் [illegible] அமைக்கப்பட்டு–கல்லூரி [illegible] மாணவர்களால் பாடப்பெற்று–இந்த இறுவட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஜ–9)

## மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சு நிதியுதவி

சாவகச்சேரி,ஒக்.08

எழுதுமட்டுவாழ் பகுதியில் மீளக் குடியமர்ந்த 20 குடும்பங்களுக்கு மலசலகூடம்அமைக்கமீள்குடியேற்ற அமைச்சினால் நிதி வழங்கப்பட்டு, பயனாளிகள் மலசலகூடங்களை அமைத்து வருகின்றனர். ஒவ்வொரு பயனாளிக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டு மலசலகூடம் அமைக்கப்பட்டு வருகிறது. மீளக்குடியமர்ந்த 79 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தலா ஒரு லட்சம் ரூபா வீதம் மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது (ஜ–9)

## நெடுந்தீவில் அறநெறிப் பாடசாலை ஆரம்பிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

நெடுந்தீவு மத்தி கிழக்குப் பகுதிகளில்உள்ள இந்து மதத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கென அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம், செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் என்பவற்றின் அனுசரணையுடன் இந்த அறநெறிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ். இணைப்பாளர் தியாகலிங்கம் தலைமையில் நெடுந்தீவு மத்தி பெருக்கடி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அறநெறிப் பாடசாலையில் எழுபது மாணவர்கள் இணைந்து கொண்டுள்ளனர். மாணவர்களுக்கான சீருடைகளை செல்வச் சந்நிதி ஆச்சிரம சுவாமிகள் வழங்கியுள்ளார்.

நீதி நெறி நூலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஜ–7)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக்.08

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால், தவகல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தக் கற்கை நெறி யாழ்ப்பாணம் தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கற்கை நெறியை கற்க விரும்புபவர்கள் தங்களது பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம் இல. 12 கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஜ–ரி6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய பசுபிக் வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து



வொஷிங்டன், ஒக்.8
உலகின் பொருளாதாரத்தில் 40 சத வீதமான வர்த்தக நடவடிக்கைகளை தாராளமயமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தாராளமய வர்த்தக ஒப்பந்தம் அமெரிக்கா உள்ளிட்ட 12 நாடுகளிடையே கடந்த திங்கட்கிழமை கையெழுத்தானது.
அமெரிக்கா மற்றும் 11 பசுபிக் பிராந்திய நாடுகளான கனடா, மெக்சிகோ, பெரு, சிலி, ஜப்பான், வியட்நாம், புருனே, மலேசியா, சிங்கப்பூர், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவை இணைந்து இந்த தாராள வர்த்தகம் செய்யத் திட்டமிட்டுள்ளன.
இதற்கான ஏற்பாடுகளில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டு வந்த நிலையில், ஜனாதிபதி பராக் ஒபாமா உலக நாடுகளின் தலைவர்களுடனும் இது தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். தாராள வர்த்தகம் தொடர்பில் கடந்த 8 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும், தற்போதே சுமூக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.
வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தமாகக் கருதப்படும் தாராள வர்த்தக ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் வேலைவாய்ப்புகள் உருவாகும் அதேவேளை விரைவான நிலையான வளர்ச்சியும் ஏற்படும். (ற-ரி4)

## ஆட்குறைப்பு அறிவிப்பை வெளியிட்ட எயார் பிரான்ஸ் நிர்வாகிகள் மீது தாக்குதல்

### சட்டை கிழிந்த நிலையில் வேலி ஏறித் தப்பினர்

பாரிஸ், ஒக்.8
பிரான்ஸ் மற்றும் டச்சு நாடுகளின் எயார் பிரான்ஸ் கே.எல்.எம். நிறுவனத்தின் செலவினத்தைக் குறைக்க 2 ஆயிரத்து 900 ஊழியர்களுக்கு 2017ஆம் ஆண்டு கட்டாய ஓய்வு வழங்கப்படுவது தொடர்பான அறிவிப்பை வெளியிட்ட நிர்வாக அதிகாரிகள், அந்த நிறுவனத்தின் ஊழியர்களால் தாக்கப்பட்டனர். தாக்குதலுக்கு இலக்காகி சட்டை கிழிந்த நிலையில் பாதுகாப்பாளர்களின் உதவியுடன் கம்பி வேலி மீது ஏறி நிர்வாகிகள் தப்பிக்க முயற்சிக்கும் புகைப்படங்கள் தற்போது வெளிவந்துள்ளன.
ஐரோப்பாவின் இரண்டாவது, நீண்ட தூர விமான சேவைகளை நடத்தும் விமான நிறுவனமாக எயார் பிரான்ஸ் கேஎல்எம். நிறுவனம்




செயற்பட்டு வருகிறது. எனினும், நீண்ட பயணத்தை குறைந்த செலவில் அளிக்கும் மற்ற நிறுவனங்களுடன் இதனால் போட்டி போட முடியாதுள்ளது.
அதிக நட்டத்தை ஏற்படுத்திவரும் ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்ற ஐந்து பாதைகளில் பறப்பை மேற்கொள்ளும் ஒன்பது டிரீம் லைனர் விமானங்களும் பத்து ஜெட் விமானங்களும் சேவையில் இருந்து நிறுத்தப்படவுள்ளன என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. இதனால் ஆயிரத்து 700 அலுவலக ஊழியர்களும், 900 விமானக் கட்டுப்பாட்டு அறை ஊழியர்களும் மற்றும் 300 விமானிகளும் வேலையிழப்பைச் சந்திக்க நேரிடும் எனத் தெரியவந்துள்ளது.
அதையடுத்தே பணியாளர்கள் ஆத்திரமடைந்து நிர்வாகிகளைத் தாக்கியுள்ளனர். நிர்வாகிகளின் சட்டையைக் கிழித்து, ஆக்ரோஷமாக நடந்துகொண்ட ஊழியர்கள் மீது விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.
கடந்த ஆண்டு இந்த நிறுவனத்தின் விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் மிகப் பெரிய நட்டத்தைச் சந்தித்திருந்தது. (ற)

## ரூ. 17 கோடிக்கு ஏலம் போன டைட்டானிக்கின் 'மெனு கார்ட்'



நியூயோர்க், ஒக். 8
மக்களை வாய் பிளக்க வைத்த உலகின் மிகப்பெரிய கப்பல் என்ற பெருமையைப் பெற்றது டைட்டானிக் கப்பல். அந்தக் கப்பலில் இருந்த உணவு விவர அட்டையொன்று (மெனு கார்ட்) சுமார் 17 கோடி ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.
இங்கிலாந்தில் உள்ள சவுத் ஹாம்ப்டன் துறைமுகத்தில் இருந்து நியூயோர்க் நகருக்குச் சென்றுகொண்டிருந்தபோது 1912ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதி பனிப்பாறை மீது மோதி அந்தக் கப்பல் விபத்துக்குள்ளாகி கவிழ்ந்தது.
இந்த விபத்தில் டைட்டானிக் கப்பலில் பயணம் செய்த பயணிகள், கப்பல் ஊழியர்கள், கப்பல் தலைவர் உட்பட ஆயிரத்து 503 பேர் உயிரிழந்தனர்.
அந்த விபத்து நிகழ்ந்த நாளில் முதல் வகுப்பு பயணிகளுக்கு பரிமாறப்பட்ட உணவு விவர அட்டைகளில் ஒன்று, டைட்டானிக் கப்பலில் பயணம் செய்து தப்பித்த ஆபிரகாம் லிங்கன் சாலமன் என்ற பயணியிடம் இருந்தது. அந்த மெனு கார்ட் தற்போது ஒன்லைன் மூலம் 5,82,000 பவுண்ஸ்களுக்கு ஏலம் போயுள்ளது. (ற)



நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் 'பேஸ்புக்' பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள இந்தப் புகைப்படம் பிரபல்யம் அடைந்துள்ளது. கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதி சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து நிக்கான் டி–4 கமராவின் மூலமாக (28 மில்லி மீற்றர் லென்ஸ்) எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்திற்கே தற்போது பிரபல்யம் அதிகரித்துள்ளது. இரவு நேரத்தில் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படத்தில் இந்தியா–பாகிஸ்தான் எல்லை தெளிவாகப் பதிவாகியுள்ளது. இரவு நேரத்தில் எடுக்கப்பட்ட இந்த புகைப்படத்தில் இந்தியா–பாகிஸ்தான் எல்லையில் ஒளிரும் விளக்குகளின் வெளிச்சம் செம்மஞ்சள் நிறத்தில் தோற்றமளிப்பது காண்பவர்களுக்கு பரவசமான உணர்வைத் தருகிறது. உலகின் சில நாடுகளின் எல்லை மட்டுமே விண்வெளியில் இருந்து படமாக்கப்படும் போது தெளிவாகத் தெரியும். (ற)





200க்கும் மேற்பட்ட புதிய உயிரினங்கள் கிழக்கு இமயமலைப் பிரதேச...
பூட்டான், வட கிழக்கு இந்தியா, நேபாளம், மியன்மாரின் வடபகுதி, தெற்கு...
களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த புதிய இனங்கள் கண்டுபிடிக்...
நிற மூடைய குரங்கு, பன்றி மூக்கை உடைய எலி போன்றனவும் அவற்று...
களும், 26 மீன் வகைகளும், 10 ஊருடக வாழிகளும், 39 முதுகெலும்பற்ற உ...

## மேற்கு ஆபிரிக்க விளையாட்டு... திருப்பி அனுப்ப பிரிட்டன் அரசு ...

எபோலா நோயால் குடும்பத்தை இழந்து பிரிட்டனில் அடைக்கலம் புகுந்த ஒருவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு பிரித்தானிய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித் துள்ளது.
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்று சிராலியோன். 2013ஆம் ஆண்டு உலகையே உலுக்கிய எபோலா நோய்க்கு இந்த நாட்டில் வசிப்பவர்களே அதிக எண்ணிக்கையில் உயிரிந்தனர்.
அந்த நாட்டை சேர்ந்த ஜிம்மி தொ ரோன்கா என்பவர் தடகள விளையாட்டுப் போட்டியில் முன்னணியில் உள்ள ஒரு வீரராவர். துரதிர்ஷ்ட வசமாக எபோலா நோய் தாக்கியதில் அவரது குடும்பத்தை சேர்ந்த 8 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த நிலையில் 2014ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டு போட்டி களில் பங்கேற்க பிரிட்டனுக்கு அவர் வந்துள்ளார். பிரித்தானியாவில் அடைக்கலம் பெற்று விளையாட்டு போட்டிக ளில் பங்கேற்கும் வகையில் அந்த நாட்டு அரசு முறையான விசா வழங்கியிருந்தது. ஆனால் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற நேரத்தில் அதில் பங்கேற்காமல் ...
காணாமல் போயுள்ளார். ...
மார்ச் மாதம் லண்டன் நகரி...
ஜிம்மியை பொலிஸார் கை...
னியாவில் தொடர்ந்து தங்...
காலத்தை நீடித்துப் கொள்...
செய்துள்ளார். ஜிம்மியின்...
பார்த்த அதிகாரிகள், புலம்...
களுக்கு எதிராக ஆவணங்...
அவருக்கு விசா வழங்க மறு...
எபோலா நோயால் குடும்பத்...
நேரத்தில், தன்னைத் தாய்நாட்...
னால் அங்கே தனக்கு ஆதர...
என்றும், விளையாட்டுத் துறை...
என்ற தனது லட்சியமும் நிறை...
கூறி யுள்ளார். பிரித்தானிய...
யேறும் எண்ணம் இல்லை...
தன்னை நாடுகடத்த முய...
கொள்ளத் தயாராக இருப்...
வட்டமாகக் கூறியுள்ளார்.



இந்திய விமானப் படையின் 83ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் இன்று நடைபெற...
முன்தினம் புதுடில்லியில் விமானப் படையினர் ஒத்திகை நிகழ்வில் ஈடுபட்டபோது ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







...பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று உலகளாவிய உயிர் பல்வகைமை அமைப்பு தெரிவித்துள்ளது. ..., தெற்கு திபெத் ஆகிய பிரதேசங்களில் உயிர் பல்வகைமை ரீதியாகவும், சுற்றுச் சூழல் ரீதியாகவும் விஞ்ஞானி... ...டுபிடிக்கப்பட்டுள்ளன. நடக்கும் மீன், காற்றைச் சுவாசித்து 4 நாள்கள் நிலத்தில் வாழக் கூடிய மீன், வெள்ளை ... அவற்றுள் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. 211 புதிய இனக் கண்டுபிடிப்புகளில், 133 தாவர வகை ...பற்ற உயிரிகளும், ஊர்வன, பாலூட்டி, பறவை இனங்களில் தலா ஓர் உயிரியும் கண்டு பிடிக்கப் பட்டுள்ளன.(ற–ரி4)

# இஸ்லாமியர்களுக்கு அனுமதி வேண்டாம்

## ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்




பெர்லின், ஒக்.8

இஸ்லாமியர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்குவது என்பது ஒட்டுமொத்த ஐரோப்பிய நாடுகளும் தற்கொலை செய்து கொள்வதற்கு சமம் என்று தெரிவித்து ஜேர்மனியில் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

ஜெர்மனியில் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக செயல்படும் பெகிடா என்ற அமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்தப் போராட்டத்தில் ஜேர்மனி பிரதமர் ஏஞ்சிலா மெர்கலுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார ரீதியில் வலிமை மிக்க நாடான ஜேர்மனியில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இஸ்லாமியர்களுக்கு புகலிடம் அளிக்கப்படும் என ஏஞ்சிலா மெர்கல் அறிவித்திருந்தார். இது ஜெர்மனிய மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எனக் கூறிய ஆர்ப்பாட்டக்காரர்கள், வெளிநாட்டு மக்களுக்கு அடைக் கலம் அளிப்பதன் மூலம், உள்நாட்டு குடி மக்களுடைய குழந்தைகளின் எதிர்காலத்தை இந்த அரசு சீரழிக்க முயற்சித்து வருகிறது என க்குற்றம் சாட்டியுள்ளனர்.

(ற–ரி4)

# ...ட்டு வீரரை ...சு உத்தரவு

...ற்காமல் அவர் திடீரென மாயமாக ...ள்ளார். அதன் பின்னர் கடந்த ...ன் நகரில் கண்டு பிடிக் கப்பட்ட ...ார் கைது செய்தனர். பிரித்தா...ந்து தங்குவதற்கு தனது விசா ... கொள்வதற்காக விண்ணப்பம் ...மியின் விண்ணப்பத்தை சரி..., புலம் பெயர்வு விதிமுறை ...வணங்கள் இருப்பதாக கூறி ...ங்க மறுத்துள்ளனர்.

...டும்பத்தை இழந்திருக்கும் இந்த ...ாய்நாட்டுக்குத் திருப்பி அனுப்பி...த் ஆதரவாக எவரும் இல்லை ...டுத் துறையில் சாதிக்க வேண்டும் ...ம் நிறைவேறாது எனவும் அவர் ...தானிய நாட்டைவிட்டு வெளி... இல்லை என்றும் அதிகாரிகள் ...த முயன்றால் அதனை எதிர்...க இருப்பதாகவும் ஜிம்மி திட்ட...ளார். (ற–ரி4)



...டபெறவுள்ள நிலையில் நேற்று ...போது எடுக்கப்பட்ட படம். (ற)

# ஒரு வயதுக் குழந்தையின் முறிந்த கழுத்து இணைப்பு

## ஆஸ்திரேலிய மருத்துவர்கள் சாதனை



மெல்போன், ஒக்.8

கழுத்து முறிவடைந்த ஒரு வயதுக் குழந்தைக்குச் சத்திர சிகிச்சை மூலம் கழுத்துப் பொருத்தப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய மருத்துவர்கள் இந்தச் சாதனையைச் செய்துள்ளனர்.


ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆண்ட்ரூ ரிலியா தம்பதியின் மகன் ஜாக்சன் டெய்லர். இவன் பிறந்து ஒரு வயது 4 மாதம் ஆகிறது. இவன் கடந்த மாதம், தனது தாயார் ரிலியா மற்றும் தங்கையுடன் காரில் சென்று கொண்டிருந்தான். அப்போது இவர்களது கார் மற்றொரு காருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. அதில் ஜாக்சன் டெய்லரின் தலை கழுத்துக்குள் முறிந்தது.பொதுவாக இது போன்று விபத்துக்குள்ளானவர்கள் உயிர் பிழைப்பது இல்லை. அந்த இடத்திலேயே இறந்து விடுவார்கள். ஆனால் குழந்தை ஜாக்சன் உயிருடன் இருந்தான்.

அவனை விமானம் மூலம் பிஸ்டேன் நகரில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தனர். பரிசோதித்த வைத்தியர்கள் அவனது தலையை மீண்டும் கழுத்துடன் இணைக்க முடிவு செய்தனர். அதைத் தொடர்ந்து 6 மணிநேரம் சத்திர சிகிச்சை நடந்தது. அப்போது வயர்கள் மற்றும் விலா எலும்பு துண்டுகளை வைத்து முதுகெலும்புடன் தலையை இணைத்தனர். தற்போது குழந்தை ஜாக்சன் டெய்லர் நலமுடன் இருக்கிறான். தற்போது அவனது தலை உடலுடன் உறுதியாக இருக்கும் வகையில் உபகரணம் பொருத்தப்பட்டுள்ளது. அதை 8 வாரங்கள் கழித்து அகற்ற வைத்தியர்கள் முடிவு செய்துள்ளனர்.

விபத்தின்போது குழந்தையின் உயிர் காக்கும் நரம்புகள் பாதிப்பு அடையவில்லை. அதனால் தான் இந்த அரிய சத்திர சிகிச்சை சாத்தியமானது என்று வைத்தியர்கள் கூறியுள்ளனர். அவன் வழக்கமான தனது வாழ்க்கையை நீண்ட காலம் நலமுடன் வாழ முடியும் என்றும் தெரிவித்தனர்.

இந்த அரிய சத்திர சிகிச்சை மூலம் [illegible] பது அதிசயிக்கத்தக்க சம்பவம் என அவனது பெற்றோர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். (ற–ரி4)

# நியூட்ரினோ குறித்த ஆராய்ச்சிக்கு இருவருக்கு இயற்பியல் நோபல் பரிசு





ஜெனிவா, ஒக்.8

நியூட்ரினோ தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக, ஜப்பான் விஞ்ஞானி டகாகி கஜிடா மற்றும் கனடா நாட்டு விஞ்ஞானி ஆர்தர் பி.மெக்டொனால்ட் ஆகியோர், 2015ஆம் ஆண்டுக்கான இயற்பியல் நோபல் பரிசை வென்றுள்ளனர்.

பிரபஞ்ச உருவாக்கத்தின் அடிப்படை மூலக் கூறு அல்லது அணுத்துகளாகக் கருதப்படும் நியூட்ரினோவின் ஊசலாட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொண்டதில் நியூட்ரினோக்களுக்கு நிறை உண்டு என்பதை இவர்கள் கண்டுபிடித்ததற்காக, இந்த நோபல் பரிசு வழங்கப்படுவதாக நோபல் பரிசு தேர்வுக் குழுவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டகாகி கஜிடா என்பவர் ஜப்பானிய விஞ்ஞானி, ஆர்தர் பி.மெக்டொனால்ட் என்பவர் கனடா நாட்டைச் சேர்ந்தவர். பிரபஞ்ச உருவாக்கத்தின் அணுக்கோட்பாட்டில் நியூட்ரினோக்கள் பற்றி அதிகம் ஆய்வுகள் நடைபெற்ற வண்ணம் இருந்தன. ஆனாலும் நியூட்ரினோ என்ற நிகழ்வு ஒரு புரியாத புதிராகவே இன்றும் இருந்து வருகிறது.

பிரபஞ்ச உருவாக்க சக்திகளில் மூலக் கூறு அல்லது அடிப்படை துகள்கள் நியூட்ரினோக்கள் என்று அழைக்கப்படுகின்றன. கதிர்வீச்சு அழிவு மூலக்கூறுகளால் நியூட்ரினோக்கள் உருவாகின்றன.

பிரபஞ்சத்தில் பொருள்களின் மிகவும் உள்ளார்ந்த, புலப்படா, செயல்பாடுகள் பற்றிய எமது புரிதலை டகாகி கஜிடா மற்றும் மெக்டொனால்ட் ஆகியோரது கண்டுபிடிப்புகள் மாற்றிவிட்டன என்று நோபல் குழு தெரிவித்துள்ளது.

சாதாரண மொழியில் கூற வேண்டுமெனில், நியூட்ரினோக்கள் தங்களது அடையாளங்களை மாற்றிக்கொள்ளும் தன்மை கொண்டவை என்பதும், இந்த உருமாற்றத்துக்கு நியூட்ரினோக்களுக்கு நிறை இருந்தால் தான் இது சாத்தியம் என்பதையும் இவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதாவது, இதுவரையிலான ஆய்வுகளில் நியூட்ரினோக்களுக்கு நிறை இருக்க வாய்ப்பில்லை என்றே கருதப்பட்டது. ஆனால் அது எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அதன் அடையாளங்கள் மாறும் தன்மை கொண்டதால் நிறை இருப்பது அவசியமாகிறது என்பதுதான் இப்போதைய கண்டுபிடிப்பின் சிறப்பாகும்.

பிரபஞ்ச கதிர்வீச்சு மற்றும் பூமியின் வெளி ஆகியவற்றின் ஊடியக்கங்களினால் பல நியூட்ரினோக்கள் உருவாகின்றன. மேலும் பல நியூட்ரினோக்கள் சூரியனின் உட்பகுதியில் நிகழும் அணு ஊடியக்கங்களினால் உருவாகின்றன. ஒவ்வொரு விநாடியும் ஆயிரம் பில்லியன்கள் கணக்கான நியூட்ரினோக்கள் எமது உடலினூடே சென்ற வண்ணம் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பிரபஞ்ச உருவாக்கம், அதில் பொருள்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை மாற்றி அமைக்கும் கண்டுபிடிப்பாக இவர்களது கண்டுபிடிப்புகள் கருதப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடும்பம் ஒரு கோயிலாக........

உடுவிலூர் கலா

ஒரு சமுதாயத்தின் உட்கரு குடும்பம் என்பதேயாகும். குடும்பத்தைப் பற்றி பல வரைவிலக்கணங்கள் சொல்கிறோம். ஒரு மனிதனது வாழ்வில் அவனது குடும்பம் மிகவும் முக்கியமானது. மனிதனை மனிதனாக அடையாளப் படுத்துவது குடும்பம் என்றால் எவராலும் அதனை மறுக்கமுடியாது. அன்பு, பாசம் என்பவற்றைப் பரிமாறிக் கொள்ளும் ஊட கமாகவும், இன விருத்திக்கு வழி சமைக்கும் பாலமாகவும் அமைவது குடும்பமே. சமூகப் பிணைப்பை ஏற்படுத்துவதும் குடும்பம்தான். கணவன், மனைவி என்கிற உயர் சமூக அந்தஸ்தும் குடும்பம் என்னும் கட்டமைப்பில் தான் கிடைக்கிறது. இன்றைய குடும்பங்கள் பிரச்சினைகளை மையப்படுத்தியே காணப்படுகின்றன. கணவன் – மனைவி உறவைப் பேணிப் பாதுகாத்த காலம்போய், வேண்டாதபோது போட்டுடைக்கும் மட் கலமாக மாறியுள்ளது– இன்றைய குடும்பக் கட்டமைப்பு.

ஆண், பெண் இருவரும் கணவன், மனைவியாக மாறும்போது குடும்பம் என்னும் அழகிய கோயில் கட்டப்படுகிறது. குடும்பம் என்னும் கோயில் பரிசுத்தமாக வாழ்வின் முடிவு வரை இருக்க வேண்டும். சாவு இருவரையும் பிரிக்கும் வரை மகிழ்வுடன் வாழ வேண்டும். கணவனும் – மனைவியும் ஒருவருக்கொருவர் மதிப்பும் மரியாதையும் அளித்து புரிந்துணர்வுடன் விட்டுக்கொடுத்து இல்லறம் நடத்த வேண்டும். மானிட தர்மம் குடும்பத்தில் துளிர்விட வேண்டும். கணவன் – மனைவி இருவருமே குடும்பத்தின் காரணகர்த்தாக்கள். சங்ககால, சங்கமருவிய கால நூல்களில் கணவன் – மனைவியின் குடும்ப உறவுகளைப் பார்க்கும்போது தலைவன் தலைவியாக சித்திரிக்கப்படுவதையும், மதிப்பார்ந்த பக்தியும், மகிழ்வும் அவர்களுக்குள் இருந்ததையும் காணக்கூடியதாக உள்ளது. மனைவியைக் கணவன் அணுகும்முறை, கணவன் மேல் கொண்ட மனைவியின் அதீத பாசமுறைமை, பிரிவுத்துயர், கூடலின் முன் ஏற்படும் ஊடல், ஊடலின் பின்னான கூடல் என்பன குடும்பத்தின் சிறப்புக்களை அழகாக, தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. பக்தி, அன்பு, ஈர்ப்பு, ரசனை, அரவணைப்பு, பரிவு எல்லாமே ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து அன்றைய குடும்ப வாழ்வுக்கு மெருகூட்டின.

இன்று திருமண பந்தத்தில் இணையும் தம்பதிகள் எவ்வளவு காலம் இணைந்து வாழ்வார்கள் என்பது கேள்விக்குறியே. திருமணமாகி சில வாரங்களில்கூட, குடும்ப உறவு முடிவடைந்து நீதிமன்ற வாசல்களில் விவாகரத்துக்காகத் தவம் இருக்கின்றனர். ஒருவருக்காக ஒருவர் வாழும் நிலைகூட அருகிவிட்டது. தன்னை, தன் மனைவியை, தன் கணவனை, தன் குடும்பத்தை நேசிக்காது அடுத்தவரை, அடுத்தவன் மனைவியை, அடுத்தவள் கணவனை, அடுத்த குடும்பத்தை நேசிப்பவர்களாக மாறிவிட்டனர். வீட்டில் அழகான மனைவியிருக்க, வெளியே பல பெண்களின் தொடர்புகளும், கணவன் இருக்க வேற்று ஆடவர்களின் தொடர்புகளும் சர்வசாதாரணமாகிவிட்ட காரணத்தால் குடும்பம் என்னும் கோயில் தனது பக்தியை , புனிதத்தை இழந்து விடுகிறது. காதல் திருமணம் ஆனாலும்சரி, நிச்சயிக்கப்பட்ட திருமணம் ஆனாலும்சரி திருமணம், திருமணம்தான். இங்கு ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் துணையாக வாழ வேண்டும். திருமணம் என்பது உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து வாழும் ஆத்மீக ஆத்மார்த்த வாழ்வு என்பதை ஆணும் பெண்ணும் நன்குணர வேண்டும்.

எமது பண்பாட்டில் குடும்பம் என்னும் கட்டமைப்பு வலுவுள்ளதாகக் கணிக்கப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தனக்கென ஒரு குடும்பத்தை அழகாக, செவ்வனே செதுக்க வேண்டும். ஒரு மனிதனுக்கு ஒரு குடும்பம் மட்டுமே. கணவனும் – மனைவியும் முழுமையாக ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும். இன்றைய நுகர்வோர் கலாசாரமானது ஆடம்பரங்களை நோக்கியதாக இருப் பதால் அந்த ஆடம்பரங்கள் குடும்பங்களை நோக்கியதாகக் காய் நகர்த்தப்படுகின்றன. குடும்பங்களில் பக்தி, புனிதமே இல்லையென்றாகி விட்டது. கண்டகண்ட காட்சிகளை உள்வாங்கும் நிலைக்கு மனிதன் மாறிவிட்டான். இச்சையுடன் பார்க்கும் பார்வைக்கு கண்களைப் பழக்கப்படுத்தி விட்டான். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத்தவறி உலக மயமாக்கலுக்குள் தன்னைப் பணயம் வைத்ததால் குடும்பம் என்கிற கட்டமைப்பு ஆட்டம் கண்டுவிட்டது.

> நுகாவோர் கலாசாரமானது ஆடம்பரங்களை நோக்கியதாக இருப்பதால் அந்த ஆடம்பரங்கள் குடும்பங்களை நோக்கிக் காய் நகர்த்தப்படுகின்றன. குடும்பங்களில் பக்தி, புனிதமே இல்லையென்றாகி விட்டது. கண்டகண்ட காட்சிகளை உள்வாங்கும் நிலைக்கு மனிதன் மாறிவிட்டான். இச்சையுடன் பார்க்கும் பார்வைக்கு கண்களைப் பழக்கப்படுத்தி விட்டான். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கத் தவறி, உலக மயமாக்கலுக்குள் தன்னைப் பணயம் வைத்ததால் குடும்பம் என்கிற கட்டமைப்பு ஆட்டம் கண்டுவிட்டது.

அன்பு, பாசம், ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, அரவணைப்பு என்பவற்றால் பொலிவு பெறவேண்டிய குடும்பங்கள் சந்தேகம், பொறாமை, வீண் தொடர்பு, தேவையில்லாவார்த்தைப் பிரயோகங்களால் முறிவடைகின்றன. கட்டுப்பாடுகள் மனித வாழ்வில் இன்றியமையாதவை. மனிதனை மனிதனாக வாழவைப்பது கட்டுப்பாடு ஒன்றே. கட்டுப்பாட்டுடன் குடும்பத்தில் பிரவேசிப்பவன் வாழ்வில் மனிதனாகத் தன்னை அடையாளப் படுத்துவான். கட்டுப்பாடு இல்லாவிடின் விலங் கு களுக்கு இணையாகவே மனிதனால் வாழ முடியும். மனிதனின் கட்டுப்பாடிழந்த நிலையே சமூக விரோதச் செயல்களுக்கு கார ணமாகின்றது.

குடும்ப வாழ்வில் அன்பு, பணிவு இழையோடிய கட்டுப்பாடுகள் கணவன், மனைவி இருவருக்குள்ளும் அன்னியோன்னியத்தை மட்டுமல்ல, நம்பிக்கையையும் உண்டுபண்ணும். இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு மனக்கட்டுப்பாட்டுடன் வாழும் போதுதான், ஆளுமை விருத்தி பெறும். ஒருவனுக்கொருத்தி என்ற அழகிய தமிழ்க் கோட்பாடு வலுவடையும். ஒருவனுக்கொருத்தி என்ற நிலையே குடும்பத்துக்கு அழகு சேர்க்கும். ஒருவனுக்கொருத்தி என வாழும்போது தினசரி வாழ்க்கைக்கான சக்தி உடலாலும் உள்ளத்தாலும் சேகரிக்கப்படுகிறது. அததோடு வேண்டப்படாத நோய்களும்கூட நம்மை அணுகாது. குடும்பம் ஒரு அழகிய பூங்காவனம். நறுமணம் வீசும் எழில்கொண்ட மலர்கள் தினசரி பூக்கின்ற பூங்காவனத்தில் நாமும் உலாவருவோமா?

# கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபையுடன் கைகோர்த்துள்ள லிட்ரோ காஸ் நிறுவனம்

திரவ பெற்றோலிய வாயுவை இலங்கையில் இறக்குமதி செய்து விநியோகிக்கும் சந்தை முன்னோடியான லிட்ரோ காஸ், தேசிய கடற்கரைச் சுத்திகரிப்பு நிகழ்ச்சித்திட்டத்துக்குப்பிரதான அனுசரணை வழங்கியிருந்தது. இந்தத் திட்டத்தைக் கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபை ஏற்பாடு செய்திருந்தது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ், இந்த அதிகாரசபை இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

வருடாந்தம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டத்தினூடாகக் கடற்கரைகள் சுத்திகரிக்கப்படுவதுடன், இதன்மூலம் எதிர்காலச் சந்ததியின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான பங்களிப்பும் வழங் கப்படுகிறது. செப்ரெம்பர் 19 ஆம் திகதி மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சமூக பொறுப்புணர்வுத் திட்டம், செப்ரெம்பர் 23 ஆம் திகதி தென் மாகாணத்தில் நிறைவடைந்திருந்தது. இந்தச் செயற்பாடுகளின்போது, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் காலி ஆகிய நகரங்கள் உள் வாங்கப்பட்டிருந்தன.

லிட்ரோ காஸ் லிமிட்டெட் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தலைவர் ஷாலில முனசிங்க இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபையுடன் கைகோர்த்து, நாடு முழுவதும் காணப்படும் கடற்கரைகளைச் சுத்தம் செய்திருந்தமையை யிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். சமூகத்துக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பு வழங்குவது என்பதற்கமைய நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் மற்றுமொரு உள்ளம்சமாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. தனது சகல பங்காளர்கள் மற்றும் நாட்டின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சூழல் ஆகியவை தொடர்பில் அதிகளவு அக் கறை செலுத்தத் தன்னை அர்ப்பணித்த நிறுவனமாக லிட்ரோ காஸ் திகழ்கிறது – என்றார்.

சில கடற்கரைகள் கண்ணாடி, பிளாஸ்ரிக் பொதிகள், போத்தல்கள், தேங்காய்ச் சிரட்டைகள், பழைய சப்பாத்துக்கள் போன்ற பல பொருள்களால் மாசடைந்திருந்தன. இந்தக் கழிவுப் பொருள்கள் கடற்கரைச் சூழலை அண்மித்து வசிப் போருக்கு மட்டும் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துவிடாமல், நுளம்பு பெருக்கத்துக்கும், டெங்கு வைரஸ் பரவலுக்கும் காரணமாக அமைந்து விடுகின்றன. அத்துடன், கடல்சார் விலங்களுக்கும் இவை பெரும் பாதிப்பாக அமைந்துள்ளன.



மற்றொரு விடயமாக, இலங்கை ஒரு சுற்றுலா நாடாகக் கருதப்படுகிறது. பெருமளவானோர் கடற்கரைசார் விடுமுறையைச் செலவிட விரும்புகின்றனர். பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் அரசுடன் இணைந்து குப்பைகள் முறையாக அகற்றப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

லிட்ரோ காஸ் நிறுவனம் இது போன்ற செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வருகிறது. தனது பிரதான [illegible] அணிகள் மூலமாக புத்தளம், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட நடவடிக்கைகளில் கைகோர்த்திருந் தது.

கடல் மாசுறல் தடுப்பு அதிகாரசபை என்பது, வினைத்திறன் வாய்ந்த சட்ட விதிமுறைகளின் நடைமுறை மூலமாகக் கடற்கரை மாசுறலை தடுத்தல் மற்றும் நிர்வகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்பாகத் திகழ்கிறது. இது தொடர் பாக முன்னெடுக்கப்படும் சர்வதேச மாநாடுகள், ஒருங் கிணைப்பு சந்திப்புகள் போன் றவற்றின் தீர்மானங்களைத் தனது வளங்களைக் கொண்டு முன்னெடுக்கும் நடவடிக்கைகளைத் தனியார்–பொது பங்காண்மைகளினூடாக மேற்கொள்கிறது. இதன் மூலம் இலங்கையை 2020 ஆம் ஆண்டளவில் மாசற்ற கடற் கரைகளைக் கொண்ட நாடாகத் திகழச் செய்து, நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கு நிலையான பங்களிப்பை வழங்குவதை நோக்கா கக் கொண்டுள்ளது.

லிட்ரோ காஸ் லங்கா லிமிட்டெட், இலங்கையில் திரவப் பெற்றோலிய வாயு விற்பனை மற்றும் சந்தைப் படுத்தல் நடவடிக்கைகளில் முன்னோடியாகத் திகழ்கிறது. இதற்காகத் தனது அங்கத்துவ நிறுவனமாக லிட்ரோ காஸ் டேர்மினல் லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்துடன் கைகோர்த்து செயலாற்றி வருகிறது. லிட்ரோ காஸ் வர்த்தக நாமத்தின் உரிமையாண்மையை இந்த நிறுவனம் கொண்டுள்ளது. நாடு முழுவதும் காணப்படும் 4,700 விற்பனை நிலையங்களினூடாக மக்களுக்குத் தனது சேவைகளை வழங்கி வருகிறது. பாதுகாப்புத் தரங்களைக் கடுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் லிட்ரோ காஸ் கீர்த்தி நாமத்தைக் கொண்டுள்ளதுடன், நிறுவனத்தின் கொள்கையில் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதிக்கு இனியாவது விமோசனம் கிடைக்காதா?

சுன்னாகம் ஜெற் மோட்டோர்ஸ் பகுதியிலிருந்து காங்கேசன்துறை வீதியின் மேற்குப் புறமாக ஐயனார் ஆலயத்தை நோக்கியதாகச் செல்லும் வீதியில் இரண்டொருதினங்களுக்குமுன்னர் பயணம் செய்ய வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது. அந்த வீதியில் பல குளங்கள் இருந்ததைக்கண்டு ஆச்சரியமடைந்தேன். உண்மையில் இதுவொரு கற்பனையான கதையல்ல. அந்த வீதியில் ஏராளமான பள்ளங்கள் இருந்ததால் அவற்றில் மழைநீர் தேங்கி நின்று குளங்கள் போன்று காட்சியளித்தன. இவற்றைத் தாண்டிச் செல்வதில் அதிக சிரமங்களை நான் அன்று எதிர்கொண்டேன்.

அன்றைய தினம் வாகனங்கள் எதுவும் வராததால் சேற்றுத் தண்ணீர்க் குளியலில் இருந்தும் நான் தப்பிக்கொண்டேன். ஆனால் நீர் நிறைந்த பள்ளங்களில் எனது சைக்கிளில் இறங்கி ஏறும் போதுதான் கடுமையான சிரமத்தை எதிர்கொள்ள நேர்ந்தது. ஏற்கனவேமிகவும்மோசமானநிலையில்காணப்பட்ட இந்த வீதி மழை பெய்ததன் காரணமாக வர்ணிக்க முடியாத அளவுக்கு சீரழிந்து காணப்படுகின்றது.

இந்த வீதியின் முகப்பில் ஐயனாரின் உருவச்சிலை பொறிக்கப்பட்ட அழகான அலங்கார வளைவு அண்மையில்தான் திறந்து வைக்கப்பட்டது. இதனைப் பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாக உள்ளது. ஆனால் சீரழிந்து கிடக்கும் இந்த வீதியை எவருமே கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

தற்போது பிரதேச சபையினரால் வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவர்கள் இந்த வீதி தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மாரி காலமும் ஆரம்பித்து விட்டதால் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதில் இடையூறுகள் ஏற்படத்தான் போகின்றன. ஏற்கனவே இந்தப் பணிகளை மேற்கொண்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். காலம் கடந்த நிலையில் மழை பெய்யாத நாள்களில்தான் இனி இந்த வீதியின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியும்.

- **க.பரமேஸ்வரன்**
சுன்னாகம்.

## மண்கும்பானுக்கு புத்துயிர் அளிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்

மண்கும்பான் கிராமத்தின் நுழைவாயிலில் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் உயர்ந்து காட்சி தருகிறார். ஊரை வளர்த்தார், ஊரவர் ஆலயத்தை வளர்க்கிறார்கள். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் அபாயகரமான பண்ணை வீதிப் பயணம், நாவாந்துறை, அல்லைப்பிட்டி, அராலித்துறை ஊடாக படகுப் பயணம், மண்டைதீவு, குருநகர் படகுப்பயணம் எனப் பல கஷ்டமான பயணங்களைச் செய்தாலும் எமது சொந்த ஊரில் குடியிருந்தோம். 1990ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக முழுமையாக இடம்பெயர்ந்தோம். மீளக் குடியேறக்கூடிய நிலை வந்தபோதும், சொந்தக் காரணங்களால் பலரால் கிராமத்துக்கு மீளவர முடியவில்லை. இதுதவிர்க்க முடியாத நிலை. ஆனால் நாம் பிறந்து வளர்ந்த வீடு, காணி, வயல் நிலம் என்பவற்றின் தற்போதைய நிலைமையைப் பார்க்கும் போது மிகவும் கவலையாக உள்ளது. இது ஒருதனிப்பட்ட விடயம். ஆனாலும் இதனால் இங்கு குடியிருக்கும் குறைந்தளவிலான குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. முழுமையான வீடுகள், அழிவடைந்த வீடுகள், எருக்கலைக் காடுகள், வடலிகளால் மூடப்பட்ட காணிகள் கவனிப்பார் இல்லாது உள்ளமை இக்கட்டான சூழலாக உள்ளது. எவரையும் வீடு கட்டும்படியோ, அல்லது திருத்துமாறோ குடிவரும்படியோ, கேட்கும் உரிமை எமக்கில்லை. மன்றாட்டமாகக் கேட்பது காணிகளைத் துப்புரவு ஆயினும் செய்தால், இருக்கும் குடியிருப்பாளர்களுக்கு உதவியாக இருக்கும். எமது வீடு மட்டுமல்ல, அயல் வீடுகளிலும் பாம்புகளின் நடமாட்டம் பெருகிவிட்டது. பல வீடுகள் வெறுமையாக உள்ள போதும் அதில் எவராவது குடியிருக்க முன் வந்தாலும் வீட்டு உரிமையாளரதும் இங்கு குடியிருப்போரினதும் ஒத்துழைப்புக்கிடைக்க வேண்டும். சங்கக்கடையடி சனசந்தடி இல்லாமல் போய்விட்டது. சங்கக்கடையும் அழிந்துபோய்விட்டது. பலவீடுகள் அருகில் உள்ளபோதும் எவரும் குடியிருக்காத நிலையால் உப தபாலகத்தில் பகல் வேளையில் தனித்துக் கடமையில் இருந்த உபதபாலதிபரது சங்கிலி அறுக்கப்பட்டது. ஆனாலும் அவர் இன்னமும் அங்கேயே பணிபுரிகிறார். அவரது பணிக்கு ஏதாவது ஒத்துழைப்பு வழங்க முடியுமா என நாம் எவருமே முயற்சிக்கவில்லை. கிராம அபிவிருத்திச் சங்கம் மூடிய நிலையில் உள்ளது. அது செயற்படுமா? சங்கக்கடையின் நிலைமை என்னவென்று தெரியவில்லை.




அண்மையில் யாழ்.நகரில் தீவகத்தின் அபிவிருத்தி என்ற கருப்பொருளில் பெரியவர்களால் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றது. அதில் எனது கவலையைத் தெரியப்படுத்தினேன். அதன் பின்னர்கூட எதுவும் நடந்ததாக அறிய முடியவில்லை. எமது ஊரிலும், அயல் ஊரிலும் இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், சுற்றுலா மையம் கடற்கரை, கிறிஸ்தவ ஆலயம் எனப் பல முக்கியத்துவம் வாய்ந்த தலங்கள் உள்ளபோதிலும் ஊர் காடாக வளர்கிறது. எனது பிறப்பிடம் வேறாக உள்ளபோதும் வாழ்விடமாகக் கொண்டமையால் மண்கும்பானைச் சேர்ந்த புத்திஜீவிகள், பெரியார்கள், சமூகசமயத் தொண்டர்கள், தொழில் அதிபர்கள், வெளிநாட்டில் வாழும் ஊர்மக்கள், வெளிநாடுகளிலும் ஊரின் பெருமையை வெளிப்படுத்தும் தொழில் அதிபர்கள் எல்லோரும் முன்வந்து ஊருக்குப் புத்துயிர் அளிக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன். - **அ.அன்ரன்,** மண்கும்பான்.

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

## இனவாதிகளுக்கு அஞ்சி பின்வாங்கிவிடக்கூடாது

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானத்தை இலங்கை அரசு எவ்வாறு செயற்படுத்தப் போகிறது? ஐ.நாவின் எதிர்பார்ப்புகளை இலங்கையால் எவ்வளவு தூரத்துக்குப் பூர்த்திசெய்ய முடியும்? தீர்மானத்தைத் தடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ள மகிந்த ஆதரவுச் சக்திகளால் பலமான எதிர்ப்பை உருவாக்க முடியுமா? தமிழ் மக்களுக்கு மீண்டும் ஏமாற்றம்தானா? இப்படியான கேள்விகள் இலங்கை அரசியல் வட்டாரங்களில் இன்று எழுப்பப்பட்டு வருகின்றன.

போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக்கூறவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கைக்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பம் இதுவாகும். மைத்திரி - ரணில் அரசு இனவாதிகளின் எதிர்ப்புகளுக்கு அஞ்சாது செயற்படுவதிலேயே அமெரிக்கத் தீர்மானத்தின் வெற்றி தங்கியுள்ளது. தானும் அனுசரணை வழங்கிய ஒரு தீர்மானத்தைச் செயற்படுத்துவதற்கு இலங்கை அரசு கடமைப்பட்டுள்ளது. ஐ.நாவின் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போய்விடக்கூடாது.

2009 இல் போர் முடிவடைந்த கையோடு இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நல்லதோர் வாய்ப்பு உருவாகியது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஓர் அரசியல் தீர்வை மகிந்த ஆட்சியாளர்கள் கண்டிருக்கலாம். அரசியல் தீர்வு ஏற்பட்டிருந்தால் இன்றைய பாரிய நெருக்கடிகளில் இருந்து இலங்கை விடுபட்டிருக்க முடியும். போர்க்குற்றங்கள் கூட அடிபட்டுப் போயிருக்கும். பொதுநலவாய நீதிபதிகள், வெளிநாட்டு நீதிபதிகள், வெளிநாட்டுச் சட்டத்தரணிகள், விசாரணையாளர்கள் என்ற பிரச்சினைகள் ஏற்பட்டிருக்க முடியாது.

பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட தருஸ்மன் தலைமையிலான மூவர் அடங்கிய நிபுணர் குழு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் நியமிக்கப் பட்ட ஐ.நா. விசாரணைக்குழு ஆகியவை இலங்கை வந்து விசாரணை செய்ய மகிந்தவின் ஆட்சியின்போது இடமளிக்கப்படவில்லை. வெளிநாட்டுத் தலையீட்டுக்கு இடமில்லை என்று கூறி மகிந்த அரசு அந்த விசாரணைக் குழுக்கள் இரண்டையும் நிராகரித்துவிட்டது. ஆனால் இன்று நடந்திருப்பது என்ன? பெயர்தான் உள்ளக விசாரணைப் பொறிமுறை. நடக்கப்போவது என்னவோ கலப்பு நீதிமன்ற விசாரணைதான். இது சர்வதேச விசாரணையின் சாயலையே ஒத்திருக்கும்.

தருஸ்மன் தலைமையிலான ஐ.நா. நிபுணர் குழுவும், இரண்டாவது அமெரிக்கத் தீர்மானம் மூலம் அமைக்கப்பட்ட ஐ.நா. விசாரணைக்குழுவும் நாட்டினுள்வர அனுமதி மறுக்கப்பட்டதால் இலங்கைக்கு வெளியில் இருந்து விசாரணை நடத்தின. தற்பொழுது மூன்றாவது அமெரிக்கத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கைக்கு வந்து விசாரணை செய்யும் சந்தர்ப்பம் முதல் தடவையாகக் கிட்டியுள்ளது. இது இலங்கை விவகாரத்தில் ஒரு புதிய திருப்பம். எனினும் இந்தியாவின் இந்து நாளிதழ் ஆசிரிய தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை போன்று இலங்கை பயணிக்கவேண்டிய பாதை இலகுவானதாக இருக்காது. நம்ப கத்தன்மை மிக்க நீதிப் பொறிமுறையை உருவாக்கவேண்டும். மேலும் அதற்குள் நீதிபதிகள், சட்டவாளர்கள் போன்ற வெளிநாட்டு வளங்களை மிகவும் அவதானமாக உள்வாங்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் தாங்களாகவே முன்வந்து சாட்சியமளிக் கக்கூடிய - நம்பிக்கை ஏற்படக்கூடிய விசாரணை நடைமுறையை உருவாக்கவேண்டும். ஆகவே ஐ.நாவின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் கடப்பாடு இலங்கை அரசுக்கு உண்டு.

2009இல் புலிகளைத் தோற்கடித்த பின்னர் தேசியப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு மகிந்த ஆட்சியாளர்கள் முயற்சிக்கவில்லை. போர் வெற்றியைக் கொண்டாடினார்கள். புலிப்பயங்கரவாதம் குறித்துப் பேசினார்கள். புலம்பெயர் தமிழர்களைப் புலிகள் என்றார்கள். இன ரீதியான அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதனால் மூவின மக்களும் ஒன்றாக வாழக்கூடிய சூழல் ஏற்படவில்லை. தற்பொழுது கிடைத்த சந்தர்ப்பத்தை மைத்திரி - ரணில் அரசு பயன்படுத்தி உண்மையை வெளிக்கொணரவேண்டும். போர்க் குற்றமிழைத்தவர்கள் தப்புவதற்கு இடமளிக்கக்கூடாது. இராணுவத்தின் மீது தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் இருக்கும்போது அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டு. நாடாளுமன்றத்தில் கூச்சலிடும் மகிந்த ஆதரவுத் தரப்பு இனவாதிகளுக்கு அஞ்சி மைத்திரி - ரணில் அரசு பின்வாங்கி விடக் கூடாது.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லாட்சி அரசின் ஓர்மப்போக்கு நல்லிணக்கத்துக்கு தடைக்கல்லா?

★ இந்த நாட்டின் நீதிமன்றக் கட்டமைப்புக் கலாசாரத்தில், துரித விசாரணை என்பதற்கு இடமே இல்லை.

★ பொலிஸ் நிலையங்களில், சந்தேக நபர்கள் மீது அதிக அளவில் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுகின்றன. துன்புறுத்தலை மேற்கொள்ளாது விசாரணைகளை நடத்த இயலாது என்ற நிலைமை மேலோங்கி உள்ளது.

★ பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்படுதல், ஒரு குற்றச் செயலாக இந்த நாட்டில் அறிவிக்கப்பட இல்லை.

★ துன்புறுத்தல்களை மேற்கொள்ளாது சில அதிகாரிகளால் விசாரணை நடத்த முடியாத நிலைமை, தன்மை அதிக அளவில் காணப்படுகிறது.

★ நடைமுறையில் உள்ள ஒரு சட்டத்தின் பிரகாரம், கடந்த காலக் குற்றச் செயல்களுக்கு, நிகழ்காலத்தில் தண்டனை வழங்க இயலாது.

★ அதனால், கடத்தப்பட்ட, காணாமற் போகச் செய்யப்பட்ட, ஒரு பிரசையின் குடும்ப உறுப்பினர்கள் மிகப்பெரிய அளவில் பாதிப்புறும் நிலைமை மேலுயர்ந்து நிற்கிறது.

அதனால், உள்நாட்டின் நீதித்துறை சீர் செய்யப்பட்ட பின்னரே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றலாம்.

மிகப் பலருக்கும் தெரியாத, பலரும் அறியாத மேற்போந்த நிலைமையை ஆசிய மனித உரிமைகள் பணிப்பாளர் துலக்கமாக வெளிப்படுத்தி உள்ளார்.

ஆசிய, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் திட்டப் பணிப்பாளரான டெஸ்மன் டி சில்வாவே அவராவார்.

அவருடைய அவதானிப்புக்களை ஊர்ஜிதம் செய்யும் சில சம்பவங்களின் செயற்பாடுகளின் தன்மைகளை இங்கே தொட்டுக்காட்டுவது பொருத்தம்:

•காணாமற்போகச் செய்யப்பட்டவர்களை கண்டுபிடிக்கக் கோரி, அவர்களின் உறவுகள் அடிக்கடி ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் நடத்திய போதிலும், ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் அரசால் மேற்கொள்ளப்படவில்லை.

•புங்குடுதீவு மாணவி வித்தியா கொலைச் சந்தேகநபர்களின் இரத்த மாதிரியின் பகுப்பாய்வு தொடர்பான தெளிவான அறிக்கையை அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தால் சமர்ப்பிக்க இயலவில்லை.

- அதனால் இப்போது அந்தப் பணி -- பொறுப்பு என்றும் கொள்ளலாம்-- தனியார் துறைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

•கடந்த ஆண்டின் இறுதியில் காரைநகர் சிறுமிகள் இருவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதான வழக்கின்போது, விசாரணைகள் முறையாகச் செய்யப்படவில்லை.

நீதிமன்றின் உத்தரவை பொலிஸார் உரிய வகையில் நிறைவேற்றாமையால், குறித்த வழக்கு ஒரு வருடத்துக்கு அதிகமாகியும் நீண்டு செல்லும் நிலை புலப்படுகிறது.

ஒட்டு மொத்தத்தில்--

ஆசிய மனித உரிமைகள் பணிப்பாளரின் காட்டமான கருத்துக்களை, இலங்கை அரச நிர்வாகத்தின் ஓட்டைகளை, கணக்கில் எடுப்பதில்லை என்ற ஓர்மத்துடன், இன்றைய யகபாலன(நல்லாட்சி) அரசு செயற்படாமல், அந்தக் கசப்பான உண்மைகளைக் கருத்தில் எடுத்து, ஓட்டைகளை விரைந்து அடைத்துச் சரி செய்யாவிட்டால், அதன் சீத்துவம் இன்னும் சில மாதங்களில் கருகிய மொட்டாக மண்ணில் விழுந்தாலும்கூட ஆச்சரியப்பட எதுவும் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்தவர்களை, மிகக் குறிப்பாக, அமெரிக்காவை, தனது கைக்குள் போட்டு, உள்நாட்டு விசாரணை என்ற பதக்கத்தைச் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டிருப்பதால், தனது திட்டம் ஒப்பேறும் என்று நல்லாட்சி அரசு எண்ணலாகாது.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற தமிழ்ச் சங்கப் புலவன் கனியன் பூங்குன்றனாரின் வரிகள், மைத்திரி-ரணில் அரசை, நிம்மதியாக, செம்மையாக முழுக்கால ஆட்சி நடத்த தடைக்கல் போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை.....!

# பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு இல்லாமல் எதுவுமே நடக்காது

ஆங்கில மூலம்: வொஷிங்டன் போஸ்ட்

இலங்கையின் புதிய நீதிப் பொறிமுறையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் காத்திரம்மிக்க பங்களிப்பு உறுதி செய்யப்படத் தவறினால், இலங்கையின் வன்முறைக் கலாசாரம் மேலும் பலம்பெறுவதுடன் சமாதானம் மற்றும் நீதியை நிலை நாட்டுவதற்கான நகர்வுகளும் பாதிக்கப்படும்.

இலங்கை அரசானது தனது நாட்டில் இடம்பெற்ற பல்வேறு போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின் பேரில் கடந்த வியாழனன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை தொடர்பில் அனைத்துலக சமூகம் இந்த நிலையை அடைவதற்கு நீண்ட காலம் எடுத்துள்ளது. இலங்கையின் உள்நாட்டுப் போர் 2009 இல் முடிவடைந்தபோது, இலங்கைக்கும் அனைத்துலக சமூகத்துக்கும் இடையிலான உறவு மிகவும் சிக்கலானதாக இருந்தது.

இந்தப்போரின் போது இலங்கைப் படையினர் பெரிய அளவில் போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்ததற்கான ஆதாரங்கள் அனைத்துலக வல்லுநர் குழுவால் 2011 இல் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடித்ததன் மூலம் பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற்றிருந்த மகிந்த ராஜபக்சவின் அரசு, தனது படையினரால் இழைக்கப்பட்ட பல்வேறு குற்றங்களை விசாரணை செய்வதற்கு உடன்படவில்லை.

கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற இலங்கை அதிபர் தேர்தல் மூலம் ராஜபக்ச பதவி விலக்கப்பட்ட பின்னரே, இலங்கையில் இழைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பில் அனைத்துலக சமூகத்தினர் தலையீடு செய்வதற்கான சாத்தியம் உருவானது.

இலங்கையில் அனைத்துலகப் பங்களிப்புடன் கூடிய நீதிப் பொறிமுறையை நிராகரிப்பதற்காகவே தனது நாட்டில் மனித உரிமைகளை வலுப்படுத்துவதை உறுதி செய்வதாக இலங்கையில் தற்போதைய அரசு உறுதிமொழி வழங்கியது. இவர்களைப் பொறுத்தளவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்பது ஒரு வெற்றியாகும்.

ஆனால் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கும் அவர்களது வழக்கறிஞர்களுக்கும் இலங்கை மீதான அண்மைய தீர்மானம் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள உள் நாட்டு விசாரணைப் பொறிமுறை நம்பகரமான விசாரணைப் பொறிமுறையாக இருக்காது என உள்நாட்டு சிவில் அமைப்புக்களும் அனைத்துலக மனித உரிமை ஆர்வலர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் நீண்ட காலமாகச் செயற்பட்டுள்ள போதிலும் அவை அரசியல் பக்கச்சார்பானதாகவே இருந்துள்ளன. இந்தப் பொறிமுறைகள் நீதியை வழங்கு வதில் மட்டுப்படுத்தப்பட்ட தகைமையைக் கொண்டிருந்தன.

இவ்வாறான [illegible] பாரம்பரியத்தை உடைத்துக் கொண்டு இலங்கையின் தற்போதைய அரசு அனைத்துலக



வல்லுநர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும், பாதிக்கப்பட்டவர்களையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான சட்டத்தை ஏற்றுக்கொண்டுள்ளமை நம்பகரமான நீதி வழங்கப்படும் என்பதற்கான ஒரு சமிக்ஞையாக உள்ளது.

ஆனாலும், போரால் பாதிக்கப்பட்ட, குறிப்பாக பாலியல் வன்புணர்வின் பின்னரும் தற்போதும் உயிர்வாழ்கின்றவர்களை இலங்கை அரசு எவ்வாறு நடத்தப்போகிறது என்பதிலேயே, இலங்கையில் பாரம்பரிய நீதிசார் நடைமுறையில் மாற்றம் ஏற்படுவது நிரூபணமாகும்.

பாலியல் வன்புணர்வு மீறல்கள் தொடர்பில் நீதியை வழங்குவதை உறுதிப்படுத்துவதே உள்நாட்டு மற்றும் அனைத்துலக நீதிப் பொறிமுறைகள் சந்திக்கின்ற மிகப்பெரிய சவால்களாகும்.

பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் தாக்குதல்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை நோக்கும்போது, இவர்கள் சமூகத்தின் மத்தியில் ஓரங்கட்டப்பட்டவர்களாகவும், மீண்டும் மீண்டும் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதற்கான வலுக்குன்றியவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்கள் மீண்டும் மீண்டும் தாம் சந்தித்த அவலங்களைச் சாட்சிப்படுத்தும்போது இந்தச் சம்பவங்கள் அவர்களால் மீண்டும் நினைவுபடுத்தப்படுவதாகவும் அவை அவர்களுக்கு மனப்பாதிப்பை வழங்குவதாகவும் அமையும்.

ஆனாலும், இவ்வாறான மீறல்கள் தொடர்பில் இவர்களுக்கு நீதி வழங்கப்படுமாயின் அது வரவேற்கத்தக்கதாக அமையும். இல்லையேல் இது போன்ற விசாரணைகளில் எவ்வித நலனும் கிட்டாது.

இலங்கையில் இவ்வாறான சவால்கள் மிகவும் சிக்கலானதாக அமையும். இவ்வாண்டு எமது ஆய்வுக் குழுவினரால், எப்போதும் பாதிக்கப்பட்டவர்களா போருக்குப் பின்னான இலங்கையில் வாழும் தமிழ்ப் பெண்கள்? என்கின்ற அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்காக இலங்கையின் முன்னாள் போர் வலயங்களில் வாழும் 50 பெண்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர்.

பல பத்தாண்டுகளாக இலங்கை அரச படைகளால் துன்புறுத்தப்பட்டு, போரின் இறுதிக்கட்டத்தில் அனைத்துலக சமூகத்தால் கைவிடப்பட்ட தமிழ்ப் பெண்களைப் பாதுகாப்பதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தவறிழைத்துள்ளன என்பதை நாம் கண்டறிந்தோம். அத்துடன் இந்தப் பெண்கள், பொருளாதாரம் மற்றும் அரசியல் போன்ற துறைகளிலும் ஓரங்கட்டப்பட்டுள்ளமை இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்பட்டு, உயிருடன் வாழும் பல பெண்களின் வாழ்வானது, பாதிக்கப்பட்டவர்கள் என்கின்ற பெயரிலேயே தொடர்ந்தும் வரையறுக்கப்பட்டுள்ளது. இவர்கள் தமக்கான சமூக சேவைகள் மற்றும் வருவாயை அதிகரிக்கும் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றைத் தமது பாதிக்கப்பட்ட அடையாளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

வெளிப்படையாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என அடையாளம் காணப்படும் பெண்கள் சமூகத்தில் எவ்வாறான ஆபத்துக்கு உள்ளாகுகின்றனர் என்பதையும், அவர்கள் பெற்றுள்ள நலன்கள் தொடர்பாகவும் நாங்கள் செவ்வி கண்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தனக்கு மூன்று கோழிக் குஞ்சுகளை மானியமாக வழங்கியதாகவும், அவற்றை இராணுவத்தினர் பார்த்து விடுவார்களோ எனத்தான் கவலைப் பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் தனக்கு என்ன நடந்தது என்பதை நினைவுபடுத்துவதற்கு அச்சப்படுவதாகவும், எதிர்காலத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்துவதே பாதுகாப்பானது எனவும் பிறிதொரு பெண்மணி தெரிவித்தார்.

இருப்பினும் பாலியல் வன்புணர்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பல தமிழ்ப் பெண்கள் மற்றும் ஆண்கள் தாம் சந்தித்த பிரச்சினைகளை வெளிப்படுத்தி தமக்கு நீதி கிடைப்பதற்காக பல்வேறு ஆபத்துக்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு நீதி கோரி, மிகச் சிறிய கிராம மையங்கள் தொடக்கம் ஜெனிவா வரை பல்வேறு பேரணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது இலங்கை தொடர்பில் தீர்மானிக்கப்பட்ட நாடு கடந்த நீதிப் பொறிமுறையானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீண்டும் ஒருதடவை வாய்ப்பை வழங்குவதாக அமைந்துள்ள போதிலும், பாதிக்கப்பட்ட மக்கள் இதன் மூலம் வடுக்களையும் பழைய நினைவுகளையும் புதுப்பித்துக் கொள்வதற்கும் இதன் மூலம் இவர்கள் மேலும் பாதிப்புறுவதற்குமான சாத்தியத்தை வழங்கி யுள்ளது.

கடந்த காலத்தில் இலங்கையில் நியமிக்கப்பட்ட பல்வேறு ஆணைக் குழுக்களால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நிறைவேற்று வதற்கு இலங்கை அரசு முன்வரவில்லை.

அதாவது இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ் மொழியைப் பேசுகிறார்கள். ஆனால் பெரும்பான்மை சமூகமானது இந்த மொழியைக் கற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பாடலில் சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

சாட்சியங்கள் மிகவும் துல்லியமாக மொழிபெயர்க்கப்படாதவிடத்து, புதிய நாடு கடந்த நீதிப் பொறிமுறை என்பது நேர்மையான தீர்வை முன்வைக்கும் என நம்பமுடியாது. இதன் மூலம் நாட்டில் மீளிணக்கப்பாடு ஏற்படுத்தப்பட முடியும் எனவும் நம்பமுடி யாது.

*நன்றி: புதினப் பலகை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்

காங்கேசனூர்
**இ.விஜய்**

நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, 16 நாடாளுமன்ற ஆசனங்களைப்பெற்று தனது வெற்றியைப் பதிவு செய்திருந்தாலும், தேர்தல் காலத்தில் தமிழ் மக்கள் முன்வைத்த, மக்கள் தமக்குள் விமர்சித்துக் கொண்ட ஒரு சில விடயங்களைக் கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டிய காலம் ஒன்று வந்துவிட்டதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் உணர்வார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டி உள்ளது. அவ்வாறு மக்கள் முன்வைத்த கருத்துக்களில் இரண்டு விடயங்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தன.

1. இளைஞர்களுக்கு தேர்தல்களில் வாய்ப்புக்கள் வழங்கப்படுவது இல்லை.


2. த.தே.கூ. தலைவர்களோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ மக்கள் சந்திப்புக்களை நடத்துவது இல்லை. அவர்கள் பிரச்சினைகளைக் கண்டு கொள்வதும் இல்லை.


மேற்குறிப்பிட்ட விமர்சனங்கள் உண்மையோ, பொய்யோ என்று உறுதியாகக் கூறமுடியாது விட்டாலும் ஓரளவுக்கு அந்தக் கருத்துக்களில் நியாயம் உண்டென்பதையும் மறுத்துவிட முடியாது. ஏனெனில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பாலும் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக போட்டியிட்டவர்களுக்கே மீண்டும் மீண்டும் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். திருமதி மதனி நெல்சன், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அனந்தராஜ் என்று புதுமுகங்களுக்கு வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கியிருந்தாலும், சென்ற வடமாகாணசபைத் தேர்தலில் தமது பேச்சாற்றலால் இளைஞர்களை, கல்விச் சமுதாயத்தை வசப்படுத்தக்கூடிய துடிப்புமிக்க இளைஞர்களை நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் இறக் காமை கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்பதை மறந்து விடமுடியாது. தேர்தல் களத்தில் இளைஞர்கள் இறக்கிவிடப்பட வில்லை என்ற குற்றச்சாட்டு மேலெழுந்து வந்தபோதுதான், அந்தப் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து வந்ததை உணர்ந்தபடியால் தான், சுன்னாகத்தில் நடந்த பரப்புரைக் கூட்டம் ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவர் மேடையில் இருந்த பிர தேச சபை முன்னாள் தலைவர்கள் மாகாண சபை உறுப்பினர்களைச் சுட்டிக்காட்டி இவர்கள் இளைஞர்கள் இல்லையா? என்று கேள்வியெழுப்பினார். ஆம்! இளைஞர்கள்தான். ஆனால் மிக முக்கிய தேர்தலான இந்தத் தேர்தலில் அதுவும் தேசிய ரீதியிலான தேர்தலில் இளைஞர்கள் எவரும் களத்தில் இறக்கிவிடப்படவில்லையே? விட்டிருப்பின் வெறும் ஏழு வாக்குகளால் ஓர் ஆசனத்தை இழந்த நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வந்திருக்காது அல்லவா? ஒருவேளை ஏழு ஆசனங்களுமே கிடைத்திருக்கலாம் அல்லவா? இந்த நிலை இனி மாற வேண்டுமானால் இனிவரப்போகும் எந்தத் தேர்தல்களிலும் இளைஞர்களுக்குரிய வாய்ப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் வழங்க முன்வர வேண்டும்.

அடுத்து, மக்கள் முன்வைத்த விமர்சனங்களில் முக்கியமானது, மக்களை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பதில்லை. அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்வருவதில்லை என்ற குற்றச்சாட்டுத்தான். இதனைத் தான் சென்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்த்து நின்ற சகல வேட்பாளர்களும் மக்கள் முன் கூற முற்பட்டார்கள், கூறினார்கள். சில மக்களிடம், இந்தக் கருத்துக்கள் தாக்கத்தை உண்டு பண்ணியதும் உண்மை. புதிய தலைமுறை தொலைக்காட்சியில், இலங்கைத் தேர்தல் தொடர்பான விவாத நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தோழர் தியாகுகூட இந்தக் கருத்தையே முன்வைத்தார். தமிழகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று மக்கள் பிரச்சினைகளை தீர்க்க முற்படும் நிலையில், கூட்டமைப்பினர் தேர்தல் முடிந்து கொழும்புக்குச் சென்றுவிடுவார்கள். வாக்களித்த மக்களுக்கு நன்றி செலுத்தக்கூட முன்வரமாட்டார்கள் என்ற குற்றச்சாட்டை தோழர் தியாகுவே இந்தியாவிலிருந்து குறிப்பிடுகின்றார் என்றால் இங்குள்ள சாதாரண தமிழ் மகன் ஒவ்வொருவனும் எப்படியான கருத்து நிலைப்பாட்டை கொண்டிருப்பான் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டும் என்று இல்லை.

இந்தமுறை தேர்தல் பரப்புரைக்காக கூட்டமைப்பினர் மாதகல் பகுதிக்குச் சென்றபோது, அந்தப் பகுதி மக்கள் கூறிய கருத்துக்கள் கூட்டமைப்பின் தலைவர்களை சிந்திக்க வைத்ததையும் அவர்கள் அவை குறித்துச் சிந்திப்பதையும் உணரமுடிகிறது. இருப்பினும் மாற்றம் எந்தளவு என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டி உள்ளது.

இந்த நிலையில் மக்கள் முன்வைத்த, எதிர்க்கட்சிகள் கூறுகின்ற கருத்தை உள்வாங்கி, கூட்டமைப்பைக் குறைசொல்வது மட்டுமே இந்தக் கட்டுரையின் நோக்கம் அல்ல. அவர்கள் மக்களுக்காகச் செய்தவற்றையும் இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும். மக்களின் அன்றாடப் பிரச்சினைகளில் அவர்கள் தலையிடவில்லைத்தான். ஆனால் 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார்த்தையில் புலிகள் தரப்பு முன்வைத்த அவசியமான தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவர்கள் முயன்றுவருவதை, தீர்வு கண்டிருப்பதை மறுத்துவிட முடியாது. குறிப்பாக சம்பூர் மீட்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்கள் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்படுகிறார்கள் என்பதற்கு சிறந்ததொரு உதாரணம்.





> தமிழகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் தங்கள் தங்கள் தொகுதிகளுக்குச் சென்று மக்கள் பிரச்சினைகளை தீர்க்க முற்படும் நிலையில், கூட்டமைப்பினர் தேர்தல் முடிந்து கொழும்புக்குச் சென்றுவிடுவார்கள். வாக்களித்த மக்களுக்கு நன்றி செலுத்தக்கூட முன்வரமாட்டார்கள் என்ற குற்றச்சாட்டை தோழர் தியாகுவே இந்தியாவிலிருந்து குறிப்பிடுகின்றார்

வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்பட்ட ஆயிரத்து நூறு ஏக்கரும் இவர்களது போராட்டங்களுக்கு கிடைத்த வெற்றி என்றே கூறலாம். அது மட்டுமல்ல, வலி.வடக்கு மக்களின் நிலமீட்புப் போராட்டங்களிலும், காணாமற்போன உறவுகளின் போராட்டங்களிலும், அரசியல் கைதிகள் விடுவிப்பு முயற்சிகளிலும் இவர்கள் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதை மறுத்துவிட முடியாது. இருப்பினும் இன்னமும் வீரியமான செயற்பாட்டையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

விமர்சனங்களுக்கு எல்லாம் கூட்டமைப்பினர் தரவேண்டிய பதில் வெறும் பத்திரிகை அறிக்கைகள் அல்ல. உண்மையான, அர்ப்பணிப்பான நடவடிக்கைகளே ஆகும். இல்லை எனில் ராஜபக்சவின் புலிக்கதைகளையும் கற்பனைகளையும் மீறி எப்படி ரணிலால் 106 ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்ததோ, அதுபோல் கூட்டமைப்பு எதிர்க்கட்சிகள் மீது வைக்கின்ற துரோகக் குற்றச்சாட்டுக்களையும் மீறி தேர்தல் களங்களில் அவர்கள் முன்னிலைக்கு வருவதை எவராலும் தடுத்துவிடமுடியாது. தமிழ் மக்களுக்குத்தேவை தேசியக் கட்சிகளிடமும், தேசியத் தலைமைகளிடமும் விலைபோகாத தலைமைகள்" அதேவேளை மக்கள் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தரும் விதத்தில், அந்த வகிபாகத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக நிறைவேற்ற வேண்டிய காலகட்டம் இதுவே ஒழிய, தேர்தல் காலங்கள் அல்ல. தேசிய பட்டியல் சம்பந்தமான முரண்பாடுகளைக் களைந்து கூட்டமைப்பினர் செயலில் இறங்கவேண்டும். அப்போதுதான் மக்களும் அவர்களுடன் கைகோர்க்க முன்வருவர். வாக்களிப்பு வீதமும் அதிகரிக்கும். தமிழ்த் தேசியமும் வலுப்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 800 | 800 | 600 | 600 | 800 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 300 | 400 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 700 | 600 | – |
| பாரை | 500 | 600 | 600 | 600 | 500 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 700 | 600 | 450 |
| சீலா | 250 | 500 | 500 | 450 | 450 | 350 |
| விளை | 550 | 500 | 400 | 500 | 400 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 400 | – |
| கும்பிளா | 350 | 400 | 250 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | 450 | – | – |
| ஒரா | 300 | 400 | – | 500 | – | – |
| திரளி | 200 | 300 | 150 | 200 | 100 | – |
| நகரை | 150 | 300 | – | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 250 | 100 | 200 | 100 | – |
| ஒட்டி | 200 | 250 | 200 | 200 | – | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 300 | 300 | 150 |
| பாலை | 350 | 150 | – | 400 | 250 | – |
| வாளை | 100 | 150 | – | 300 | 200 | 200 |
| கொய் | 100 | 100 | – | 120 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 250 | 200 | 250 |

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 9 | | 3 | | 4 | 7 |
| | | 5 | 1 | 8 | | | | |
| | | | | | | 1 | | |
| | | 7 | | 3 | 5 | | | |
| | | | | | | | | |
| | 5 | | | | 2 | 6 | | 8 |
| | | 6 | | | | 4 | | |
| | | | 3 | 1 | 7 | | | |
| | | | | | | | 9 | 3 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 6 | 3 | 5 | 4 | 9 | 8 | 2 |
| 5 | 3 | 9 | 8 | 2 | 1 | 7 | 6 | 4 |
| 8 | 2 | 4 | 7 | 6 | 9 | 3 | 1 | 5 |
| 1 | 8 | 2 | 4 | 3 | 6 | 5 | 7 | 9 |
| 9 | 5 | 7 | 2 | 1 | 8 | 4 | 3 | 6 |
| 6 | 4 | 3 | 5 | 9 | 7 | 8 | 2 | 1 |
| 2 | 7 | 8 | 6 | 4 | 5 | 1 | 9 | 3 |
| 3 | 9 | 5 | 1 | 7 | 2 | 6 | 4 | 8 |
| 4 | 6 | 1 | 9 | 8 | 3 | 2 | 5 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**புரட்டாதி-22**
**வெள்ளிக்கிழமை**
**09.10.2015**

திதி: துவாதசி மு.இ.11.38 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ.07.08 வரை
சுபநேரம்: 06.02-07.32 வரை
இராகு காலம்: 10.32-12.02 வரை

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 40 | 60 | 25 |
| கத்தரி | 40 | 60 | 40 | 60 | 40–60 | 40 | 80 | 30–35 |
| கரட் | 50 | 80 | 60–120 | 110 | 80–120 | 100 | 100 | 110 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 60 | 60 | 70 | 50 | 70–80 | 120 | 100 | 50–70 |
| பாகல் | 80 | 100 | 120 | 80 | 80–90 | 80 | 110 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 80 | 60–70 | 100 | 120 | 70–80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 90–100 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 80 | 120 | 60–70 | 140 | 100 | 100–130 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 | 30–40 | 60 | 50 | 30–40 |
| தக்காளி | 70 | 60 | 60 | 60 | 50–60 | 120 | 80 | 70–80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 60–70 | 40 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 15 | 30 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20–25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 160 | 140 | 140–160 | 180 | 200 | 150 |
| புடோல் | 50 | 60 | 40 | 40 | 40–50 | 60 | 60 | 40 |
| கோவா | 70 | 80 | 60 | 60 | 40–50 | 120 | 100 | 40 |
| வெண்டி | 50 | 40 | 60 | 60 | 60–80 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 140 | 140 | 180 | 180 | 130–140 | 200 | 160 | 140 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 | 80 | 50–60 | 100 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 40–50 | 50–55 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 90–120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 140 | 360 | 240 | 260 | 230–240 | 450 | 160 | 150 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 10 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 120 | 80–70 | 100 | 120 | [illegible] |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | 80 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 60 | 40 | 80–90 | 80 | 120 | 70 |

## ஒரு நாட்டின் முன்னேற்றம் எது?

ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளப்பதற்குரிய மிகச் சிறந்த கருவி, அந்த நாடு பெண்களை எந்த அளவுக்கு மதிக்கிறது என்பதை அறிவதாகும். எங்கு பெண்கள் மதிக்கப்படுகிறார் களோ,அங்கே தேவதைகள் மகிழ்ச்சி அடைகின்றனர். எங்கே அவர்கள் மதிக்கப் படவில் லையோ, அங்கே எல்லாக் காரியங்களும்,

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



முயற்சிகளும் நாசமடைகின்றன. எந்த நாட்டில், எந்தக் குடும்பத்தில் பெண்களுக்கு மதிப்பு இல்லையோ, எங்கே அவர்கள் துயரத்தோடு வாழ்கிறார்களோ, அந்த நாடும் குடும்பமும் உயர்வடைவதற்கான வாய்ப்பே இல்லை!

## பலனை எதிர்பாராது செயற்படு

இறைவனிடம் அடைக்கலம் புகு– இதற்கு,

1.உனது செயல்களை இறைவனுக்கு அர்ப்பணி.
2.அவை இறைவனது செயல்கள் என நினை.
3.கடவுள் மேல் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் எதையும் செய்.
4.நானே செய்பவன் என எண்ணாதே.
5.அவற்றுக்குப் பலனை எதிர்பாராதே. மனித முயற்சியால் எதுவும் நடக்காது என்று திடநம்பிக்கை கொள்.



**சாயி சிந்தனை**

## பச்சைப் பயறை தினசரி உணவில் சேர்த்துக் கொள்வோம்

நாம் தினசரி உண்ணும் உணவில் ஊட்டச் சத்துக்கள் நிறைந்து இருக்க வேண்டியது அவசியமாகும். அத்தகைய ஊட்டச் சத்துக்கள் நிறைந்த உணவை உட்கொள்வது தான் எமது ஆரோக்கியத்துக்கு மிகவும் உதவியாக இருக்கும். வயிற்றுக்குக் கிடைத்ததை உட்கொள்ளலாம் எனும் போது உடநலப் பிரச்சினைகள எட்டிப் பார்க்கத் தொடங்குகின்றன. தற்போதைய சூழ்நிலையில் சரியான ஆலோசனை, மாறிவரும் சமூகத்தால் போதிய நேரமின்மை ஆகியவை உண்ணும் உணவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த உணவு என்பது கேள்விக் குறியாகி விடுகிறது.

இத்தகைய சுழலில் நாம் தினசரி சாப்பிடும் உணவில் பருப்பு வகைகளைச் சேர்த்துக் கொள்வது உடல் நலத்துக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்கும். அதிலும் பச்சைப் பயறு உடல்நல ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

★ஒரு கோப்பை வேக வைத்த பச்சைப் பயறில் 100 கலோரிகளுக்கு மேல் உள்ளது. இவை நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது.

★ பச்சைப் பயறு, சருமம் மற்றும் கூந்தல் பராமரிப்புக்கும் உதவுகிறது. பச்சைப் பயறு நீண்ட நேரம், வயிற்றை நிறைவாக வைத்திருக்க உதவுகிறது.

★பச்சைப் பயறு உடல் நிறையைக் குறைக்க உதவுகிறது. உடல் நிறையைக் குறைக்க முயற்சிப்போர் ரொட்டி சாப்பிடும்போது பச்சைப் பயறைச் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் உடல் நிறை கட்டுப்பாட்டுடன் இருக்கும்.

★சருமப் புற்றுநோயில் இருந்து பச்சைப் பயறு பாதுகாப்பு அளிக்கும். அன்றாடம் வெளியில் சுற்றுவோர், பாசிப்பருப்பு அல்லது பச்சைப் பயறை உணவில் சேர்த்து வந்தால், சருமப் புற்றுநோய் ஏற்படுவதை தடுக்க முடியும்.

★ குருதி அழுத்தத்தைக் கட்டுப்பாட்டுடன் வைக்கவும், கொலஸ்ரோல் அளவைக் குறைக்கவும் பச்சைப் பயறு பெரிதும் உதவியாக இருக்கும்.

★அன்றாடம் பச்சைப் பயறு அல்லது பாசிப் பருப்பை உணவில் சேர்த்துக் கொள்ளும் போது உடலில் இரும்புச் சத்துக் கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

**நான்காம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்து கடந்த 6ஆம் திகதி உதயனில் விவரித்திருந்தோம். இன்று 5 ஆம் எண்ணில் பிறந்தவர்களது பலன்கள் பற்றிப் பார்ப்போம். எண் 5 (5. 14, 23) இல் பிறந்தவர்களின் வாழ்க்கை ரகசியம்**

ஒரு ஜாதகத்தைக் கணிப்பதென்றால் கூட திதி, வாரம், யோகம், கரணம், நட்சத்திரம் பார்க்கப் பஞ்சாங்கம் தேவைப்படுகிறது. பஞ்ச என்பது 5 ஐக் குறிக்கும். மனித வாழ்க்கை ஆகாயம், பூமி, நீர், நெருப்பு, காற்று என்னும் பஞ்ச பூதங்களுக்குள் அடங்கியுள்ளது. அது மட்டுமன்றி தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஐம்பால்களான ஆண் பால், பெண் பால், பலர் பால், பலவின்பால், ஒன்றன் பால் போன்றவையும் ஐந்து வகையாகத்தான் அமைந்துள்ளன. நாம் பூமியின் வகைகளைக்கூட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையானதாகத்தான் பிரித்துள்ளோம். வீட்டில் ஏற்றக்கூடிய குத்து விளக்கில் கூட ஐந்து முகங்கள் உள்ளதை நாம் அறிவோம். எனவே ஐந்து என்ற எண்ணும் எமது வாழ்வில் பின்னிப் பிணைந்துள்ள சிறப்பான எண்ணாகும். 5, 14, 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் 5 ஆம் எண்ணின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்களாகஉள்ளார்கள். ஐந்தாம்எண்ணுக்குரிய கிரகம் புதன் பகவானாவார்.

**குண அமைப்பு**

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் எதிலும் பிறரின் உதவியின்றித் தனித்துச் செயற்பட முடியாது. பலரது அபிப்பிராயத்தைக் கேட் டுத் தெரிந்து கொண்டாலும் தங்கள் மனதில்உள்ளதைவெளியிடமாட்டார்கள். எதையும் வெகு எளிதில் கிரகித்துக் கொள்வார்கள். பின்னால்நடக்கப்போவதைக்கூட முன் கூட்டியே அறியக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள். வெளித் தோற்றத்துக்கு வெகுளியாகக் காட்சியளிக்கும் இவர்கள் மிகுந்த காரியவாதிகள். பிடிக்காதவர்களின் தொடர்பை உடனே அறுத்தெறிவார்கள். இவர்களின் பேச்சில் கேலியும் கிண்டலும் நிறைந்திருக்கும். மற்றவர்களுக்குத் துன்பம் நேர்ந்தால் மனதுக்குள் சந்தோஷப்படுவார்கள். எதையும் அவசர அவசரமாகச் செய்து முடிப்பார்கள். சிரிக்கச் சிரிக்கப்பேசித்தன்னுடையகாரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள். இவர்களுக்குத் தனிமை பிடிக்காது.

சமூக வாழ்வில் ஈடுபட்டு தமக்கென ஒரு அந்தஸ்தை உருவாக்கிக் கொள்வார்கள். அறிவும் சாமர்த்தியமும் அதிகம் இருந்தாலும்ஆழ்மனதில்ஏதோ ஒருபயமும், சந்தேகமும் குடி கொண்டிருக்கும். இவரது பேச்சுத் திறமை பிறரை ரசிக்கும்படி வைக்கும். புத்திக் கூர்மையும், அறிவாற்றலும் நிறைந்திருப்பதால் எந்தப் பிரச்சினைகளிலும் மாட்டிக் கொள்ளாமல் நழுவி விடுவார்கள். அனுபவமும் அறிவாற்றலும் நிறைய உடையவர்கள் என்றாலும், தங்களுடைய குண இயல்புகளை நேரத்துக்கு ஏற்றாற் போல் மாற்றிக்கொள்வார்கள். எந்த விதமானகடினவேலைகளை எடுத்துக் கொண்டாலும், அதைப்பொறுப்போடுதவறுகளின்றிச் செய்துமுடிப்பார்கள். முடிந்தவரைகடினமானபணிகளைஏற்றுக்கொள்ளமாட்டார்கள். எதிர்பாராத திடீர் உயர்வுகளும் இவர்களுக்கு கிட்டுவதுண்டு.

**உடலமைப்பும், ஆரோக்கியமும்**

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் நடுத்தரமான உயரமும், அழகான முக அமைப்பும் கொண்டிருப்பார்கள். கண்களில் ஒருவிதமான கவர்ச்சி இருக்கும். வேகமாக நடப்பார்கள். பேச்சில் இனிமை இருக்கும். இவர்கள் அதிகமாகச் சிந்தனை செய்வதால் நரம்புகள் பலவீனம் அடைந்து நரம்புத் தளர்ச்சி நோய் உண்டாகும். தலைவலி, உடற்சோர்வு அதிகமாக இருக்கும். சரியான ஓய்வு இல்லாமல் தூக்கமின்மை, முதுகு வலி, கை கால் வலி, உடல்வலி போன்றவை உண்டாகும். வாயுத் தொல்லையும் இருக்கும். சரியான் நேரத்துக்குச்சாப்பிடாததால் குடற்புண்ணும் ஏற்படும். நன்றாக ஓய்வெடுப்பதும், உணவுப் பழக்க வழக்கத்தில் சரியான முறையைக் கடைப்பிடிப்பதும் நல்லது.



**குடும்ப வாழ்க்கை**

ஐந்தாம்எண்ணில்பிறந்தவர்களுக்குக்குடும்பவாழ்க்கைஎன்பதுதிருப்திஅளிப்பதாகவே இருக்கும். கூட்டுக் குடும்பமாக இருந்தாலும் சரி, தனிக் குடும்பமாக இருந்தாலும் சரி வாய்க்கக்கூடியவாழ்க்கையை அனுசரித்து நடப்ப வராக இருப்பார். நல்ல அறிவாற்றலும், கல்வித் தகுதியும் உடையவராக இருப்பார். சிறுசிறு பிரச்சினைகளால் கருத்து வேறுபாடுகள் அவ்வப்போது தோன்றி மறையும். இவர்கள் சுகமான வாழ்க்கைவாழ்வதையே விரும்புவார்கள். விருப்பத்திற்கேற்ற வாழ்க்கையே இவர்களுக்கு அமையும். கிடைக்காதவற்றுக்கு ஏங்காமல், இருப்பதை வைத்து திருப்தியுடன் வாழ்வர்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவும் திருப்தியளிப்பதாக இருக்கும். உற்றார், உறவினர்களின் ஒத்துழைப்பு இவர்களுக்குத் தடையின்றிக் கிடைக்கும்.

**பொருளாதாரம்**

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்களுக்குப் போதுமென்கிறஅளவுக்குப்பொருளாதார நிலைதிருப்தியளிப்பதாக இருக்கும். பகட்டான செல்வாக்கு நிறைந்த வாழ்க்கை அமையும். ஓய்வு நேரங்களிலும் உடலுழைப்பின்றி மூளையைப் பயன்படுத்தி ஏதோ, ஒரு வழியில் சம்பாதிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். ஆதலால் பணவரவுகள்திருப்திகரமாகவே இருக்கும். சேமிப்பும் ஓரளவுக்குச் சிறப்பாக அமையும். பெரிய முதலீடுகளில் செய்யும் காரியங்களில் மிகவும் கவனத்துடன் செயற்படுவது மிகவும் உத்தமம்.

**தொழில்**

ஐந்தாம் எண் அறிவு சம்பந்தமான எண் என்பதால், அறிவு பூர்வமான பணிகளும், எதையும் புதிதாகக் கண்டு பிடிப்பதில் ஆர்வமும் அதிகமாகவிக்கும். வங்கிக் கணக்கர் தொழில், கணிப்பொறி சம்பந்தப்பட்ட துறைகளில் சாதனை செய்யக்கூடிய ஆற்றலும் உயர்வும் கிட்டும். சோதிடம், வானவியல், எழுத்துத்துறை, பத்திரிகை, புத்தகம் வெளியிடுதல் போன்றவற்றிலும் நல்ல முன்னேற்றம் கிட்டும். கலைத்துறை, இசைத்துறையிலும் உயர்வு ஏற்படும். உடல் உழைப்பு என்பது இவர்களால் முடியாத காரியமாகும். அறிவுப் பலத்தால் எதையும் சாதிப்பார்கள்.

**நண்பர்கள், பகைவர்கள்**

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் சிரிக்கச் சிரிக்கப் பேசக்கூடிய ஆற்றல் கொண்டவர்கள் என்பதால், இவர்களுக்கு நண்பர்கள் வட்டாரம் அதிகம் இருக்கும். இவரின் நகைச்சுவையுணர்வால் பலரைக்கவர்ந்திழுப்பர். 1 மற்றும் 6 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நெருங்கிய நண்பர்களாக இருப்பார்கள். 2 ஆம் எண்ணைத் தவிர மற்ற எண்ணில் பிறந்தவர்களும் நட்பாகவே அமைவார்கள்.

**புதனுக்குரிய காலம்**

ஒவ்வொரு ஆண்டிலும் மே மாதம் முதல் ஜூன் மாதம் வரையிலும், புதனுக்குரியது. புதன் கிழமை புதனுக்குரியது.

**புதனுக்குரிய திசை**

வடக்குத் திசை புதனுக்குரியது. கலைகள், கல்வி நிலையங்கள், விளையாடும் இடங்கள், வாசகசாலைகள் யாவும் புதனுக்குரியவை. ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் வடக்குமுகமாக எந்தக்காரியங்களைத் தொடங்கினாலும் வெற்றி கிட்டும்.

**அதிர்ஷ்டக் கல்**

ஐந்தாம் எண்ணில் பிறந்தவர்கள் என்பதால் மரகதப் பச்சை என்ற கல்லை அணிய வேண்டும். இதனால் நோய்கள் நீங்கும். எடுக்கும் காரியங்களில் வெற்றி கிட்டும். செய்யும் தொழிலில் வெற்றியும் நண்பர்களின் உதவியும் கிடைக்கும். நரம்பு பலவீனப்பட்டவர்களுக்கு நலம் கிட்டும்.

**பரிகாரம்**

ஐந்தாம்எண்ணில்பிறந்தவர்கள்ஸ்ரீவிஷ்ணு பகவானை வழிபடுதல் நல்லது. புதனுக்குப் பரிகாரம் செய்வதும் உத்தமம்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்டத் திகதிகள்–5,14,23,6,15,24
அதிர்ஷ்ட நிறங்கள்– சாம்பல், வெளிர் நீலம், வெளிர் பச்சை
அதிர்ஷ்டத் திசை –வடக்கு
அதிர்ஷ்டக் கல் –வைரம், மரகதப் பச்சை
அதிர்ஷ்ட தெய்வம் –ஸ்ரீவிஷ்ணு




# எது பெண்ணியம்?


பெண்ணுக்கு உரிமை வேண்டும். பெண்ணுக்குச் சுதந்திரம் வேண்டும். பெண்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேற வேண்டும். இதுதான் இன்றைய பெண்ணிய வாதிகளின் இலக்கு. இதையே வேறு விதமாகச் சொன்னால், பெண்கள் எல்லாம் ஆண்களுக்கு நிகராக வர வேண்டும் என்பதுதான் அவர்களின் ஆசை. அதற்காக அவர்கள் ஆண்களைப் போலவே உடை அணிவார்கள், ஆண்கள் செய்யும் எல்லா வேலைகளையும் செய்வார்கள், ஆண்கள் இருக்கும் எல்லாத் துறைகளிலும் கால் பதிப்பார்கள். ஆண்களைப் போல இருக்க வேண்டும் என்ற போக்கில் அவர்கள் ஆணாகவே மாறிக்கொண்டிருக்கிறார்கள். பெண்ணாக இருப்பதை மறந்து கொண்டு வருகின்றார்கள். எல்லாப் பெண்களும் ஆண்களைப் போல ஆக வேண்டும் என்று எண்ணுவது பெண்மைக்குப் பெருமை தரும் செயலா? இல்லை, ஆண்மைக்குப் பெருமை தரும் செயலா? நீங் களே மறைமுகமாகப் பெண்ணடிமைத்தனத்துக்கு வழிவகை செய்கிறீர்களே?

பெண்மைக்கு மேன்மை செய்யப் போகிறேன் என்ற பெயரில் நீங்களே ஆண்மைத்தனத்தை விரும்பி உங்களைப் போன்ற பெண்களைப் பலவீனப்படுத்துவது எப்படிப் பெண்மையை வலுப்படுத்தும்? பெண்மையை மேன்மைப்படுத்த, பெண்மைகளையெல்லாம் ஆண்மையாக்கினால் அது எப்படி பெண்மைக்கு வலுச் சேர்க்கும். பெண்மையை மேன்மைப்படுத்தச் செய்யும் செயல், சில கரடுமுரடான ஆண்மையைப் பதப்படுத்தி அதைப் பெண்மையாக்குவதில் அல்லவா இருக்க வேண்டும். கரடு முரடான ஒரு காட்டுமிராண்டி மனிதன் ஒரு பெண்ணைக் காதலிக்கத் தொடங்கியதும் கவிதை எழுதத் தொடங்கி, காடு மலைகளைவர்ணித்து, கடவுளில் முடிக்கிறானே, அங்கே அல்லவா இருக்கிறது பெண்மையின் வெற்றி; பெண்மையின் மேன்மை. இந்த உலகில் பெண்மையைச் சாகடிப்பதில் ஆண்களை விடப் பெண்களே முன்னிலையில் நிற்கிறார்கள். ஆனால் அதற்கு பெண்மையை வளரச் செய்கிறோம் என்று பெயர் வேறு கொடுத்துவிடுகிறார்கள். ஆலமரத்தைப் பார்த்து அருகம்புல், தானும் ஆலமரத்தைப் போல் வரவேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்தனை செய்தது. இதிலே பெருமை ஆலமரத்துக்கா? அருகம்புல்லுக்கா? நான் ஆலமரத்தை பெருமை என்றோ அருகம்புல்லை சிறுமை என்றோ கூறவில்லை. இரண்டுக்கும் அததற்கு உரிய பெருமை இருக்கிறது என்று கூறுகிறேன். அருகம்புல்லுக்குஎன்று ஒருஅழகு, நளினம்இயற்கையிலேயே இருக்கிறது. ஆனால் அது ஆலமரமாக ஆசைப்பட்டுப் பிரார்த்திக்க ஆரம்பித்தபோதே அது அதைவிட்டு போய்விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க





## அன்பின் மதிப்பு




குணசீலன் என்ற அரசன் ஒருவன் நோய்வாய்ப்பட்டு, பல நாள்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்கத் தினமும் பல பிரமுகர்கள் வந்து கொண்டிருந்தனர். ஒரு நாள், சில பெரிய மனிதர்கள் பலவிதபழங்களைக்கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான். அவனது கலைந்த தலை முடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தனது கிராமத்திலிருந்து வெகு தூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், அரசே... உங்கள் உடல் தேற வேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள், அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடி விடும் – என்றான். அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப்போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ, பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு, தனது கழுத்தில் இருந்த முத்து மாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்குப் பரிசாக அளித்து அனுப்பினான்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த, மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், அரசே, கெட்டுப்போன பொங்கலுக்கா முத்துமாலை பரிசு? என்று கேட்டார். மன்னனோ, அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங் கபடமற்ற மனதுடன் தனது கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான். அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்து மாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது -என்று கூறினான். எமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்குச் சேவை புரிய வந்து நிற்பார்.

## ஒருமை - பன்மை

பேனா – பேனாக்கள்
கிளி – கிளிகள்
காகம் – காகங்கள்
பூ – பூக்கள்
பூனை – பூனைகள்
புத்தகம் – புத்தகங்கள்
கதிரை – கதிரைகள்
மீன் – மீன்கள்
கல் – கற்கள்
பசு – பசுக்கள்
சட்டை – சட்டைகள்



பூச்சி – பூச்சிகள்
புறா – புறாக்கள்
மேசை – மேசைகள்
படம் – படங்கள்
கொப்பி – கொப்பிகள்
தொப்பி – தொப்பிகள்
பென்சில் – பென்சில்கள்
கண் – கண்கள்

ஜே.தூரிகா.
தரம்–3பி.
சென்.பெனடிற் வித்தியாலயம்.

**சிறுவர் மற்றும் இளவல் பக்கத்துக்கு வாசகர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**


# நல்வாழ்க்கை வாழ ....

பிறவிகளிலேயே மனிதப் பிறவி அரிதானது. அதிலும் இளமைப் பருவம் என்பது மிக முக்கியத்துவமானது. இப்படி அரும்பிறவி எடுத்த அனை வரும் தமது வாழ்நாள் முழுவதும் நல்ல ஒழுக்கத்துடனும், நன்னடத்தையு டனும் வாழ்கின்றனரா? என்பது கேள்விக்குறியே. நூற்றில் ஒரு சிலரே நல்ல மனிதர்களாக வாழ் கின்றனர். சிறு வயது முதல் நல்ல பண்புடனும், ஒழுக்கத்துடனும் வ்ளர வழி காட்டப்படாததே பலர் ஒழுக்கத்தோடு வாழாததற்கு முக்கிய காரணம் என்று கூறமுடியும். அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் இன்றைய இளைஞர்களைப் பற்றிய கருத்தைக் கேட்டு மதிப்பிடும்போது, இன்றைய இளைஞர்கள் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று உணர முடிகின்றது. இப்படி வெறும் வார்த்தைகளால் மட்டும் சொல்லி விட்டால் போதுமா?.. அதற்கான காரணங்களையும், தீர்வுகளையும் ஆராயத் தவறி விடுகிறோம் என்பதே உண்மை நிலை. அன்று இருந்த பொருளாதாரச் சூழ்நிலையில் ஒரு சைக்கிள், றேடியோ அல்லது தொலைபேசி என்பன ஒரு வளர்ச்சியடைந்த கிராமத்தில்கூட அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் இருந்தன. அப்போது இளைஞர்கள் வளர்ந்த சூழ்நிலை, அவர்களின் சிந்தனையைச் சிதறவிடுவதற்கு வழிவகுக்கவில்லை. தானுண்டு, படிப்புண்டு என்றிருந்த போது கடமையும் ஒழுக்கமும், பண்பும் இளைஞர்களோடு ஒட்டி உறவாடின. ஆனால் இப்போது காணும் விஞ்ஞான வளர்ச்சியினால், இணையத்தளம் , முகநூல், சினிமா போன்றவற்றில் கவனம் சிதறி படிப்பிலும், பண்பிலும் நாட்டம் குறைந்து விட்டது. ஒரு விதத்தில் இன்றைய இளைஞர்கள் தவறான பாதையில் செல்ல, தொலைக் காட்சி நிகழ்ச்சிகள் அதிக அளவில் காரணிகளாக இருக்கின்றன என்று கூடச் சொல்லலாம். ஒன்றுக்கும் உதவாத இத்தகைய களிப்பூட்டும் நிகழ்ச்சிகளில் அதிக அளவில் நேரத்தைச் செலவிடுவதால், இளமையில் கல்லாது ஊர்சுற்றித் திரிந்து, வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்கின்ற பலரைக் காணமுடிகிறது. இப்படிச் சமுதாயத்தில் நிலவி வரும் சீர்கேடுகளே இளைஞர்களுக்கு ஒரு சவாலாக அமைந்து விடுவதை நாம் உணர்ந்து கொண்டு வருகிறோம். இந்தச்சமுதாயச் சூழ் நிலையை மேலும் சற்று ஆராய்ந்து நோக்கினால், உண்மை நிலவரம் புரியும். இப்போது வெளிவருகின்ற பெரும்பாலான திரைப்படங்கள், ஊடகங்கள், தொலைக்காட்சிகள், வலைத்தளம், வானொலி, செய்தித்தாள் போன்றவை வெளியிடும் தலையங்கச் செய்திகள் அனைத்துமே, இளைஞர்களுக்கு வக்கிரத்துக்கும், வன்முறைக்கும் வழிகாட்டுகின்றன என்பதே பெற்றோர்களின் ஒருமித்த கருத்தாகும். இவர்களின் கூற்றுப்படி, இன்றைய சூழ்நிலை இளைஞர்களுக்கு நல்வழி காட்டுகிறதா?... என்றால் இல்லை என்று அடித்துக் கூற முடி யும்.



அனைத்து வசதிகளையும் ஒரே நாளில் அனுபவித்து விடவேண்டும் என்கிற இளைஞர்களின் பேராசையைப் பூர்த்திசெய்ய பெற்றோர்கள் ஆதரவளிப்பது இன்னொரு காரணம். தங்கள் பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர்கள் படும் அல்லல்களை என்றாவது ஒருநாள் இந்த இளைஞர்கள் சிந்தித்திருக்கிறார்களா? இன்று இளைஞர்களின் கல்வி அறிவுக்குப் பஞ்சமில்லை என்றாலும் – நல்வாழ்க்கைக்கு இட்டுச் செல்லுகின்ற பாதைகள் தான் அவ்வப்போது தடம் மாறுகின்றன. ஒரு வகையில் அபரிமிதமான விஞ்ஞான வளர்ச்சியும் கூட இளைஞர்களின் சிந்தனையைத் திசை திருப்புகிறது என்பதை முன்பே சொல்லியிருந்தேன். தனிமரம் தோப்பாகாது என்பது போல, பலதரப்பட்ட மக்களைக் கொண்ட ஒரு சமுதாயம் சிறப்பாக அமைய வேண்டுமானால், நல்லொழுக்கமும், பண்பும் நிறைந்த இளைஞர்களின் பங்கு மிக மிக அவசியம். இளைஞர்களின் பிரச்சினைகளை மட்டுமே சீர்தூக்கிப் பார்க்காமல், நல்வழி காணும் யோசனைகளையும் ஒவ்வொரு மனிதனும் கருத்தில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் பலவித இன்னல்களைச் சந்தித்த பிறகுதான் ஒரு தாய் தனது பிள்ளையை ஈன்றெடுக்கிறாள், பின்னர் அவன் வளர்ந்து வாலிபனாகி அறிவால் சிறந்து விளங்கினால் மட்டுமே அந்தத் தாயின் இன்னல்கள் மறைந்து வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சி நீடிக்கிறது. தந்தைக்கு மகனைச் சான்றோனாக்குகின்ற கடமை ஏனைய கடமைகளுள் முன்னிலை வகிக்கிறது. இத்தகைய கடமைகள் எல்லோருக்கும் பொதுவானது என்றாலும், அதை நிறைவேற்றுவதில்தான் ஒவ்வொருவரும் வேறுபட்டு நிற்கின்றனர். இன்றைக் குக் கூட தந்தையின் அன்புக்கு ஏங்கும் பல குழந்தைகளைக் காணமுடியும். இன் றைய இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், நல்வழியில் செல்வதற்கு ஒரு சில வழிகளே உள்ளன. தற்காலத்தில் இளைஞர்களின் அபரிமிதமான செயற்றிறன் அதிகமாக இருந்தாலும் ஒழுக்கமும் பண்பும் மிகக் குறைந்தே காணப்படுகிறது. தன்னம்பிக்கை, சுயமுன்னேற்றம் என்ற மாபெரும் சக்தி இளைய தலைமுறையினருக்கு வழி காட்டும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு வலுவான, ஒழுக்கமுள்ள சமுதாயத்தை உண்டாக்க முதன் முதலில் வழிகாட்டுபவர் ஈன்றெடுத்த அன்னையேயாகும். பிறகு கடமையை உணர்த்தும் தந்தை, அடுத்து ஆசிரியர், சமூகம் இவையெல்லாம் ஒன் றன் பின் ஒன்றாக அணிவகுத்து, கடைசியில் இறை நம்பிக்கையோடு கலந்து நிற்க வேண்டும். இளைமைப் பருவத்தில் எந்த ஒரு செயலுக் கும் முடிவெடுக்கும் திறன் மிக முக்கியம். முடிவெடுக்க முடியாத நிலை வரும்போது பெரியோர்களின் வழிகாட்டல் இளைஞர்களுக்கு அவசியமாகிறது. தற்போது இருக்கும் சமுதாயச் சூழ்நிலையில், இளைஞர்களை நல்வழியில் செயற்பட வைப்பது அனைவருக்கும் ஒரு சவால் என்றே கூற முடியும். அதில் வெற்றி கிடைத்தால் சாதனை என்று கூடச் சொல்லிக் கொள்ள லாம். இதனால்தான், இளைஞர்களின் முன்னேற்றப் பாதைக்கு வழிவகுத்த, எண்ணற்ற மகான்களும், அறிஞர்களும், தலைவர்களும் நிகழ்த்திய சாதனைகளையும், அருமை, பெருமைகளையும், அவ்வப்போது இன்றைய இளைஞர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இன்றும் நாம் இருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

ஆசிரியர்களுக்கு நடைபெறவிருந்த அதிபர் தரம் –111 போட்டிப்பரீட்சை வரும் 10 ஆம் திகதியில் இருந்து பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மதிப்பீட்டுக் கடமையில் உள்ள அநேக ஆசிரியர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் குறித்து கல்வி அமைச்சுக்கு, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன்வைத்த வேண்டுகோளுக்கிணங்கவே நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–4)

## ஐ.நாவுடனான

காரிகளைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐ.நா பொதுச்சபை அமர்வுக்காக நியூயோர்க் சென்றிருந்தபோது, ஐ.நா பொதுச்செயலர் பான் கீ மூனுடன்தாம்நடத்தியபேச்சுக்களின் மூலமேஐ.நாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் பலமடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில், இலங்கைக்குத் தேவையான குடிதண்ணீர்த் திட்டங்கள் குறித்து ஆராயப் பட்டுள்ளது. தாம் குடிதண்ணீர்த் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் போவதாகவும் ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

இதற்கு ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் உதவியை எதிர்பார்ப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். (த-வ)

## 41360 பேர்

முறைப்பாடுகள் இருப்பின், அதனைத் தேர்தல்கள் திணைக் களத்துக்குத் தெரியப்படுத்த முடி யும்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட் டத்தில், யாழ்.மாவட்டத் தில் 22 ஆயிரத்து 898 பேர் நீக் கப்படுகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 354 பேர் நீக்கப்படுகின்றனர். யாழ்.மாவட்டத்தில் 32 ஆயிரத்து 975 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 ஆயிரத்து 385 பேரும் இணைக்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

### துயர் பகிர்கின்றோம்

எமது அலுவலகத்தில் வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **அ.வேதநாயகம்** அவர்களது அன்புத் தந்தையார் **அருக்காஞ்சி அந்தோனி** அவர்கள் காலமாகி விட்டார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், தீவகம் தெற்கு, வேலணை.

பிரதேச செயலகும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

### 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



உதிப்பு 25.02.1953 — உதிர்வு 10.09.2015

அமரர்

**சிவசம்பு சிவேந்திரன்**

கடந்த 10.09.2015 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் சிவசம்பு சிவேந்திரன் அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (08.10.2015) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 10.10.2015 சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நடராஜா வீதி, வேலணை மேற்கு, வேலணை-08.

குடும்பத்தினர்.

(65411)(10.17)

### தேவை

அலங்கார கடை ஒன்றிற்கு பணியாளர்கள் உடனடியாகத் தேவை.

T.P - 077 775 0318

### வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி நகர் மத்தியில் (BOC இயங்கிக் கொண்டிருக்கும் கட்டடம்)-2016 தை மாதம் தொடக்கம் வாடகைக்கு விடப்படும். (அரச/ தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு:

077 784 9369, 021 222 8063

### அமெரிக்க Green Card Lottery - 2017

அமெரிக்க Green Card Lottery விண்ணப்பிப்பதில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்களை ரூபா 15/= முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை Bristol Cyber Cafe, No.8/3/4 Bristol Street, Colombo - 01 எனும் முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம்

Tel: 011 239 3919, 077 427 6579

W/A44843 www.bristolcc.biz

### தவறிவிட்டது

ஆனந்தாவீதி, மானிப்பாயைச் சேர்ந்த வல்லிபுரம் ஆனந்தராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (482945228v), சாரதி அனுமதிப்பத்திரம்,காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ்(05.10.2015) அன்று இரணைமடு மருதநகரில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 075 041 0782

### சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2683 திகதி: 2015-10-07

35 59 60 67 M 47

ரூ. 27,813,100/-

### ஜனஜய

வெற்றி வாரம் 676 / திகதி 2015-10-07

L 40 42 45 64

ரூ.7,412,500/-

### தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை

(N.C.T Civil)

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் உடனடியாகத் தேவை.

அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: இல.25, ஆனந்த நகர், கிளிநொச்சி.


தொலைபேசி : 0777444098

Email - dandevakumar@gmail.com

## நீங்கா நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவு — 20ஆம் ஆண்டு நினைவு


நாளும் நாம் நலிந்துருக
ஆண்டு ஒன்று ஆனதுவோ?



மண் மகிழ 12.01.1988 — கண் நெகிழ 05.10.2014

**அமரர் குமாரசாமி திவாகரன்**

விடியல் தந்த சூரியனாய்.. விழிகளில் ஒளியைத் தந்தாய்.....
மடிந்து மண்ணில் வீழ்வதற்கா..
மனதில் வந்து இடம் பிடித்தாய்.. வெடித்துச் சிதறும் எம் இதயம்...
வேதனை கொண்டு துடிக்கிறதே...
மடிதனிலே சந்ததியை மலர்த்திவிட்டுச் சென்று விட்டாய்...
விடியலது தேடி அவன்.. விழித்து உமைக் காண்பதெப்போ..
இடி விழுந்த எம் இதயம் இரங்கல் கவி வடிக்கிறது...
முடிவிதற்கு இல்லையா சொல்.. முகங்காட்ட எங்கு போவோம்...!



மண் மகிழ 18.12.1957 — கண் நெகிழ 26.01.1995

**அமரர் சுப்பிரமணியம் குமாரசாமி**

வாழ்வோடு வழிகாட்டி ஒளியூட்டினீர்...
வசந்தத்தை எமக்காக வாழ்வாக்கினீர்....
தோளோடு தோள் தந்து துணையாகினீர்...
தொலைதூரம் ஏன் சென்று துயராகினீர்..
நாளோடி வருடங்கள் பலவாகினும்...
நம்மோடு தினம் வாழும் உன் ஞாபகம்...
ஏழேழு ஜென்மங்கள் தான்தோன்றினும்
எங்களின் மனமெங்கும் நீர் வாழுவீர்.

கச்சாய் தெற்கு,கொடிகாமம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதாட்டிக்கு

கிழமை இடம்பெற்றுள்ளது.

விசுவமடுவைச் சேர்ந்த அன்னலட்சுமி(வயது-62) என்பவரே இவ்வாறு தங்க நகைகளைப் பறி கொடுத்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கிளிநொச்சி விசுவமடுவில் வசிக்கும் குறித்த மூதாட்டி உருத்திரபுரம் பகுதியில் வசிக்கும் தனது மகளிடம் செல்வதற்காகக் கிளிநொச்சி நகருக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து உருத்திரபுரம் பகுதிக்குச் செல்லும் உள்ளூர் பஸ்ஸில் ஏறிப் பயணித்துள்ளார். குறித்த பஸ்ஸில் மூதாட்டியுடன் அன்பாகப் பேசிப் பழகிய ஒருவர் இடையில் மென்பானம் ஒன்றை அவருக்குக் குடிக்க வழங்கியுள்ளார். அதனை அருந்திய மூதாட்டி சிறிது நேரத்தில் மயக்கம் அடைந்துள்ளார்.

அந்தச் சமயம் பார்த்து குறித்த நபர் மூதாட்டி அணிந்திருந்த தங்க நகைகளான சங்கிலி,மோதிரம் என்பவற்றை அபகரித்துக் கொண்டு இறங்கிவிட்டார். பஸ் தரிப்பிடத்தை அடைந்தபோதும் குறித்த மூதாட்டி இறங்கி வராமையால் பஸ் நடத்துநர் இதனை அவதானித்துள்ளார். உடனடியாக மூதாட்டி மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் மயக்கம் தெளிந்த மூதாட்டி இது தொடர்பில் பொலிஸில் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-101)

## மன்னார்

பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படியும் குற்றத்தடுப்புப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

கடந்த 2013 ஆம் ஆண்டு மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி எனச் சந்தேகிக்கும் இடத்தில், தொடர்ந்தும் அகழ்வு செய்யப்பட்ட புதைகுழியில் இருந்து 83 மனித மண்டையோடுகளும் மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இது சம்பந்தமான வழக்கு மன்னார் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இவ்வழக்கு தொடர்பில் புதைகுழிக்கு அருகாமையில் இருக்கும் கிணறு ஒன்றும் அகழ்வு செய்யப்படவேண்டும் எனக் காணாமற்போனவர்களின் சார்பாக முன்னிலையாகிய சட்டத்தரணிகள் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த அகழ்வு சம்பந்தமான வழக்கு மன் னார் நீதிமன்றத்தில் நேற்று நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்கில் சட்டத்தரணிகளுடன் குற்றத்தடுப்புப் பொலிஸாரும் முன்னிலையாகியிருந்தனர். ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் மரபணு சம்பந்தமான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்கும்படி மன்னார் நீதிமன்றம் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால் குறித்த அறிக்கை நேற்று மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. அடுத்த தவணையில் இதனைச் சமர்ப்பிப்பதாக மன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

சர்வதேச ரீதியில் மரபணுவை ஆய்வு செய்யவேண்டும் எனக் காணாமற்போனோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பித்திருந்தனர். நீதிமன்று அதனை ஏற்றுக்கொண்டதுடன் அது குறித்துக் குற்றத்தடுப்புப் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தது. அத்துடன் சர்வதேச நிபுணர் குழுவின் ஆய்வுக்கு மீட்கப்பட்ட எலும்பு எச்சங்களை அனுப்பி ஆய்வு செய்வதெனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கூறப்பட்டபோதும் அந்த நிபுணர்கள் இங்கு வந்து ஆய்வு செய்வதே பயனுடையது என்றும், அப்பொழுதுதான் எலும்புகள் மீட்கப்படும்போது என்ன நிலையில் உள்ளன என்பது பற்றிய அவதானிப்பும் ஆய்வுக்கு உதவும் என்றும் சட்டத்தரணிகள் வலியுறுத்தியுள்ளனர். அதனால் அது பற்றிய மேலதிக தகவலை அடுத்த தவணை கூறுவதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் தெரிவித்தனர்.

ஏற்கனவே அதே இடத்தில் அடையாளம் இடப்பட்டிருக்கும் சந்தேகத்துக்கு இடமான கிணற்றையும் அகழ்வு செய்வதற்குத் தாம் முன்னின்று ஈடுபட முடியாத சூழ்நிலை இருப்பதாகவும், எனவே அந்த வழக்கை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் படியும் குற்றத்தடுப்புப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனை மன்னார் பொலிஸாரும் ஏற்றுக்கொண்டு அடுத்த தவணையில் கிணற்றை அகழ்வு செய்து அதற்கான அறிக்கையைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து கிணற்றுக்குள் இருக்கும் மணலை அகழ்வு செய்யும்படி நீதவான் மன்னார் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதேவேளை, சட்டமா அதிபரின் ஆலோசனையையும் தாங்கள் பெறவேண்டிய அவசியம் இருப்பதாகவும் குற்றத்தடுப்புப் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இவ்வழக்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. காணாமற்போனோர் சார்பாக சட்டத்தரணிகள் ஜி.ராஜகுலேந்திரா, வி.எஸ்.நிறஞ்சன், திருமதி.றனித்தா ஞானராஜா ஆகியோருடன் மன்னார் சட்டத்தரணிகளின் சங்கம் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். சபூர்தீன் தலைமையில் மன்னார் சட்டத்தரணிகளும் இவ்வழக்கில் முன்னிலையாகியிருந்தனர். (த-4-56)

## சம்பூர்

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இதனால் இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் காலதாமதம் ஏற்படும் என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இந்தியாவின் இன்போலைன் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தியாவின் அரச நிறுவனமான தேசிய அனல் மின் கழகத் துடன் இணைந்து, 500 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில், சம்பூரில் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க, இலங்கை மின்சார சபை கடந்த 2006 ஆண்டு டிசெம்பர் மாதம் உடன்பாடு கையெழுத்திடப்பட்டது..

இந்த அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்பப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், சம்பூரில் இருந்து திருகோணமலை மாவட்டத்தின் பவுல் பொயின்ற் பகுதிக்கு மாற்றுவதற்கு இலங்கை அரசு, இந்தியாவிடம் கோரியுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாக, தமது பெயரை வெளியிட விரும்பாத இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் இந்த நிலைப்பாடு குறித்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹாவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும், ஆரம்பத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்ட இடத்தில் இருந்து, திருகோணமலைக்குத் தெற்கே வேறு இடத்துக்கு மாற்ற 2007ஆம் ஆண்டு இலங்கை கோரியது.

இதையடுத்து சம்பூரில் இந்த அனல் மின் நிலையத்தை அமைப்பதற்கான சாத்திய ஆய்வுகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தான், இலங்கை தரப்பில் இருந்து, வேறொரு இடத்துக்கு மாற்றும் கோரிக்கை மீண்டும் விடுக்கப்பட்டுள்ளது.

சம்பூரில் இந்த அனல் மின் நிலையத்தை அமைப்பதால், அங்கு மீளக்குடியேறும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக பொருளாதார சூழலில் தாக்கங்கள் ஏற்படும் என்றும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அனல் மின் நிலையத்தை அமைக்கும் இடம் மாற்றப்பட்டால் மீண்டும் புதிய சாத்திய வள ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இதனால் இரண்டு மூன்று ஆண்டுகள் காலதாமதம் ஏற்படும் என்றும் இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் விகாஸ் ஸ்வரூப்,

இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேசி வருகிறோம். இந்தத் திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் அனுமதிக்காகக் காத்திருக்கிறோம். குறிப்பிட்ட கால வரையறைக்குள் இந்தத் திட்டத்தை செயற்படுத்த இரு நாடுகளும் இணங்கியுள்ளன என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 2006ஆம் ஆண்டு கையெழுத்திட்டபோது இந்த அனல் மின் நிலையம் 2011ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## ரயில் மோதி

பட்டுள்ளது.

யாழ். சோமசுந்தரம் வீதி வழியான 392 ஆவது கிலோ மீற்றர் கல்லுக்கு அண்மித்த பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இந்த விபத்தில் திருநகர், இராஜசிங்கம் வீதியைச் சேர்ந்த தேவசகாயம் அனோக் (வயது 62) என்பவர் உயிரிழந்தவராவார்.

மனநிலை பாதிக்கப்பட்டிருந்த அவர் நேற்று அந்த இடத்துக்குச் சென்றிருந்தார் என்றும், ரயிலைக் கண்டதும் திடீரெனத் தண்டவாளத்தில் இறங்கி நடந்து சென்றுள்ளார் என்றும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது. அதனால் அவரை ரயில் மோதியதால் தலை வேறு, உடல் வேறு, கை வேறாகியிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ரயில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்தபோது இந்தச் சம்பவம் இடம் பெற்றது. தூக்கி வீசப்பட்ட முதியவரின் சடலத்தை ரயில் சாரதிகள் நாவற்குழி ரயில் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டுக் கொழும்புக்குப் பயணத்தைத் தொடர்ந்தனர். அது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். நீதிமன் றப் பணிப்புக்கு அமைய திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4-9-106)

## அமெரிக்க

நாதபுரம்அரண்மனை முன்பாக நேற்று முன்தினம் சீரழியும் தமிழகம் என்ற நூலை, தனது கட்சித் தொண்டர்களுக்கும், பொதுமக்களுக்கும் வழங்கினார். இதனையடுத்து அவர் கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் பொதுக் கூட்டத்தில் மேலும் பேசுகையில்:-

கடந்த 2009ஆம் ஆண்டில் இலங்கைத்தமிழர்கள் சுமார் இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்டோரை, அந்நாட்டு அரசு இனப் படுகொலை செய்தது. அதற்கு, இன்று வரை நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில், இலங்கைத்தமிழர்களுக்கு எதிராகவும், இலங்கைக்கு ஆதரவாகவும், ஐ.நா.வில் அமெரிக்கா தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது. எனவே, அமெரிக்காவுக்கு பாடம் புகட்டும் வகையில், அமெரிக்கப் பொருட்களை வாங்காமல் புறக்கணிக்க வேண்டும் –என்றார்.(த-வ)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லலித் வீரதுங்க, அனுஷவுக்கு கடும் நிபந்தனையுடன் பிணை

***அரச நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில் நீதிமன்றில் முன்னிலையாகியபோது***

கொழும்பு, ஒக்.8

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அரசபணத்தைத்தவறாகப்பயன்படுத்தியதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் கடுமையான நிபந்தனைகளுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசல வீரவர்த்தனவால் நேற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவுக்குச் சொந்தமான 600 மில்லியன் ரூபா பணத்தில் நாட்டின் அனைத்து விகாரைகளிலும் உள்ளவர்களுக்குச் சில துணிகளைப்பகிர்ந்தளித்தமை தொடர்பில் சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் நேற்றைய விசாரணைகளில் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதன்போது இந்த வழக்கு தொடர்பில் அவர்களது அதி உச்ச ஒத்துழைப்பை வழங்குவார்கள் எனவும், சாட்சியாளர்களை அச்சுறுத்தமாட்டார்கள் எனவும் சந்தேகநபர்கள் சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி குறிப்பிட்டார்.

மேலும் அவர்களது உடல் நிலையைக் கருத்தில் கொண்டு பிணை வழங்குமாறும் கோரினார்.

இதன்படி விடயங்களை ஆராய்ந்த நீதிபதி, ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 10 இலட்சம் ரூபா சரீரப் பிணைகள் மூன்றில் இவர்களை விடுவிக்க உத்தரவிட்டார்.

குறித்த இருவரினதும் கடவுச்சீட்டுக்களை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும் முகவரிகளில் மாற்றம் செய்தால் அது குறித்து நீதிமன்றில் அறிவிக்கவேண்டுமெனவும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பிணை நிபந்தனைகளை மீறினால், கைது செய்யப்படும் பட்சத்தில் சிறையில் அடைக்க நேரிடும் எனக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசல வீரவர்த்தன கட்டளையில் குறிப்பிட்டுள்ளார்.

(த-வ)

## ஜேர்மனிக்கு வருமாறு மைத்திரிக்கு அழைப்பு

கொழும்பு, ஒக். 8

ஜேர்மன் ஜனாதிபதி எஞ்சலோ மோர்கல் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனது நாட்டுக்கு பயணம் செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்ட ஜேர்மன் வெளியுறவுத்துறை அமைச்சர் பிராங்க் வோல்டர் ஸ்டெயின் மேயர் மூலமாக இந்த அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. ஜேர்மன் ஜனாதிபதியின் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்வதாகவும் தனது பயணத்துக்கான பூர்வாங்க ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி அமைச்சர் ஸ்டெயின் மேயரிடம் தெரிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலத்தில் ஐரோப்பிய யூனியன் இலங்கைக்கு வழங்கிய ஜி.எஸ்.பி.+ சலுகையை நீக்கியிருந்தது. அந்த யூனியனில் அங்கம் வகிக்கும் முக்கிய நாடுகளில் ஒன்றான ஜேர்மனியின் உதவியுடன் இழந்த ஜி.எஸ்.பி.+ சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்களசமரவீர தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வரும் இந்த வேளையில் ஜனாதிபதியின் ஜேர்மன் பயணம் அந்த சலுகையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் ஏற்றுமதிகளில் சுமார் 5 சதவிகிதத்தைக் கொள்வனவு செய்யும் ஜேர்மனி, உலக நாடுகள் மத்தியில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தை ஊக்குவிக்கும் ஐந்தாவது பெரிய சந்தையாக விளங்குகிறது. கடந்த வருடத்தில் ஜேர்மனி இலங்கையிடமிருந்து பெற்ற ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 824 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இவ்வருடத்தில் அந்தப் பெறுமதியை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துக்கொள்ள இலங்கை அரசு முயற்சி செய்து வருகிறது.

(த-சி)

## யாழ். நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை இன்று சட்டத்தரணிகள் புறக்கணிப்பர்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களின் நடவடிக்கைகளை இன்று வியாழக்கிழமை சட்டத் தரணிகள் புறக்கணிக்கப்போவதாக வடமாகாண சட்டத்தரணிகள் சங்க வலயத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க உறுப்பினரான சட்டத்தரணி ச.ராகவானந்தனின் வீட்டினுள் அத்துமீறிச் சென்ற கும்பல் வீட்டையும் பொருள்களையும் அடித்து நொருக்கி சேதப்படுத்தியதனைக் கண்டித்தே நீதிமன்ற நடவடிக்கைகளை புறக்கணிக்கவுள்ளதாக, யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

இது பற்றிய கூட்டம் ஒன்று யாழ். நீதிமன்ற கட்டடத்தொகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-4)

## அமெரிக்க தீர்மானத்தை தோற்கடிக்கவேண்டும்

### சொல்கிறார் சோமவன்ஸ

கொழும்பு, ஒக்.8

ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர் பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப் படவேண்டுமென ஜே.வி.பி. யின் முன்னாள் தலைவரும், மக்கள் சேவைக் கட்சியின் தலைவருமான சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தைத் தோற்கடிக்க முடியும். இலங்கையின் பௌதீக ஒருமைப்பாடு, இறைமை மற்றும் சுயாதீனத் தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை குறித்த தீர்மானம் மிகவும் பாரதூரமானது. ஐசிங் பூசி கசப்பான கசாயத்தை அருந்தக் கொடுப்பது போன்றதே இந்தத் தீர்மானமாகும். இந்தத் தீர்மானம் வெற்றியளித்தால் நிச்சயமாக இலங்கை விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்யும்-என்றார்.

(த-வ)

## தேயிலைக் கொழுந்து விலையில் கடும் வீழ்ச்சி

***சிறுதோட்ட உரிமையாளர்கள் பாதிப்பு***

கொழும்பு, ஒக். 8

பச்சைத் தேயிலைக் கொழுந்தின் விலை நாளாந்தம் சரிந்து வருவதால் சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பெரும் இக்கட்டுக்கு முகம் கொடுத்து வருவதாகத் தெரியவருகின்றது.

கடந்தசிலமாதங்களாகவேகொழுந்தின் விலை வீழ்ச்சியடைந்து வந்ததாகவும் அதற்கு நிவாரணத் தொகையாக அரசு வழங்கி வந்த 80 ரூபா மானியத் தொகையும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதால் தாங்கள் இரட்டிப்புப் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் தென்பகுதித் தேயிலை கிலோவொன்று 85–90 ரூபாவுக்குவிலை போனது. இவ்வருடம் ஓகஸ்ட் மாதத்தில் அதன் விலை 53–60 ரூபாவாக இருக்கிறது. இதன் காரணமாக சிறு தேயிலைத் தோட்டங்களை நிர்வகிப்பது மிகவும் கடினமாக இருப்பதால் நிறுத்தப்பட்டுள்ள மானியத்தை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் முதல் மீண்டும் தங்களுக்கு வழங்க வேண்டுமென அவர்கள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(த)

## பாரதி சனசமூக நிலைய அறிவித்தல்

### கம்பர்மலை வல்வெட்டி வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக்கூட்டம் தொடர்பான அறிவித்தல்

அறிவுசால் மாவட்ட செயலாளர் அவர்களின் கவனத்துக்கு, மக்கள் பிரச்சினைகள் கொண்டுவரப்பட்டதன் பயனாக தடைப்பட்ட 09.10.2015 அன்று நடைபெறவிருந்த வன்னிச்சி ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் உரிய முறையில் இடம்பெறும். அனைத்து பொது மக்களும் இதில் கலந்து உங்களுக்குரிய நிர்வாக சபையை அமைதியான முறையில் தெரிவு செய்து அம்பிகையின் தொண்டர்களாக வாழும்படி வேண்டி அழைக்கின்றோம்.

நேரம் : பி.ப 3.00

இடம் : ஆலய முன்றல்

பாரதி சனசமூக நிலைய,
நிர்வாகம்.

(C/18722) (10.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஸ்ரெல்லா றெபேக்கா விஜயரெட்ணம் (வவா)



91, கோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரெல்லா றெபேக்கா விஜயரெட்ணம் நேற்று (07.10.2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோண் - சிசிலியா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற டானியல் எட்வின் விஜயரெட்ணம் தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் சாவகச்சேரி) அன்பு மனைவியும், நந்திவர்மன் (ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்), சோழியவர்மன் (டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றோஸ்மேரியின் (ஆசிரியர் - சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர்) அன்பு மாமி யாரும், றோகித், றோகன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (09.10.2015) வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து திருப்பலிக்காக புனித யுவானியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத் திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

91, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
0750441011, 0779493308

தகவல் :
பிள்ளைகள், மருமகள்.

### தனபாலரட்ணம் டினேஸ்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், 147, தொண்டமான்நகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தனபாலரட்ணம் டினேஸ் நேற்று (07.10.2015) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் தனபாலரட்ணம் (கண்ணன்)- சந்திராதேவி தம்பதியரின் அன்பு புதல்வரும், துவாரகா, டிலக்ஷன் (ஸ்ரீலங்கா ரெலிகொம்), டீன்சன், துர்கா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2015) வியாழக் கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கிளி. திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொண்டமான் நகர்,
கிளிநொச்சி.

(65419) (10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னம்பலம் உமாகாந்தன்



ஏழாலையை பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு வளவத்தை ஒழுங்கையை வதிவிடமாகவும், தற்போது சுவிஸில் வசித்தவருமான பொன்னம்பலம் உமாகாந்தன் 05.10.2015 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏழாலையைச் சேர்ந்த பொன்னம்பலம் - தங்கம்மா தம்பதிகளின் அன்பு கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான கொக்குவில் கிருஸ்ணசாமி - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவகியின் அன்புக் கணவரும் அபிராவின் அன்புத் தந்தையும், நல்லை விக்ரமின் அன்பு மாமனாரும், அனந்தியின் பாசமிகு பேரனும், பத்மாசனி (லண்டன்), லட்சுமிகாந்தன் (லண்டன்) சந்திரவதனி (இலங்கை), காலஞ்சென்றவர்களான இந்திராணி, புஷ்பராணி, சத்தியபாமா, மாலினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவிஸில் இன்று (08.10.2015) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : தேவகி (வேணி - மனைவி சுவிஸ்லாந்து) 0041719888044

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில்

உனன்தன்ன, மல்மடுவ மாகுர கனிஷ்ட பாட சாலை மாண வன் ஆர்.டபிள்யூ.எம்.கவிஷ்க வணிகசேகர, கேகாலை சிறி சுமங்கல கனிஷ்ட பாடசாலை மாணவி பி.எச்.எல். மெலனி விஜேசிங்க ஆகியோரே 196 புள்ளிகளைப் பெற்று தேசிய ரீதியில் முதலிடத்தைப் பிடித்த னர்.

பாடசாலை ரீதியில் யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 58 வீதமானோர் சித்தியடை வதற்கான புள்ளிகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை பெற்றுள்ளது. அங்கு பயிலும் சிவ ஞானம் துளசிகன் 191 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளான்.

யாழ்ப்பாணத்தில் மூன்றாம் இடத்தைத் தும் பளை சிவப்பிரகாச வித்தியாலயம் பெற்றுள்ளது. அங்கு பயிலும் ஜெயந்திரன் நிவேதன் 190 புள்ளி கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளான்.

யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாண வர்கள் கனகராஜ் கவிலக்சன் 188 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5 ஆம் இடத்தையும் சிறிஸ்கந்தராஜா கஜலக்சன் 186 புள்ளிகளைப் பெற்று 9 ஆம் இடத்தினையும் பெற்றுள் ளனர்.

2015 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் இருந்து 227 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். அவர்களில் 133 பேர் சித்தியடைந்துள்ளனர். யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் தோற்றியவர்களில் 138 பேர் சித்தியடைந்துள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுக ளின் வெட்டுப்புள்ளிகளின் பிரகாரம், கொழும்பு, கம்பகா, களுத்துறை, கண்டி, மாத்தளை, காலி, மாத்தறை, குருணாகல், கேகாலை ஆகிய மாவட் டங்களின் வெட்டுப்புள்ளி 154, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, பதுளை ஆகிய மாவட் டங்களின் வெட்டுப்புள்ளி 153, கிளிநொச்சி, மன் னார், முல்லைத்தீவு, அம்பாறை, அனுராதபுரம், பொலநறுவை, இரத்தினபுரி வெட்டுப்புள்ளி 152, நுவரெலியா, திருகோணமலை, புத்தளம், மொனராகலை வெட்டுப்புள்ளி- 151, அம்பாந் தோட்டை வெட்டுப்புள்ளி 150 எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய வலயங்க ளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் பாடசாலை அதிபர்களுக்கு நேற்று நேரடியாக வழங்கப்பட் டுள்ளன.

ஏனைய அனைத்துப் பாடசாலைகளுக்கான பெறுபேறுகள் அடங்கிய பொதிகள் நேற்றுத் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட்சை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிங்கள மொழி மூலத்தில் கூடிய வெட்டுப்புள்ளி 160 ஆகவும் குறைந்த வெட்டுப்புள்ளி 153 ஆகவும் உள்ளன.

இம்முறை நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை யில் 340,926 மாணவர்கள் தோற்றியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகிய நிலையில், இவற்றில் மீள் திருத்தம் செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள் ளது. சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக குறித்த விண்ணப்பங்களை அனுப்ப முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-வ-4-101-106-109)

## அயராத

தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி யடைந்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாலை 4.30 மணி தொடக்கம் காலை வரையும் பின்னர் இரவு 10 மணிவரையும் கண் அயராது படிப்பேன். அவ்வாறு படித்ததன் மூலமாகவே சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந் தது. சிறந்த மருத்துவராவதே எனது இலட் சியம்.

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொள்வதற்கு எனது பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரிய ஜீவந்தி மற்றும் வகுப்பாசிரியர், தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள் ஊக்கமளித்ததுடன், சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தனர். பெற் றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்ட லில்சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்ட துடன், உயர்தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, சிறந்த வைத்தியனாக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம். புலமைப்பரிசில் பரீட்சையில் நல்ல பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற ஊக்கத்தைத் தந்த பெற்றோர்களுக்கு எனது நன்றிகள்-என்றார்.

(த-4-106)

## மக்கள்

விவசாயி சிவரஞ்சனுக்கு மகளாகப் பிறந்த கிளி நொச்சி தர்மபுரம் இல.1பாடசாலையைச் சேர்ந்த சிவரஞ்சன் லக்சிகா தற்போது வெளியாகியுள்ள தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தில் முதலிடம் பிடித்துச் சாதனை படைத்துள்ளார்.

இவர் மேலும் கூறுகையில்,

பாடசாலை ஆசிரியர்களால் வழங்கப்படும் பாடங்களை வீட்டுக்குச் சென்று மீட்டுப் பார்ப் பேன். மாலைநேர வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள் என்பவற்றைத் தவறவிடாது கலந்து கொள்வேன். படிப்பிக்கின்றபோது ஏதாவது சந்தேகம் வந்தால் உடனேயே பாட ஆசிரியரிடம் மீட்டுக்கொள்வேன். அத்தோடு புத்தகங்களைத் தேடிப் படிப்பதில் எனக்கு அதிக ஆர்வம் உண்டு நிறைய வாசிப்பேன். அதனால் தான் இப்பரீட்சையில் சித்தி அடைந்தேன்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு வைத்தியராக வந்து எனது கிராம மக்களுக்குச் சேவையாற்றுவதே எனது நோக்கம் . என்னைப் பரீட்சையில் சித்தி பெற வைத்த எனது பாடசாலைக்கும் எனது பெற்றோருக்கும் நான் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்- என்றார்.

(த-ரி3)

## விடாமுயற்சி

விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவி தர்மகுலசிங்கம் தக்சாளினி.

தர்மகுலசிங்கம் தக்சாளினி தற்போது வெளி யாகியுள்ள தரம் 5 மாணவர்களுக்கான புல மைப்பரீட்சையில் 186 புள்ளிகளைப் பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலிடம் பிடித்துச் சாதனை படைத்துள்ளார்.

விசுவமடு, புன்னை நீராவியடியைச் சேர்ந்த இவரின் தந்தை விவசாயி. தாயார் தாதி. தனது வெற்றி குறித்து அவர் கூறுகையில்,

எனது எதிர்கால இலக்கு பொறியியலாளராவது ஆகும். இதற்காக நான் உழைத்துக் கொண்டு இருக்கின்றேன். நான் இந்த வெற்றி பெற்றமை க்கு எனது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், உறவினர்கள், தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் போன்றோரின் ஒத்துழைப்பும், எனது விடா முயற்சியும், தன்னம்பிக்கையுமே காரணம் என உணர்கின்றேன்

மேலும் எனது கல்விக்காகப் பெற்றோர் அதிக அக்கறை காட்டினர். எனவே தந்தை, தாயின் விருப்பத்தை நிறைவேற்ற என்னாலான முயற்சியையும் செய்தேன். ஒன்றில் வெற்றி பெற வேண்டுமானால் வேறு சிந்தனையின்றி அதே நோக்குடன் செயற்படவேண்டும் -என்றார்.

(த-422-ரி3)

## விரிவுரையாளராவதே

பாடசாலையின் மாணவி ஹரிணி பரந்தாமன்.

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 188 புள்ளிகளைப் பெற்று வவு னியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவி ஹரிணி மேலும் கூறுகையில்,

நான் இப் பரீட்சையில் முதல் நிலையை அடைவதற்கு எனது வகுப்பாசிரியர் கோமதியே காரணம். அவர் விளங்கப்படுத்துவதைக் கேட்டு படிப்பேன். ரியூசனுக்குச் செல்வதில்லை. அதை விரும்பவில்லை. பள்ளிக்கூடப் படிப்பே போது மானது. அம்மாவும் அப்பாவும் எனக்கு ஊக்கம் தருவார்கள் அவர்கள் என்னைப் படிக்குமாறு கட்டாயப்படுத்துவதில்லை. அன்பாக எனது கற்றலுக்கு உதவி செய்தமையும் எனக்குச் சிறந்த பெறுபேற்றைப் பெற உதவியது.

பள்ளிக்கூடத்தில் எனக்கு நண்பர்கள் அதிகம். நல்ல ஆசிரியர் கோமதி, அதிபர் திரேசம்மா சில்வா, எங்கள் ஆரம்பபிரிவு அதிபர் முல் லைக்குமார் ஆகியோர்தான் எனது கல்விக்கு உதவி புரிந்தவர்கள். அதுமட்டுமல்ல பாடசா லையில் கலைச் செயற்பாட்டுப் போட்டிகள் எல் லாவற்றிலும் நான் வெற்றி பெறுவேன்.

எனது எதிர்கால இலட்சியம் நான் ஒரு விரிவுரை யாளராக வருவது தான். பல்கலைக்கழகத்தில் சிறந்த விரிவுரையாளராக வந்து பல மாண வர்களுக்கு கற்பிக்கவேண்டும் என்பது தான் எனது இலட்சியம்-என்றார்.

(த-21-402)

## வறுமையாளர்களுக்கு

பரீட்சைப் புள்ளிகள் நேற்று வெளியான நிலையில் 183 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதல் நிலையை அடைந்த மாண வன் அனோான் தனது வெற்றி குறித்து மேலும் கூறுகையில்,

மிகவும் வறுமைப்பட்ட ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் என்றே நான் படித்து கொண் டிருக்கின்றேன். எதிர்காலத்தில் வைத்தியராகி வறுமைப்பட்டவர்களுக்கு உதவி செய்யவேண் டும் என்பது தான் எனது இலட்சியம்.

நான் ரியூசனுக்குப் போவதில்லை பாடசா லையை மட்டுமே நம்பிக் கற்றேன். அதேபோல் எனது ஆசிரியர்களும் என்னை நன்றாக ஊக்குவித்தார்கள். பாடசாலையில் கற்ற விட யங்களை மீட்டுப் பார்ப்பேன். அதற்காக வீட்டில் 3,4 மணித்தியாலங்கள் செலவிடுவேன். கல் வியில் எவ்வளவு அக்கறை காட்டுவேனோ அதே அளவு விளையாட்டிலும் அக்கறை காட்டுவேன். எனக்கு விளையாட்டில் மிகவும் ஆர்வம். துடுப்பாட்டம் தான் நான் விரும்பும் விளையாட்டு. இதனால்தான் நான் இப்பரீட்சையில் முதலிடம் பெற்றேன். படித்த விடயங்களை மீட்டுப்பார்த்து வீட்டில் அதற்கான நேரத்தைச் செலவிட்டால் இலகுவாக சித்தி அடையலாம்-என்றார். (த-21)

## கூட்டாக வன்புணர்ந்த

அவர் இல்லாமலேயே இந்த வழக்கு விசாரணை நடை பெற்றுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

**பாதிப்புற்றோர் சாட்சியமளிப்பு**

கூட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண் தனது சாட்சியத்தில் தெரிவிக்கையில்,

சம்பவதினமன்று நள்ளிரவு 12 மணிக்கு வீட்டி னுள்ளே 4 இராணுவத்தினர் புகுந்தனர். அவர் கள் கையில் வைத்திருந்த கொட்டனால் எனது முழங் காலில் அடித்தனர். அருகில் படுத்திருந்த பிள்ளைகள் எழுந்து கத்தியபோது அவர்களுக்கும் அடித்தார்கள். இராணுவத்தினர் என்னைப் பிடித்து இழுத்தார்கள். எனது தம்பி ரஞ்சித், அக் காவை ஒன்றும் செய்யவேண்டாம் எனக் கத்தி யதால் ராணுவத்தினர் அவனுடைய கழுத்தைச் சவட்டி இழுத்துச் சென்று கொடிக் கயிற்றால் கையைக் கட்டினர். அந்தப் பயத்தில் என்னைப் பிடித்துக்கொண்டிருந்த ஆமியைத் தள்ளிவிட்டு வெளியில் ஓடினேன்.

அவ்வாறு ஓடியபோது, எனது பின் மண்டையில் அடி விழுந்தது. 3 ராணுவத்தினர் என்னைப் பிடித்து வீட்டின் பின்னால் உள்ள பற்றைக்குள் இழுத்துச் சென்றார்கள். என்னால் முடிந்த ளவுக்கு அவர்களிடமிருந்து தப்புவதற்கு முயற் சித்தேன் முடியவில்லை. கதறக் கதற என்னை ராணுவத்தினர் வன்புணர்ந்தார்கள் என்று தெரி வித்தார்.

அதேபோன்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட மற்றைய பெண் சாட்சியமளி கையில், அவர்கள் எனது உடைகளை பகுதி யாகக் களைந்தார்கள். எனக்கு மாதவிலக்கு. ஒன்றும் செய்ய வேண்டாமென்று அவர்களிடம் சொன்னேன். அவர்கள் எனது உள்ளாடைக ளைக் கழற்றிப் பார்த்த பின்னர், எனது கைக ளைக் கட்டிக் கீழே தள்ளிவிட்டார்கள் எனத் தெரிவித்தார்.

நாட்டின், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசால் அனுப்பப்பட்டிருந்தவர் களே இராணுவத்தினர். அவர்கள் தங்களுடைய இராணுவ முகாமில் இருந்து வெளியேறிச் சென்று, கூட்டு வன்புணர்வு மற்றும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்செயலைப் புரிந்திருக் கின்றார்கள்.

சம்பவத்தையடுத்துப் பாதிக்கப்பட்டவர்கள் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குச் சென்று முறையிட்டனர். அங்கு அந்த நேரம் விசாரணை ஒன்றுக்காகப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நின்றிருந்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களின் விடயத்துக்கு அவர் உடனடி நடவடிக்கை எடுத் தார். அதனால் அவர் சம்பவம் நடந்த இடத்துக் குச் சென்று தீவிர விசாரணை முன்னெடுத்தி ருந்தார். அது தொடர்பாக இராணுவப் பொலிசா ரும் விசாரணை செய்து நான்கு சிப்பாய்க ளையும் அன்று அதிகாலையிலேயே கைது செய்திருந்தனர்.

**ராணுவ வன்புணர்வு**
**ஒரு போர்க்குற்றம்**

வன்புணர்வானது ராணுவத்தினரின் நற்பெய ரைக் கெடுத்த செயல். இராணுவத்தின் கௌர வத்தைப் பாதுகாக்கவேண்டுமானால் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்குக் கடும் தண்டனை வேண்டும். இராணுவத்தினரின் பாலியல் வன்புணர்வுக் குற்றம் என்பது சர்வ தேச குற்றம். அது ஒரு போர்க் குற்றம். மனித நேயத்திற்கு எதிரான குற்றம் என ஐ.நா போர்க் குற்ற நீதிமன்றச் சட்டங்களிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டங்களிலும் பிரகட னப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறிய யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் தண்ட னையை அறிவித்தார்.

**வன்புணர்வுக்கு**
**20 வருட கடூழியச் சிறை**

அதன்படி முதலில் பெண்ணைக் கூட்டு வன் புணர்ந்த குற்றத்துக்காக 4 பேருக்கும் 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக் கப்பட்டது. அத்துடன் 4 பேரும் தலா 5 லட்சம் ரூபா வீதம் 20 லட்சம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்றும், அதனைச் செலுத்தத் தவறின் 2 வருடங்கள் சிறைத் தண்டனை அனு பவிக்கவேண்டும் என்றும், 25 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தவேண்டும் என்றும் தவறின் ஒரு வருடச் சிறைத் தண்டன அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

**துஷ்பிரயோகத்துக்கு**
**5 வருட கடூழியச் சிறை**

அதனைவிட பின்னர் ஐந்து பிள்ளைகளின் தாயைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றத்துக்காக 4 பேருக்கும் தலா 5 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தாய்க்கு நட்டஈடாகத் தலா ஒரு லட்சம் ரூபா வீதம் 4 லட்சம் ரூபா செலுத்த வேண்டும் என்றும், அதனைச் செலுத்தத் தவறின் ஒரு வருடச் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண் டும் என்றும், 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தவேண்டும் என்றும், அதனைச் செலுத்தத் தவறின் ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் மேலும் தெரிவித்தார்.

**நீதிமன்றில் அதிரடிப்படை**

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது பெண்கள் அமைப்புக்கள் உட்பட பலராலும் யாழ் மேல்.நீதி மன்றம் நிறைந்து வழிந்தது. மேல் நீதிமன்றக் கட்டடத்தின் முதலாம் மாடியில் பொலிஸ் அதிரடிப்படையினர் ஆயுதங்களுடன் பாதுகாப் புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். தீர்ப்பு அறிவிக்கப்பட்ட பின்னர் சந்தேக நபர்களில் ஒருவரின் தாய் அங்கு மயங்கி விழுந்துவிட்டார். வழக்கில் அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும் சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி அசேல டீ சில்வாவும் முன் னிலையாகியிருந்தனர்.

(த-4)

## இலங்கைக்கு

நேற்றுமுன்தினம் வெளி யிடப் பட்டுள்ள கூட்ட றிக் கையில் தெரி விக்கப்பட்டுள்ள தாவது:-

இலங்கையின் பொருளாதார ஒத் துழைப்பை வலுப்படுத்து வதற் காக, அடுத்த ஆண்டின் முதல் அரையாண்டில், அதிகாரிகள் மட்டத்தி லான, பொருளாதார கொள்கை கலந்துரை யாடல் ஒன்றை நடத்த முடிவு செய்யப் பட்டுள் ளது.

இலங்கைக்கு ஜப்பானிய நிறுவ னங்களை ஈர்க்கும் வகையில், முதலீடுகளுக்குச் சாதக மான சூழலை ஏற்படுத்துவதாகவும், நல்லாட்சி, வெளிப்படைத் தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாகவும் இலங்கைப் பிரதமர் உறுதியளித்துள்ளார்.

கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம் படுத்தும் உடன்பாட்டில் கையெழுத்திடுவதாக வும் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் நகரப் போக்குவரத்து உட்கட்ட மைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பம், ஆகிய வற்றில் மேலும் நெருக்கமான ஒத்துழைப்பை பேணுவதென்றும் இணங்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்த ஆண்டில் இலங்கையின் உள்ளூர் அரச அதிகாரிகள் 1800 பேருக்குப் பயிற்சி அளிக்கவும், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மீள்கட்டுமானப் பணிகளை மேற் கொள்ளவும், ஜப்பான் உதவிகளை வழங்கும் என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது என மே லும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக, கடல்சார் கண்காணிப்புக் குறித்து பேசப்பட் ட தாக ஜப்பானிய செய்தி நிறுவனமான கியோடோ தெரிவித்துள்ளது.

இதன்போது, இலங்கையில் கடல்சார் பாதுகாப்பு ஆற்றலைக் கட்டியெழுப்ப, ரோந்துப் படகுகளை வழங்குதல் உள்ளிட்ட, உதவிகளை ஜப்பான் வழங்கும் என்று ஜப்பானியப் பிரதமர் தெரிவித் தார். இதற்காக இலங்கைக்கு 45.4 பில்லியன் ஜப்பானிய யென் (521 பில்லியன் ரூபா) உதவியை வழங்க ஜப்பான் பிரதமர் முன்வந் துள்ளார். கடல்சார் விவகாரங்கள் தொடர்பாக இரண்டு நாடுகளும், இந்த ஆண்டு இறுதியில் பேச்சுக்களை நடத்தவும் இணங்கியுள்ளன என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(த-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவுத் தண்டனைக்கு எதிராகவே ஐ.நாவில் வாக்களிக்கும் அரசு

## நீதி அமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.8

இலங்கையில் சாவுத் தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது என்பதை ஐ.நா.மனித உரிமைகள் சபையில் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார் என்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

சாவுத் தண்டனையை தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பான ஐ.நாவின் யோசனைக்கு இலங்கை இம்முறை ஆதரவாக வாக்களிக்கும் என்றும் நீதி அமைச்சர் விஜேதாஸ குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கவேண்டும் என்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோது மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

உலகிலுள்ள 103 நாடுகள் சாவுத் தண்டனையைத் தமது சட்டத்திலிருந்து நீக்கியுள்ளன. சில நாடுகளின் சட்டத்தில் சாவுத் தண்டனை இருக்கின்றபோதும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

சாவுத் தண்டனையைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பான யோசனைக்கு 2007, 2008, 2009 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஆதரவாக வாக்களித்தது. 2012, 2014 ஆம் ஆண்டுகளில் வாக்களிப்பில் இலங்கை பங்கேற்கவில்லை. 2015 ஆம் ஆண்டு இடம்பெறும் வாக்களிப்பில் யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தில் உரையாற்றிய பாப்பரசர், சாவுத் தண்டனையை உலக நாடுகள் சட்டத்திலிருந்து நீக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மாதம் உரையாற்றிய வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கையில் சாவுத்தண்டனை நிறைவேற்றப்படமாட்டாது என்று கூறியிருந்தார்.

சாவுத்தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது. சில குற்றச்செயல்கள் தொடர்பில் சாவுத்தண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து சீனாவும் ஆராய்ந்து வருகிறது.

குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் தண்டனை அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதாகவே அமைய வேண்டுமே தவிர, பழிவாங்குவதாக அமையக்கூடாது.

இலங்கையின் சட்டத்தில் சாவுத் தண்டனை உள்ளபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதில்லை என்ற முடிவிலேயே அரசு தொடர்ந்தும் இருக்கின்றது–என்றார்.(த–சி)

# பல்கலை சொத்துகளுக்கு சேதம்; 13 மாணவர்கள் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக்.8

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்சொத்துகளுக்குச்சேதம்விளைவித்ததனர் என்று குற்றஞ்சாட்டி அதே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 13 மாணவர்களை நேற்று முன் தினம் அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்தனர். இவர்களை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது நீதிபதி பஸில் இவர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட பல்கலைக்கழகத்தின் நிந்தவூரில் அமைந்துள்ள பெண்கள் விடுதியின் ஜன்னல் ஊடாக வெளி ஆண்கள் பார்ப்பதாகப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் மாணவர்கள் முறையிட்டிருந்தனர். இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனப் பல்கலைக்கழக நிர்வாகம் உறுதிமொழி வழங்கியது.

ஆனால், இரண்டு மாதங்கள் கடந்தும் தகுந்த நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து கடந்த வியாழக்கிழமை நிர்வாகத்திற்கெதிராக ஆர்ப்பாட்டமொன்றை மாணவர்கள் நடத்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் சிலர் பல்கலைக்கழகச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்தனர்.

இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் 13 மாணவர்களைக் கைதுசெய்த அக்கரைப்பற்றுப் பொலிஸார் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.


ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொதுச் சொத்துகளுக்குச் சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிவான் நீதிமன்ற நீதிபதியான பஸில், 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (த)

# ஜப்பான் அரசரை சந்தித்தார் ரணில்

ரோக்கியோ, ஒக்.8

ஜப்பானுக்கான ஐந்து நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை ஜப்பான் மன்னர் மற்றும் மகாராணி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ரோக்கியோ நகரில் உள்ள இம்பீரியல் மாளிகையில் இந் தச் சந்திப்பு இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பில் பிரதமரின் பாரியார் மைத்திரி விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளி கிண்ணத் தொடரில் இன்றைய மோதல்கள்

***ஆண்கள் பிரிவு***

யாழ்ப்பாணம், ஒக். 8

நடப்பு வருடத்தின் முரளி கிண்ணத்தொடர் நேற்று ஆரம்பமாகி எதிர்வரும் 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மலியதேவ கல்லூரி அணியை எதிர்த்து டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட இணைந்த அணியை எதிர்த்து மொனராகலை இணைந்த அணி மோதவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டேப்றவேவா மத்திய கல்லூரி அணியை எதிர்த்து நுவரெலியா, கேகாலை இணைந்த அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு, திருகோணமலை இணைந்த அணி மோதவுள்ளது.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வத்தளை சென்.அன்ரனிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து சர்வதேச பாடசாலை இணைந்த அணி மோதவுள்ளது.

ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார், வவுனியா இணைந்த அணியை எதிர்த்து பி.டி.எஸ் குலரத்ன கல்லூரி அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் பிற்கல் 1.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றிச்மன் கல்லூரி அணியை எதிர்த்து தர்மராஜா கல்லூரி அணி மோதவுள்ளது.

***பெண்கள் பிரிவு***

மாங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டங்களில் முற்பகல் 11.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாத்தளை மகளிர் அணியை எதிர்த்து நித்தம்புவ மகளிர் அணி மோதவுள்ளது. இதே மைதானத்தில் மதியம் 2.40 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சீனிகம மகளிர் அணியை எதிர்த்து வடக்கு, கிழக்கு இணைந்த மகளிர் அணி மோதவுள்ளது. (ம-23)



முரளி கிண்ணத்துக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2மணிக்கு இடம்பெற்ற குறித்த நிகழ்வுகளின் ஒரு பதிவு. (ம-23)

# திருமலை – மட்டு அணியை வீழ்த்தியது டெப்ரவேவா அணி




யாழ்ப்பாணம், ஒக். 8

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இதில் டெப்ரவேவா கல்லூரி அணியும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் டெப்ரவேவா கல்லூரி அணி 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற டெப்ரவேவா கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்ய, முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்டங்களின் இணைந்த அணி 55 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக நிலுபுல் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் டெப்ரவேவா கல்லூரி சார்பில் சசிந்த 4 இலக்குகளையும் சமிக்க 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டெப்ரவேவா கல்லூரி 2 இலக்குகளை இழந்து 11ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே வெற்றிபெற்றது. அதிகபட்சமாக சதுரங்க ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களை விளாசினார். பந்துவீச்சில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் இணைந்த அணி சார்பாக விதுசன், மொகமட் இருவரும் தலா ஓர் இலக்கைக்கைப்பற்றினர். (ம-20)

# சம்பியனானது ஏஞ்சல்

யாழ்ப்பாணம், ஒக். 8

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப்பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக்கல்லூரியினால் யாழ்.மாவட்ட பாடசாலையின் அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆண்கள் பிரிவில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி சம்பியனானது.

நேற்றுமுன்தினம்செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிக்கொண்டது.

தமது அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி யாழ். இந்துக்கல்லூரி அணியை 82:59 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக வெற்றிபெற்று சம்பியனானது. ஆட்டநாயகனாக மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியைச் சேர்ந்த சிம்றோன் தெரிவான அதேநேரம் தொடராட்ட நாயகனாக யாழ். இந்துக்கல்லூரி அணியின் கீர்த்தனன் தெரிவானார். (ம-23)

# பொம்மர்ஸை தோற்கடித்தது நவஜீவன்ஸ்

மாங்குளம் ஒக். 8

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது நவஜீவன்ஸ்.

ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் பொபிநாதன் தனது அணி சார்பாக முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அதே அணியின் சுரேஸ் மேலும் ஒரு



கோலைப் பதிவுசெய்ய நவஜீவன் ஸின் ஆதிக்கம் பலப்படுத்தப்பட்டது. நீண்ட போராட்டத்தின் பின்னர் பொம்மர்ஸ் அணிவீரர் வைகுந்தன் பதில் கோல் ஒன்றைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி முன்னிலை வகித்தது.

பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய பொம்மர்ஸ் இரண்டாம் பாதியின் 2ஆவது நிமிடத்திலேயே தனது எண்ணத்தை நிறைவுசெய்தது. தற்பொழுது 2:2 என்றநிலைமை. பதில்கோலைவிளாசத்தவறவில்லைநவஜீவன்ஸ். மேலதிக கோல்கள் எவையும் பதியப்படாத நிலையில் 3:2 என்ற கோல் கணக்கில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-422)

# பருத்தித்துறைக் கோட்டம் வெற்றி

மாங்குளம், ஒக்: 8

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பாடசாலைகளின் அணி கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளின் அணியை வீழ்த்தியது.

முதல் பாதியில் 2:1 என்று ஆதிக்கம் செலுத்திய பருத்தித்துறை கோட்டக் கல்விப் பாடசாலைகளின் அணி, இரண்டாம் பாதியிலும் சிறப்பாகச் செயற்பட்டு 4:1 என்ற கோல் கணக்கில் கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளின் அணியை வீழ்த்தியது.

குறித்த நிகழ்வின் விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் [illegible] உயர்கல்வி ஆசிரிய ஆலோசகர் இராஜசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-422-108)

# உதைபந்தாட்டக் கலந்துரையாடல்

வலி வடக்கு, ஒக். 8

யாழ். மாவட்ட செயலக விளையாட்டுத் திணைக்களம் மைலோ கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தவுள்ள உதைபந்தாட்டத் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு கிறீன்கிறாஸ் விடுதியில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வலிகாமம், வடமராட்சி மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நூறு கழகங்கள் இம்முறை மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழிடம் வீழ்ந்தது சேனநாயக்க

## முரளி கிண்ணத்தின் முதல் ஆட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 8
நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றது.
இந்தத்தொடரில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணியும், யாழ். மாவட்ட இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் 3 இலக்குகளால் யாழ். மாவட்ட இணைந்த அணி வெற்றிபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மாவட்ட இணைந்த அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்ய, அசத்தல் தொடக்கம் கொடுத்தது டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணி. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான விஜயசேகர, குணசிங்க இருவரும் அதிரடியில் மிரட்டி எடுத்தனர். இறுதி இலக்காக 200 ஓட்டங்கள் நிர்ணயிக்கும் வகையில் சராசரி சென்று கொண்டிருந்தது. விஜயசேகரவை வெளியேற்றி இணைப்பாட்டத்தை பிரித்தார் இணைந்த அணியின் பிரதீபன். சக ஆரம்ப வீரரையும் வெளியேற்றினார் தசோபன். சாரசரி சடுதியான வீழ்ச்சி காண முதல் பத்துப் பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சேனநாயக்க அணி 61–2. பின்வரிசை வீரர்கள் தொடர்ந்து சொதப்ப முடிவில் டி.எஸ்.சேனநாயக்க கல்லூரி அணி 121 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் யாழ். மாவட்ட இணைந்த அணி சார்பாக பிரதீபன் 3 இலக்குகளையும், கதியோன் இரண்டு இலக்குகளையும், மதுசன், டியோன், தசோபன் மூவரும் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.
120 பந்துகளில் 122 ஓட்டங்கள் என்ற சாத்தியமான இலக்கை நோக்கிப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட இணைந்த அணிக்கு ஆரம்ப வீரர்களான சயந்தன், அலோடின் இருவரும் சுமாரான தொடக்கம் கொடுத்தனர். இணைப்பாட்டமாக 33 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் சயந்தன். மறுமுனையில் அலோடினும் ஆட்டமிழக்க யாழின் வெற்றி கேள்விக்குறியானது. தற்பொழுது களத்தில் கயானத் மற்றும் கார்த்தீபன். மீண்டும் ஒரு சிறந்த இணைப்பாட்டம். நம்பிக்கை துளிர் விட்டது. ஆனால் நிதானத்துக்கு ஏற்ப பந்துகள் வீணடிக்கப்படவும் செய்தன. இருவரும் இருபது ஓட்டங்களை தாண்டி அணியை நிலைப்படுத்த 3 இலக்குகளால் சேனநாயக்க கல்லூரியை வீழ்த்தியது இணைந்த யாழ்.அணி. (ம–20)

## ஆனந்தாவுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 8
நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
இந்தத் தொடரில் ஆனந்தாக் கல்லூரியும் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் ஆனந்தாக் கல்லூரி அணி 64 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆனந்தாக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகள் இழப்புக்கு 166 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கக்கல்லா 41 ஓட்டங்களையும், வரக்கொட 23 ஓட்டங்களையும், சுரவீர 22 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் கிளிநொச்சி, முல்லைத்தீவு இணைந்த அணி சார்பில் அஞ்சயன் 3 இலக்குகளையும், அருணா 2 இலக்குகளையும், வினோசன், நிதுசன் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.
167 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளி., முல்லை. இணைந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 102 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக விக்சன் 33 ஓட்டங்களையும், வினோசன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆனந்தா சார்பாக ஜெயலத் 4 இலக்குகளையும் எரங்க 2 இலக்குகளையும் கைப்பற்றினார். (ம)

## சாதித்தது மாத்தளை மகளிர் அணி

யாழ்ப்பாணம், ஒக். 8
முரளி கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஆட்டமொன்றில் சீனிகம மகளிர் அணியை 4 இலக்குகளால் வெற்றி பெற்றது மாத்தளை மகளிர் அணி.
முதலில் துடுப்பெடுத்தாடிய சீனிகம மகளிர் அணி 86 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழக்க பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மாத்தளை மகளிர் அணி 13.4 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது. (ம)

## கரப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 8
யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் ஏ, பி என இரு பிரிவாக முன்னெடுக்கப்பட்ட கரப்பந்தாட்டத் தொடர்களின் இறுதியாட்டங்கள் இன்று வியாழக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
ஏ பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பி பிரிவு அணிகளுக்கான இடையிலான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இணுவில் அமரகவி அணி மோதவுள்ளது.
இன்றை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இரவீந்திரன், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.எம். ராஜா ரணசிங்க, கௌரவ விருந்தினராக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் தலைவரும் முன்னாள் அரச அதிபருமான செ.பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம–23)

## மலையக இணைந்த அணியை வீழ்த்தியது சென்.ஜோன்ஸ் கல்லூரி

நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
இந்தத் தொடரில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் நுவரெலியா– கேகாலை இணைந்த அணியும் மோதிய ஆட்டத்தில் 45 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப் பெடுத்தாடத்தீர்மானித்தது. ஓட்டங்கள் எவையும் பெறப்படாத நிலையிலேயே சென்.ஜோன்ஸின் முதலாவது இலக்குச் சரிக்கப்பட்டது. ஓட்டங்கள் எதனையும் பெறாமல் விடைபெற்றார் சஜீந்திரன். வந்த வேகத்தில் ஆட்டமிழந்தார் அருளானந்தன். பிறேமானந்தனும் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சக ஆரம்ப வீரரான மணிவண்ணனும் 10 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். சென்.ஜோன்ஸ் 37–5. மத்திய வரிசை வீரர்கள் தொடர்ந் தும் சொதப்ப சென்.ஜோன்ஸ் தடு மாற்றம் பலமானது. பின்வரிசை வீரர்களின் அதிரடியில் சரிவில் இருந்து மீண்டு 110 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது சென். ஜோன்ஸ் அணி.
பந்துவீச்சில் நுவரெலியா–கேகாலை இணைந்த அணி சார்பாக சனுக்க 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
எட்டக்கூடிய இலக்கை நோக்கிப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுவரெலியா– கேகாலை மாவட்டங்களின் இணைந்த அணிக்கும் ஆரம்பம் சொதப்பவே செய்தது. கித்துகமுவை வீழ்த்தி இலக்குச் சரிவை தொடக்கி வைத்தார் பிறேமானந்த். பத்துப்பந்துகளை வீணடித்து விடைபெற்றார் ரவிகரா. மூன்றாம் நிலை வீரரான கோபினாத் ஒரே ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்ப தற்பொழுது நுவரெலியா, கேகாலை இணைந்த அணி 3–5. தீக்சன மட்டும் நிலைத்து நின்றார். மத்திய, பின்வரிசை வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை. முடிவில் 64 ஓட்டங்களில் சுருண்டு படுதோல்வியடைந்தது மலையக (நுவரெலியா, கேகாலை) இணைந்த அணி. (ம)




## ரிச்மன்ட் கல்லூரிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 8
நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடர் நேற்றுமுதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இந்தத்தொடரில் பி.டி.எஸ். குலரத்ன கல்லூரியும் ரிச்மன்ட் கல்லூரியும் மோதிய ஆட்டத்தில் ரிச்மன்ட் கல்லூரி 3 இலக்குகளால் வெற்றிபெற்றது.
நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற குலரத்ன கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மதுசங்கா 19 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் ரிச்மன்ட் கல்லூரி சார்பாக அதிகபட்சமாக எதிரிவீர 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
இலகுவாக எட்டக்கூடிய இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரிச்மன்ட் கல்லூரி அணி முன்னணி வீரர்களின் பங்களிப்புடன் 16.4 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக மெண்டிஸ் 28 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் குலரத்ன கல்லூரி சார்பில் ரன்சிக 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியத்தில் பதக்கம் வென்ற
## ஹென்றிஸ் மாணவர்கள் கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 8
தேசிய மட்ட 19 வயதுக்குட்பட்ட உடற்பயிற்சிப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், 19 வயதுக்கு உட்பட்ட உதைபந்தாட்டத்தொடரில் வெண்கலப்பதக்கத்தையம்வென்ற இளவாலை சென். ஹென்றிஸ் வீரர்கள் குறித்த கல்லூரியினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர். கல்லூரி பாண்ட் வாத்திய இசையுடன் இளவாலைச் சந்தியில் இருந்து கல்லூரியின்பிரதான மண்டபம் வரை அழைத்து வரப்பட்ட வீரர்கள், கல்லூரி அதிபர் அருட்திரு.ஜேசுதாஸ் தலைமையில் விழாவெடுத்து கௌரவிக்கப் பட்டனர்.
(ம-23)

**வேலையாள் தேவை**

அசைவ ஹோட்டல் ஒன்றுக்கு றொட்டி, கொத்து றொட்டி தயாரிக்கத் தெரிந்த ஆண் ஒருவர் உடனடியாகத் தேவை.

**தொடர்பு : 077 125 8072**

# பென்னட்டாவுக்கு பின்னடைவு



நடப்புவருடத்தின் இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள முன்னணி வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் ரென்னிஸ் தொடருக்கு தகுதி பெறுவார்என்று எதிர்பார்க்கப்பட்ட பென்னட்டா புதிதாக வெளியான தரப்படுத்தலில் சரிவைக் கண்டுள்ளார். இதனால் முன்னணி வீராங்கனைகளின் தொடரில் அவரது பங்குபற்றல் கேள்விக்குறியாகியுள்ளது.

ஒவ்வொரு வருடமும் இறுதிப்பகுதியில் தரப்படுத்தலில் முதல் எட்டு வீராங்கனைகளுக்கு மட்டுமாக ரென்னிஸ் தொடர் ஒன்று நடத்தப்படுவதுண்டு. அமெரிக்க கிண்ணத்தை கைப்பற்றிய காரணத்தினால் தரப்படுத்தலில் 17ஆவது இடத்திலிருந்து 5ஆவது இடத்துக்கு முன்னேறியபென்னட்டாமுன்னணி வீராங்கனைகளின் தொடரில் பங்குபற்றுவார் என்ற நிலைமை நேற்றுவரை இருந்தது. நேற்று வெளியான புதிய தரப்படுத்தலில் பென்னட்டாவின் இடத்தை ஆக்கிரமித்துள்ளார் முருகுசா. இதனால் பென்னட்டா 9ஆவது இடத்துக்கு பின்தங்கியுள்ளார். இவானோவிச், ரட்வன்ஸ்கா போன்ற பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வீராங்கனைகளும் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களுக்குள் இல்லை. (ம)

SATHAPONS EDUCATION CENTRE

**தரம் 5 புலமைப்பரிசில்**
**விசேட வகுப்புக்கள்- 2016**

பரீட்சைகள், செயலட்டைகள், வலவாளங்களால் கருத்தரங்குகள் என்பன
விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்
திரு. ச. சுகர்ணன் Dip.Teach(Spl.Ed)
அவர்களின் வழிகாட்டலில் 09.10.2015
பி.ப 3.30 மணி (வெள்ளிக்கிழமை)
முதல் நடைபெறும்.
பதிவுகள் இன்று முதல்



இயக்குனர்
சதாபொன்ஸ்
0212263206
0773095176

**Dubai நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**

Dubai நாட்டில் உள்ள Global Shiping நிறுவனத்தில்

- *Packing Helpers- 925+OT
- * Customer care Executive- 1800+OT
- * Forclipe Operator- 1200+OT
- *Pest Control Supervisor 3500+OT
- * Pest Control Technician 1200+OT
- * Cleaning Supervisor 3000+OT
- * Cleaners 925+OT

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். எதிர்வரும் 10ஆம்,13ஆம் திகதிகளில் டுபாய் நாட்டவர்களால் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

உடன் தொடர்பு கொள்ள Lanka voice
T.P: 077 792 9475
Capital Recruitment International (Pvt) Ltd
No: 130 3/1 3rd Floor, Grand pass Rd
Colombo- 14
E-mail : - lankavoicejobs@gmail.com
L.L No: 2248

**யாழ்.நகரில் பிரபல்யமான**
**கையடக்கத் தொலைபேசி திருத்தும் பாடநெறி**
**Mobile Phone Repairing Course**

மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு

Oct-10ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 10,11,12,13 ஆகிய நான்கு தினங்களில்

- ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
- சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்
- தனிப்பட்ட கவனிப்பு
- Smart Phone கள் உட்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்.
- சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.

இலவசமாக
- இரகசியங்கள் அடங்கிய (CD) வழங்கப்படும்.
- கையேடு

Special Trainer
**Ganesh Sir**

| பாடநெறிக் கட்டணம் | பதிவுக் கட்டணம் |
|---|---|
| 10000 | 2500 |

வயதெல்லை இல்லை. ஆரம்ப அறிவு, ஆங்கிலம் தேவையற்றது

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

BTEC Hospital Road Vembadi Junction, Jaffna. 0777444225 0776131358

# இந்தியா - தென்னாபிரிக்கா மூன்றாவது ரி-20 இன்று

இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான ரி–20 ஆட்டம் இன்று இலங்கை நேரப்படி இரவு 7 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் இரண்டு ஆட்டங்களையும் கைப்பற்றிய தென்னாபிரிக்கா தொடரில் 2:0 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எதுவாக அமைந்தாலும் தென்னாபிரிக்கா வின்கைகளில் கிண்ணம் தவள்வது உறுதி. எனவே ஒரு சம்பிரதாயபூர்வமேஇன்றைய ஆட்டத்தின் நிலைப்பாடு.
(ம)



**Jaffna Central College Education Care Trust**
**யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்**

தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை

யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
- புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
- விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 2222184
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

**இலவச கணினிப்பயிற்சி**

ஐ.நா.அபிருத்தி திட்ட அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டு 2000ம் ஆண்டு முதல் ஆயிரக்கணக்கான மாணவர்கள். அரச ஊழியர்களுக்கு பயிற்சியினை வழங்கிய MCS நிறுவனம் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றியமாணவர்களிற்கு அடிப்படையிலிருந்து பட்டக்கற்கைநெறிக்கான தயார்படுத்தல் பயிற்சிகள் உள்ளடங்கலாக கணினி ஆங்கிலக் கற்கை நெறிகள், மேலும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் வேலைவாய்பினை உடைய கற்கை நெறிகளையும் வழங்க உள்ளது முதற்கட்டபயிற்சியை அடுத்து Entrance Exam இல் தேர்வு செய்யப்படுவோர் மாத்திரமே இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர்

Type Free <Name><District><DOB>& Send To 0772395895

**MCS IT CAMPUS**
34, Sir Pon Ramanthan road, near University of Jaffna
BIT-Universtity of Colombo, CIMA-UK, Engineering- USA

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பிரதேசத்துக்கு பெருமை சேர்த்த எமது " மாணவ செல்வங்களையும் " அவர்களது சாதனைக்கு உறுதுணையாக செயற்பட்ட " ஆசிரிய பெருந்தகைகளையும் " பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best Wishes

எமது பிரதேசத்தில் தன்னலமற்ற சேவையாற்றும் ஆசிரிய பெருந்தகைகளையும், விசேடமாக " பிரதீபா பிரபா " விருது பெற்ற ஆசிரியர்களையும் இந் நன்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வாழ்த்துபவர் :- யாழ். நகரில் விளையாட்டு உபகரணங்கள், இசைக்கருவிகள், பான்ட் வாத்தியங்கள் மற்றும் உடற்பயிற்சி சாதனங்களின் விற்பனை முன்னணி நிறுவனம்

**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**

இல.06, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3490, 077 80 60 267

மாணவர்களை கௌரவிப்பதற்கான பதக்கங்கள் (மெடல்ஸ்), ஆசிரியர்களுக்குரிய நினைவு கேடயங்களை விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில், நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**NEW SCIENCE HALL JAFFNA**
**COMBINED MATHS DAY CLASS - 2016 A/L**

அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன
நேரம் : 7.00 AM (Mon - Fri)

**Mr. P.Sentilnathan**

**வாழ்த்துகின்றோம்**

நாடளாவிய ரீதியில் 2015 – தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வெற்றித்தேர்வு பரீட்சை எழுதிய மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

வெற்றித்தேர்வு வெளியீட்டகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.